# 6th Tamil Questions - Part 1 [New Book]

1. தமிழ் எங்கள் அறிவுக்கு தோள் - இன்ப தமிழ் எங்கள் கவிதைக்கு வாரியத்தின் வாள்!!! என்ற பாடல் வரி இடம் பெற்றுள்ள கவிதை நூல் எது?

1] கைம்பெண் 2] பெண்கல்வி 3] **இன்பத்தமிழ்** 4] பொதுவுடைமை

2. பாவேந்தர், புரட்சி கவி என்ற சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுபவர் யார்?

1] வாணிதாசன் 2] கண்ணதாசன் 3] **பாரதிதாசன்** 4] பாரதியார்

3. தமிழே உன்னை நினைக்கும் தமிழன் என்று நெஞ்சம் இனிக்கும் இனிக்கும் என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?

1] **கவிஞர் காசி ஆனந்தன்** 2] பாரதியார்
3] வாணிதாசன் 4] நாமக்கல் கவிஞர்

4. ஒத்த ஓசையில் முடியும் சொற்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] இணை சொற்கள் 2] **இயைபு சொற்கள்**
3] ஒத்த சொற்கள் 4] நேர் இணை சொற்கள்

5. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு ........ ஆக இருக்கும்.

1] கோபம் 2] வருத்தம்
3] **அசதி** 4] மகிழ்ச்சி

6. தமிழ்க்கும்மி என்னும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

1] கொய்யாக்கனி 2] **கனிச்சாறு** 3] நூறாசிரியம் 4] பாவிய கொத்து

7. பாவலரேறு என்னும் சிறப்புப் பெயருடையவர் யார்?

1] பாரதிதாசன் 2] வாணிதாசன் 3] **பெருஞ்சித்திரனார்** 4] கவிஞர் கண்ணதாசன்

8. கனிச்சாறு நூலானது எத்தனை தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது?

1] இரண்டு 2] ஐந்து 3] **எட்டு** 4] பத்து

9. வான்தோன்றி,வளித்தோன்றி, நெருப்பு தோன்றி மண்தோன்றி - என்ற பாடல் அடிகளில் அமைந்துள்ள சொற்களை கண்டறிக.

1] **மோனை சொற்கள்** 2] எதுகை சொற்கள்
3] இணை சொற்கள் 4] இயைபு சொற்கள்

winmeen.com

10. மனித இனம் கண்டறிந்த சிறந்த கண்டுபிடிப்பாக கருதப்படுவது எது?

1] சக்கரம் 2] நாகரீகம் 3] **மொழி** 4] நெருப்பு

11] மனிதனை பிற உயிரினங்களிம் இருந்து வேறுபடுத்தியும், மேம்படுத்தியும் காட்ட உதவுவது?

1] நிறம் 2] **மொழி** 3] உருவம் 4] இனம்

12] யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழ் மொழியினை வியந்து பாடியவர் யார்?

1] திருவள்ளுவர் 2] **பாரதியார்** 3] பாரதிதாசன் 4] கம்பர்

13] தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் .......... எழுத்துகளாகவே அமைந்துள்ளது.

1] உயிரெழுத்துகள் 2] உயிர்மெய் எழுத்துகள்

3] **வலஞ்சுழி எழுத்துகள்** 4] இடஞ்சுழி எழுத்துகள்

14] தமிழென் கிழவியும் அதனோடு ரற்றே - என்ற மேற்கோளை உடைய நூல்?

1] சிலப்பதிகாரம் 2] **தொல்காப்பியம்**

3] வஞ்சிக்காண்டம் 4] புறநானுறு

15. மா- என்னும் சொல்லை குறிக்காத சொல் எது?

1] விலங்கு 2] அறிவு 3] அளவு 4] **அலர்**

**16.** உள்ளத்தை மகிழ்விக்க கூடிய தமிழ் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] செந்தமிழ் 2] இயல்தமிழ் 3] **இசைத்தமிழ்** 4] நாடகத்தமிழ்

17. வீரர் ஒருவரின் காயத்தை ஊசியால் தைத்த கதையை கூறும் நூல்?

1] புறநானுறு 2] **பதிற்றுப்பத்து** 3] நற்றிணை 4] அகநானுறு

18. திணையளவு போதாச் சிறுபுல்நீர் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

1] திருக்குறள் 2] கம்பராமாயணம்

3] **திருவள்ளுவமாலை** 4] நாலடியார்

19. தமிழ் மொழியின் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

1] 7 2] **5** 3] 8 4] 10

20. உயிரெழுத்துகள் எதனை வெளிப்படுத்தும் போது பிறக்கின்றன?

1] மூச்சனை 2] நாக்கினை 3] மொழியினை 4] **காற்றினை**

21. குறுகிய ஓசை எழுப்பாமல் நீண்டு ஒலிக்கின்ற உயிரெழுத்தை கண்டறிக.

1] அ 2] உ 3] எ 4] **ஐ**

22. வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கக்கூடிய எழுத்துகள் எவை?(ய்ர்ல்வ்ழ்ள்)

1] க்,ச் 2] ண்,ந் 3] **ர்,ல்** 4] ம்,ன்

23. ஆயுத எழுத்து ஒலிக்க எடுத்த கொள்ளும் கால அளவு எவ்வளவு?

1] ஒரு மாத்திரை 2] **அரை மாத்திரை**
3] கால் மாத்திரை 4] இரண்டு மாத்திரை

24. பழமொழியின் சிறப்பு ............ சொல்வது.

1] விரிவாக 2] **சுருங்கச்**
3] பழமையை 4] பல மொழிகளில்

25. மெய் எழுத்து பதினெட்டுடன் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் எழுத்துகள்?

1] உயிரெழுத்துகள் 2] மெய்யெழுத்துகள்
3] ஆய்த எழுத்துகள் 4] **உயிர்மெய் எழுத்துகள்**

26. Voice search என்பதன் தமிழ் பொருள் என்ன?

1] தொடுதிரை 2] தேடுபொறி 3] **குரல்தேடல்** 4] வலஞ்சுழி தேடல்

27. நோயற்ற வாழ்வினை தருவது எது?

1] உணவு 2] உடை 3] உறைவிடம் 4] **சுத்தம்**

28. அன்பன் என்ற சொல்லுக்கு ரியல் மாத்திரை அளவினை தேர்ந்தெடுக்கவும்?

1] 4 மாத்திரை 2] **3 மாத்திரை** 3] 2 மாத்திரை 4] 5 மாத்திரை

29. வன்மையாக அல்லாமல் மென்மையாக ஒலிக்க கூடிய எழுத்துகள் எவை?

1] க், ச் 2] **ங், ஞ்** 3] ட், த் 4] ப், ற்

30. மெய் என்பதன் பொருள்?

1] உண்மை 2] நன்மை 3] **உடம்பு** 4] எழுத்து

31. உயிரெழுத்துகளில் எத்தனை எழுத்து நீண்டும், எத்தனை எழுத்துக்கள் குறுகியும் ஒலிக்கும் இயல்புடையவை?

1] 5,7 2] 5,6 3] **7,5** 4] 7,6

**Note**: **(ஆஈஊஏஐஓஔ,அஇஉஎஒ)**

32. ஒலி வடிவமாகவும் வரிவடிமாகவும் பிறப்பதனை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] இலக்கணம் 2] சொல் 3] **எழுத்து** 4] அணி

33. தமிழ் பயின்ற அறிவியல் அறிஞர்களில் எந்த நபர் இஸ்ரோவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்?

1] அப்துல்கலாம் 2] மயில்சாமி அண்ணாத்துரை

3] **சிவன்** 4] தங்கத்துரை

34. சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நிரம்பினால் தைத்த செய்தியை கூறும் நூல்?

1] நன்னூல் 2] **நற்றிணை** 3] புறநானூறு 4] பதிற்றுபத்து

35. தொலைவில் தோன்றிய பொருளின் உருவத்தை அருகில் தோன்ற செய்தவர் யார்? இதனை பற்றி கூறும் நூல்?

1] கெப்ளர், திருவள்ளுவர் **2] கலீலியோ, திருவள்ளுவமாலை**

3] தாலமி, சிலப்பதிகாரம் 4] நீயூட்டன், பெரியபுராணம்

36. மழையை பற்றிய தகவல்களை விவரிக்கும் நூல்களில் தொடர்பில்லாத இணை தேர்ந்தெடுக்கவும்?

1] முல்லைப்பாட்டு, பரிபாடல் 2] பரிபாடல், திருக்குறள்

3] கார்நாற்பது,திருப்பாவை 4] **நற்றிணை, பதிற்றுப்பத்து**

37. உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்திக் நூல்?

1] **தொல்காப்பியம்** 2] கார்நாற்பது

3] பதிற்றுபத்து 4] திருக்குறள்

37. வானம் நீண்டும் தூரம் நீ வளர்ந்து வாழ - என்ற பாடல் வரிகளை எழுதியவர் யார்?

1] வைரமுத்து 2] **அறிவுமதி** 3] தாராபாரதி 4] பாலசுப்பரமணியன்

38. இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கில் இருக்கும் தமிழ் சொற்களில் இல்லாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்?

1] வேளாண்மை, உழவர் 2] பாம்பு, வெள்ளம்
3] முதலை, கோடை 4] **நிறம், பூக்கள்**

39. பொருத்துக:

| சொல். | இடம்பெற்றுள்ள நூல் |
|---|---|
| 1] மீன்,செய் | - அ. திருக்குறள், தொல்காப்பியம் |
| 2] அன்பு, உயிர், மகிழ்ச்சி | - ஆ. குறுந்தொகை |
| 3] ஒழி,முடி | - இ. பெரும்பாணாற்றுபடை |
| 4] பார் | - ஈ. தொல்காப்பியம் |

1] **ஆஅஈஇ** 2] அஆஇஈ 3] இஈஅஆ 4] அஇஈஆ

40. பொருத்துக:
1] க - அ.7
2] எ -ஆ.1
3] ரு -இ.2
4] உ - ஈ.5

1] அஆஇஈ 2] **ஆஅஈஇ** 3] இஆஅஈ 4] ஆஇஅஈ

41. கலைச்சொற்களாக பயன்படாத இணை தேர்ந்தெடுக்கவும்?
1] இணையம், முகநூல் 2] குரல்தேடல்,தேடுபொறி
3] செயலி,தொடுதிரை 4] **செய்தித்தாள், தொலைக்காட்சி**

42. தமிழ் கவிதை வடிவமாக கருதப்படாத வடிவங்கள் எவை?
1] துளிப்பா 2] புதுக்கவிதை 3] **புதினம்** 4] செய்யுள்

43. தழை என்பதன் பொருள்?
1] **மல்லி** 2] நெல்,வரகு 3] கோரை 4] ஆல்,அரசு

44. கமுகு என்பதன் தாவர இலைப்பெயர் என்ன?
1] ஓலை 2] **கூந்தல்** 3] தோகை 4] மடல்

45. பூவின் ஏழு நிலைகளில் இல்லாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்?
1] அலர் 2] செம்மல் 3] முகை 4] **மேன்மை**

46.பொருத்துக:



winmeen.com

1] இலக்கண நூல்கள் - அ.எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

2] சங்க இலக்கியம் - ஆ.தொல்காப்பியம், நன்னூல்

3] அறநூல்கள் - இ. சிலப்பதிகாரம், மணிமேகலை

4] காப்பியங்கள் - ஈ. நாலடியார், திருக்குறள்

1] **ஆஅஈஇ** 2] அஈஇஆ 3] அஇஆஈ 4] இஈஆஅ

47. தமிழென் கிழவியும் அதனோடு என்ற மேற்கோள் உடைய நூல் எது?

1] சிலப்பதிகாரம் 2] அப்பர் தேவாரம்

3] வஞ்சிகாண்டம் 4] **தொல்காப்பியம்**

48. இமிழ்கடல் வேலியை தமிழ்நாடு ஆக்கிய என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?

1] புறநானுறு 2] அப்பர் தேவாரம்

3] **வஞ்சிகாண்டம்** 4] தொல்காப்பியம்

49. என்று பிறந்தவள் என்று உணராத - என்ற பாடல் வரியை படைத்தவர்?

1] கண்ணதாசன் 2] பாரதிதாசன் 3] **பாரதியார்** 4] தாராபாரதி

50. உலகத்தில் காணப்படும் மொழிகளின் எண்ணிக்கை?

1] 3000 2] **6000** 3] 10000 4] 5000

51. பாவலரேறு நடத்திய இதழ்களில் இல்லாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்?

1] தென்மொழி 2] தமிழ்சிட்டு 3] தமிழ்நிலம் 4] **கனிச்சாறு**

52. ஆழிப்பெருக்கு என்பதன் பொருள்?

1] **கடல் கோள்** 2] கடல் அலை 3] சீரழிவு 4] உலகம்

winmeen.com

# 6th Tamil Questions - Part 2 [New Book]

1. ” திங்களை போற்றுதும் திங்களை போற்றுதும்” என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?

1] கம்பராமாயணம் 2] பெரியபுராணம்

3] **சிலப்பதிகாரம்** 4] மணிமேகலை

2. திகிரி - என்பதன் பொருள்.

1] மகரந்தம் 2] மலை 3] **ஆணைச்சக்கரம்** 4] அச்சம் தரும் கடல்

3. தேன் நிறைந்த ஆத்திமலர் மாலைக்குரியவராக கருதப்படும் மன்னன் யார்?

1] **சோழ மன்னன்** 2] பாண்டிய மன்னன்

3] சேர மன்னன் 4] கொற்கை மன்னன்

4. இளங்கோவடிகள் எந்த நூற்றாண்டை சார்ந்தவர்?

1] கி.பி. 5 நூற்றாண்டு **2] கி.பி.2 நூற்றாண்டு**

3] கி.பி. 7 நூற்றாண்டு 4] கி.பி.11 நூற்றாண்டு

5. தமிழின் முதல் காப்பியமாக கருதப்படுவது எது?

1] கம்பராமாயணம் 2] **சிலப்பதிகாரம்**

3] தொல்காப்பியம் 4] அகத்தியம்

6. பொருத்துக:

| மேற்கோள்கள் | நூல்கள் |
|---|---|
| 1] நிலம் தீ நீர் வளி | - அ.கார் நாற்பது |
| 2] கடல் நீர் முகத்த | - ஆ.தொல்காப்பியம் |
| 3] நெடு வெள்ளூசி | - இ.நற்றிணை |
| 4] கோட்சுறா எறிந்தென | - ஈ.பதிற்றுப்பத்து |

1] அஆஈஇ 2] **ஆஅஈஇ** 3] இஈஅஆ 4] அஇஆஈ

7. காணி என்பது எதனை குறிக்கும் சொல்?

1] காலிநிலம் 2] மாளிகை அடுக்குகள் 3] **நில அளவு** 4] கட்டிடம்

8. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?

1] பாரதிதாசன் 2] **சுப்பரமணியன்**

3] வாணிதாசன் 4] நாமக்கல் கவிஞர்

9. பறவைகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] **வலசை போதல்** 2] இடம் பெயர்தல்

3] நகர்தல் 4] ஊர்ந்து செல்லுதல்

10. எவற்றை அடிப்படையாகக் கொண்டு பறவைகள் இடம் பெயர்கின்றன?

1] உணவு 2] தட்பவெப்பநிலை 3] இனப்பெருக்கம் 4] **புவிஈர்ப்பு புலம்**

11. சிறகடிக்காமல் கடலை தாண்டி பறக்கும் பறவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] கப்பல் பறவை 2] கப்பல் கூழைக்கடா

3] கடற்கொள்ளை பறவை 4] **மேற்கூறிய அனைத்தும்**

12. நாராய் நாராய் செங்கால் நாராய் - என்னும் பாடல் யாருடைய படைப்பு?

1] திருவள்ளுவர் 2] அகத்தியர்

3] **சமுத்திர புலவர்** 4] உடுமலை நாரயாணக்கவி

13. ………… பகுதியில் இருந்து தமிழகத்திற்கு செங்கால் நாரைகள் வருவது தற்போதைய ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.

1] ஆசியா 2] ஆப்பிரிக்கா 3] **ஐரோப்பா** 4] அமெரிக்கா

14. நமது நாட்டில் வெகுவாக அழிந்து வரும் உயிரினம் எது?

1] சிங்கம் 2] பாம்பு 3] புறா 4] **சிட்டுக் குருவி**

15. பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள் வரை வாழும் உயிரினம் எது?

1] பாம்பு 2] மயில் 3] **சிட்டு குருவி** 4] தவளை

16. இந்தியாவின் பறவை மனிதர் என்று அழைக்கப்படுபவர் யார்?

1] **டாக்டர் சலீம் அலி** 2] டாக்டர் முகமது அலி

3] டாக்டர் சலீம் கான் 4] டாக்டர் ஜின்னா

17. உலக சிட்டுக்குருவி தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

1] மார்ச் 5 2] மார்ச் 22 3] **மார்ச் 20** 4] மார்ச் 16

18. பறவைகள் பற்றிய படிப்பானது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] ஆர்க்கியாலஜி
2] ஆர்த்தோபயாலஜி
**3] ஆர்னித்தாலஜி**
4] சைக்காலஜி

19. கிழவனும் கடலும் என்ற புதினம் எந்த மொழியில் இருந்து தமிழில் மொழிப்பெயர்க்கபட்டுள்ளது?
1] லத்தீன்
**2] ஆங்கிலம்**
3] பிரெஞ்சு
4] கிரேக்கம்

20. கிழவனும் கடலும் என்ற நூலானது எந்த வருடம் நோபல் பரிசை பெற்றது?
1] 1967
2] 1956
**3] 1954**
4] 1968

21. எழுத்துகள் எத்தனை வகைப்படும்?
1] 5
2] 3
**3] 2**
4] 7

22. பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக கருதப்படாத எழுத்துகள் …….. ஆகும்.
1] முதல் எழுத்து
2] உயிர் எழுத்து
3] மெய்யெழுத்து
4] **சார்பு எழுத்து**

23. தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்கு பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்று சொல்லின் இடையில் மட்டும் வரும் எழுத்துக்கள் எவ்வாறு வழங்கப்படுகிறது?
1] உயிர் எழுத்து
2] மெய்யெழுத்து
3] **ஆய்த எழுத்து**
4] சார்பு எழுத்து

24. உலகப்பொதுமறை என்று போற்றப்படும் நூல் எது?
1] திருக்குறள்
2] நான்மறை
3] வாயுறை வாழ்த்து
4] **மேற்கூறிய அனைத்தும்**

25. கீழ்கண்டவற்றுள் திருவள்ளுவரின் சிறப்பு பெயராக கருதப்படாதது எது?
1] தெய்வப்புலவர்
2] பொய்யில் புலவர்
3] செந்நாபோதர்
4] **கல்வியில் சிறந்தவர்**

26. 2016ம் ஆண்டு எந்த நகரில் மாற்று திறனாளிகள் ஒலிம்பிக் போட்டிகள் நடைப்பெற்றது?
1] கனடா
2] **ரியோ**
3] போர்ச்சுகல்
4] ஸ்வீடன்

27. சோழ மன்னன் எதனை போற்றுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார்?

1] வெண்ணிலவு 2] கதிரவன் 3] மாமழை 4] **மேற்கூறிய அனைத்தும்**

28 .சிலப்பதிகாரத்தின் சிறப்பு பெயராக கருதப்படாதது எது?

1] முதல் காப்பியம் 2] முத்தமிழ் காப்பியம்

3] குடிமக்கள் காப்பியம் 4] **பொதுமறை காப்பியம்**

29. கழுத்தில் சூடுவது ……..?

1] **தார்** 2] கணையாழி 3] தண்டை 4] மேகலை

30] கதிரவனின் மற்றொரு பெயராக கருதப்படுவது எது?

1] புதன் 2] **ஞாயிறு** 3] சந்திரன் 4] செவ்வாய்

31. அவன்+அளிப்போல் என்பதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?

1] அவன் அளிப்போல் 2] **அவனளிபோல்**

3] அவன்வளிப்போல் 4] அவனாளிபோல்

32. பாரதி என்னும் பட்டம் பாரதியாருக்கு வழங்கியவர் யார்?

1] முதலாம் குலோத்துங்கன் 2] இரண்டாம் குலோத்துங்கன்

3] **எட்டயபுரமன்னன்** 4] சுப்பரதீப கவிராயர்

33. சித்தம் என்பதன் பொருள்?

1] மனம் 2] **உள்ளம்** 3] சிந்தனை 4] உருவம்

34. மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் தனது பாடல்கள் வழியாக பாடுப்பட்டவர்?

1] பாரதிதாசன் 2] வாணிதாசன்

3] நாமக்கல் கவிஞர் 4] **பாரதியார்**

35. கீழே கொடுக்கப்பட்டவைகளுள் பாரதியார் இயற்றிய நூல்களாக கருதப்படாதது எது?

1] பாஞ்சாலி சபதம் 2] கண்ணன் பாட்டு 3] குயில் பாட்டு **4] ஞானரதம்**

36. கிணறு என்பதனை குறிக்கும் சொல் எது?

1] ஏரி **2] கேணி** 3] குளம் 4] ஆறு

37. பொருத்துக:

1] முத்துச்சுடர் – அ.மாடங்கள்

2] தூய நிறம் – ஆ.தென்றல்

3] சித்தம் மகிழ்ந்திட – இ.நிலா ஒளி

1] **இஅஆ** **2]** ஆஅஇ 3] அஆஇ 4] அஇஆ

38. வலசையின் போது உடலில் ஏற்படும் மாற்றங்கள் எவை?

1] இறகு நிறம் மாறுதல் 2] தலையில் சிறகு வளர்தல்

3] உடலில் கற்றையாக முடி வளர்தல் 4] **மேற்க்கூறிய அனைத்தும்**

39. கப்பல் பறவை எத்தனை கிலோமீட்டர் வரை கீழே இறங்காமல் பறக்கும்?

1] 300 கிலோ மீட்டர் 2] 200 கிலோ மீட்டர்

**3] 400 கிலோ மீட்டர்** 4] 500 கிலோ மீட்டர்

40. தென் திசைக் குமரி ஆடி வடத்திசைக்கு ஏகுவீர் ஆயின் என்னும் பாடல் வரிகளை எழுதியவர் யார்?

1] பாரதியார் 2] பாரதிதாசன்

**3] சமுத்திர புலவர்** 4] ஒட்டக்கூத்தர்

41. உலகிலேயே நெடுந்தொலைவு பயணம் செய்யும் பறவையினம் எது?

1] சிட்டு குருவி **2] ஆர்டிக் ஆலா**

3] மஞ்சள் சிட்டு 4] கழுகு

42. சிட்டு குருவிகள் வாழா முடியாத பகுதி எது?

1] **துருவப்பகுதி** 2] இமயமலை 3] இந்தியா 4] தமிழ்நாடு

43. கிழவனும் கடலும் என்ற நூலை படைத்தவர் யார்?

1] ஜான் பார்கின்ஜி 2] ஜான் பனியன்’

**3] எர்னெஸ்ட் ஹெமிங்வே** 4] ஜான் கெல்லர்

44. கிழவனும் கடலும் என்ற கதையானது எதனை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டது?

1] கடல் வாழ் உயிரினங்கள்

2] பேரனும் தாத்தாவை பற்றியது

**3] இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போரட்டம்**

4] மனிதர்களிடையே நடக்கும் கலவரங்கள்

45. கிழவனோடு கடலுக்கு மீன் பிடிக்க சென்ற சிறுஅனின் பெயர் என்ன?

1] சாண்டியாகோ **2] மனோலின்** 3] எர்னெஸ்ட் 4] ஹெனிங்

46. மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் தோன்றும் எழுத்துகள்?
1] முதல் எழுத்து 2] ஆய்த எழுத்து
3] உயிரெழுத்து **4] உயிர்மெய் எழுத்து**

47. சார்பு எழுத்து எத்தனை வகைப்படும்?
1] எட்டு வகை **2] பத்து வகை**
3] ஐந்து வகை 4] ஆறு வகை

48. வரி வடிவம் மெய்யெழுத்தை ஒத்தும், ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்தும் காணப்படும் எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1] முதல் எழுத்து 2] சார்பு எழுத்து
**3] உயிர்மெய் எழுத்து** 4] ஆய்தெழுத்து

49. நுட்பமான ஒலிப்பு முறை உடைய எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1] உயிர் எழுத்து 2] முதல் எழுத்து
**3] ஆய்த எழுத்து** 4] சார்பு எழுத்து

50. ஆய்த எழுத்தின் வேறு பெயர்கள் எவை?
1] முப்புள்ளி 2] முப்பாற்புள்ளி 3] தனிநிலை **4] மேற்கூறிய அனைத்தும்**

51. முதல் எழுத்துகளாகிய உயிரையும் மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆயுத எழுத்து …………………… ஆகும்.
1] முதல் எழுத்து 2] சார்பெழுத்து 3] மெய்யெழுத்து **4] உயிர்மெய் எழுத்து**

52. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது எது?
1] ஊக்கமின்மை **2] அறிவுடைய மக்கள்** 3] வன்சொல் 4] சிறிய செயல்

53. ஒருவருக்கு சிறந்த அணி?
1] மாலை 2] காதணி **3] இன்சொல்** 4] வன்சொல்

54. எந்த ஆண்டு ரியோ நகரில் மாற்று திறனாளிகளின் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது?
1] 2010 **2] 2016** 3] 2018 4] 2017

# 6th Tamil Questions - Part 3 [New Book]

1. புதிய ஆத்திச்சூடியை படைத்தவர் யார்?
   1] ஔவையார் **2] பாரதியார்** 3] நெல்லை முத்து 4] பாரதிதாசன்

2. அறிவியல் ஆத்திச்சூடி என்ற நூலை எழுதியவர் யார்?
   1] பாரதியார் 2] ஔவையார் 3] பாரதியார் **4] நெல்லை முத்து**

3. ஔடதம் என்பதன் பொருள்?
   1] அனுபவம் 2] **மருந்து** 3] நோய் 4] முதியோர் சொல்

4. ஒத்த அலைநீளத்தில் சிந்திப்பவர் என்று நெல்லை முத்துவை பாராட்டியவர் யார்?
   1] **அப்துல் கலாம்** 2] தாராபாரதி 3] சிவன் 4] கல்யாண சுந்தரம்

5. நெல்லை முத்துவால் படைக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை எத்தனை?
   1] 60 2] **80** 3] 100 4] 120

6. கீழே கொடுக்கப்பட்டவைகளில் நெல்லை முத்து அவர்கள் பணியாற்றாத இடத்தை தேர்ந்தெடுக்க?
   1] விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் 2] சதீஷ்தவான் விண்வெளி மையம்
   3] இந்திய விண்வெளி மையம் 4] **இஸ்ரோ விண்வெளி மையம்**

7. உடல் நோய்க்கு ……………… தேவை?
   1] உணவு 2] **ஔடதம்** 3] இனிப்பு 4] உடை

8. நண்பர்களுடன் ………………. விளையாடு.
   1] **ஒருமித்து** 2] மாறுபட்டு 3] தனித்து 4] பகைத்து

9. எதிர் சொற்களைப் பொருத்துக.
   1.அணுகு – அ.தெளிவு
   2.ஐயம் – ஆ.சோர்வு
   3.ஊக்கம் – இ.பொய்மை
   4.உண்மை – ஈ.விலகு
   1] **ஈஅஆஇ** 2] ஆஅஈஇ 3] அஇஈஆ 4] அஆஇஈ



winmeen.com

10. ‘சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் சந்தி தெருப்பெருக்கம்’ என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?

1] பாரதிதாசன் 2] **மகாகவி பாரதியார்**

3] வாணிதாசன் 4] நாராயணக்கவி

11. வானில் செலுத்தப்படும் செயற்கைக்கோளால் மனிதன் அடையும் பயன் யாது?

1] செய்தி தொடர்பு தகவல்கள் 2] இயற்கை வளத்திற்குரிய தகவல்கள்

3] மழை,புயல் தகவல்கள் 4] **மேற்கூறிய அனைத்தும்**

12. இல்லாது+இயங்கும் என்பதனை சேர்த்து எழுத கிடைப்பது?

1] இல்லாதுஇயங்கும் 2] இல்லாஇயங்கும்

3] **இல்லாதியங்கும்** 4] இல்லதியங்கும்

13. ‘உறுப்பை மாற்றும் மருத்துவம் கண்டு
உடலும் உயிரும் காக்கின்றான்’ கொடுக்கப்பட்டவைகளில் மோனை சொற்களை எடுத்து எழுதுக?

1] **உடலும்,உயிரும்** 2] உறுப்பை,உடலும்

3] மாற்றும்,மருத்துவம் 4] உறுப்பை,உடலும் உயிரும்

14. எந்திரங்கள் பணியாற்றும் இடங்களாக கருதப்படும் இடங்கள் எவை?

1] வீடு மற்றும் அலுவலகம் 2] தொழிற்ச்சாலை

3] மருத்துவமனை 4] **மேற்கூறிய அனைத்தும்**

15. ரோபோ என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்?

1] **கபெக்** 2] கேரிகேஸ் 3] சோபியா 4] ஜரிஸ்

16. காரல் கபெக் எந்த நாட்டை சார்ந்தவர்?

1] ஸ்வீடன் 2] பிரான்ஸ் 3] **செக்** 4] ஜப்பான்

17. ரோபோ என்னும் சொல்லை பயன்படுத்திய ஆண்டு?

1] 1930 2] **1920** 3] 1942 4] 1928

18. ரோபோ என்னும் சொல்லுக்கு என்ன பொருள்?

1] எந்திர மனிதன் 2] எந்திர கருவி 3] **அடிமை** 4] வேலையாள்

19. நுட்பமான கடினமான ஒரே மாதிரியான வேலைகளை மனிதரைவிட விரைவாக தானே செய்து முடிக்கும் எந்திரம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] **தானியங்குகள்** 2] எந்திர மனிதன் 3] இரும்பு மனிதன் 4] ரோபோக்கள்

20. உலகிலேயே முதன் முதலாக எந்த நாட்டின் ரோபோவுக்கு குடியுரிமை வழங்கியுள்ளது?

1] கொரியா 2] **சவுதி அரேபியா** 3] அமெரிக்கா 4] ஜப்பான்

20. சூழ்நிலைகளை உணர்வதற்காக தானியங்களில் பொருத்தப்படும் சிறப்பு கருவியின் பெயர் என்ன?

1] எந்திர கைகள் 2] எந்திர மூக்கு 3] **நுண் உணர்வு கருவிகள்** 4] எந்திர கால்கள்

21. தானியங்கிகள் செய்யப்படும் வேலைகளாக கருதப்படுவது எவை?

1] தொழிற்சாலை பணிகள் 2] மருத்துவதுறை பணிகள்

3] விண்வெளி சார்ந்த பணிகள் 4] **மேற்கூறிய அனைத்தும்**

22. டீப் புளூவே என்னும் மீத்திறன் கணினி எந்த ஆண்டு எந்த போட்டியில் கேரி கேஸ்புரோவ் என்பவரை தோல்வியடைய செய்தது?

1] 1995, டென்னிஸ் 2] 1990, பேட்மிட்ன்

3] **1997, சதுரங்கம்** 4] 1998, டேபிள், டென்னிஸ்

23. குடியுரிமை பெற்ற ரோபோவின் பெயர் என்ன?

1] **சோபியா** 2] ஜரிஸ் 3] ஸ்பீடு ரோபோ 4] சந்தியா

24. புதுமைகளின் வெற்றியாளர் என்ற விருதினை சோபியாவிற்கு வழங்கிய நிறுவனம் எது?

1] உலக சுகாதார மையம் 2] **ஐக்கிய நாடுகளின் சபை**

3] உலக எந்திரங்களின் தலைமையகம் 4] ஐக்கிய அரபு நாடுகள்

25. நீக்குதல் மற்றும் எளிது என்ற சொற்களின் எதிர் சொற்கள் எவை?

1] போக்குதல், வறிது 2] தள்ளுதல், சிறிது

3] அழித்தல், பெரிது 4] **சேர்த்தல், அரிது**

26. லிலியன் வாட்சன் எழுதிய நூலின் பெயர் என்ன?

1] விளக்குகளின் ஒளி 2] விளக்குகள் தந்த ஒளி

3] **விளக்குகள் பல தந்த ஒளி** 4] விளக்கு ஒளி

winmeen.com

27. செயற்கையாக உருவாக்கப்படும் செயற்கை காலின் அளவு என்ன?

1] 200 கிராம் 2] **300 கிராம்** 3] 500 கிராம் 4] 600 கிராம்

28. இந்தியாவின் வெற்றிகளாக அப்துல்கலாம் ஐயா கருதுவது?

1] உணவு உற்பத்தி 2] மின்சாரம் உற்பத்தி

3] தகவல் தொழில்நுட்பத்துறை 4] **மேற்கூறிய அனைத்தும்.**

29. எத்தனை கிலோ மதிப்புள்ள செயற்கை கோளை விண்ணிற்கு இந்தியா அனுப்பியுள்ளது?

1] 550 கிலோ 2] 380 கிலோ 3] 420 கிலோ 4] **525 கிலோ**

30. சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை …………………… என்பர்.

1] மொழி எழுத்துகள் 2] சொல் எழுத்துகள்

3] **மொழி முதல் எழுத்துகள்** 4] முதல் எழுத்துகள்

31. சொல்லின் முதலில் வராத எழுத்துகள் எது?

1] **மெய்யெழுத்து** 2] உயிரெழுத்து

3] முதல் எழுத்து 4] உயிர்மெய் எழுத்து

32. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எந்த எழுத்துகள் சொல்லின் முதலில் வரும்?

1] ட,ண,ர 2] ல,ழ,ள 3] ற,ன, 4] **க,ச,த**

33. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எந்த எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும்?

1] ஞ்,ண்,ந் 2] ம்,ய்,ர் 3] ல்,வ்,ழ் 4] **மேற்கூறிய அனைத்தும்**

34. சொல்லின் இறுதியில் ……………. தனித்து வருவதில்லை.

1] **உயிர் எழுத்துகள்** 2] மெய்யெழுத்துகள்

3] ஆய்த எழுத்து 4] மேற்கூறிய எதுவுமில்லை.

35. உயிர் எழுத்துகள் மெய்யெழுத்துகளுடன் இணைந்து …………………… மட்டுமே வரும்.

1] உயிர் எழுத்தாக 2] மெய்யெழுத்தாக

3] **உயிர்மெய்யெழுத்தாக** 4] சார்பெழுத்தாக

36. உயிர் மெய் எழுத்துகளுள் ……………. எந்த எழுத்து வரிசை சொல்லின் இறுதியில் வராது.

1] ந வரிசை 2] ண வரிசை 3] **ங வரிசை** 4] க வரிசை

37. சொல்லின் இடையில் வராத சொற்கள் எவை?

1] மெய்யெழுத்துகள் 2] உயிர்மெய் எழுத்துகள்
3] ஆய்த எழுத்துகள் 4] **மேற்கூறிய எதுவும் இல்லை**

38. எந்த இடத்தில் மட்டும் உயிர் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்?
1] **அளபெடை** 2] குற்றியலுகரம் 3] குற்றியலிகரம் 4] சொற்றொடர்

39. சர்.சி.வி.ராமன் எந்த ஆண்டு இங்கிலாந்து சென்றார்?
1] **1921** 2] 1930 3] 1942 4] 1928

40. ராமன் விளைவு எந்த ஆண்டு எந்த தினம் வெளியிடப்பட்டது?
1] **1928 பிப்ரவரி 28 நாள்** 2] 1928 பிப்ரவரி 30 நாள்
3] 1928 பிப்ரவரி 15 நாள் 4] 1928 பிப்ரவரி 20 நாள்

41. இந்திய அறிவியலுக்கான முதல் நோபல் பரிசை பெற்றவர் யார்?
1] **சர்.சி.வி ராமன்** 2] ஜான் பெக்ரால்
3] நியூட்டன் 4] கலிலீயோ

42. தேசிய அறிவியல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
1] பிப்ரவரி 25 2] **பிப்ரவரி 28**
3] பிப்ரவரி 22 4] பிப்ரவரி 23

winmeen.com

# 6th Tamil Questions - Part 4 [New Book]

## Term - 2

1. “மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன்” – என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?

1] **ஔவையார்** 2] பாரதியார் 3] பாரதிதாசன் 4] கம்பர்

2. மூதுரை நூலில் காணப்படும் பாடல்களின் எண்ணிக்கை எவ்வளவு?

1] 80 பாடல்கள் 2] 50 பாடல்கள் 3] **31 பாடல்கள்** 4] 43 பாடல்கள்

3. மூதுரை என்னும் சொல்லுக்கு என்ன பொருள்?

1] மூத்தோர் சொல் 2] மூத்தோரின் பழமொழி

3] **மூத்தோர் கூறும் அறிவுரை** 4] மன்னரது சிறப்பு பெயர்

4. மூதுரை பாடலில் மன்னனைவிட சிறந்தவராக ஔவையார் யாரைக் குறிப்பிடுகிறார்?

1] இளவரசர் 2] தளபதிகள் 3] **கல்வி கற்றவர்கள்** 4] மக்கள்

5. சீர்தூக்கின் என்பதன் பொருளை கண்டறிக?

1] **ஒப்பிட்டு ஆராய்ந்து** 2] அளிக்கப்படும் பொருள்

3] பொருள்களை தூக்குதல் 4] ஆராயமல் சரிபார்த்தல்

6. மாணவர்கள் நூல்களை ………………… கற்க வேண்டும்.

1] மேலோட்டமாக 2] **மாசற** 3] மாசுற 4] மயக்கமுற

7. மாசற என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது?

1] மாச+அற 2] **மாசு+அற** 3] மாச+உற 4] மாசு+உற

8. பொருத்துக:

1. மாற்றார் - அ. வழி
2. தூற்றும்படி - ஆ. மற்றவர்
3. வற்றாமல் - இ. இகழும்படி
4. நெறி - ஈ. அழியாமல்

1] அ இ ஈ ஆ 2] **ஆ இ ஈ அ** 3] ஈ இ அ ஆ 4] அ ஆ ஈ இ

9. பிறருடன் ............ வழக்கம் இருந்தால் அதை விட்டுவிட வேண்டும் என்று பாடல் ஆசிரியர் கல்யாண சுந்தரம் வலியுறுத்துவது எது?

1] அதிகமாக பேசுதல் 2] **வம்பு செய்தல்**

3] அரட்டை அடித்தல் 4] பண்பு நெறி மாறுதல்

10. எளிய தமிழில் சமூக சீர்த்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர் யார்?

1] பாரதியார் 2] நாமக்கல் கவிஞர்

3] **கல்யாண சுந்தரம்** 4] நாரணயக்கவி

11. மக்கள் கவிஞர் என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படுவர் யார்?

1] கண்ணதாசன் 2] **கல்யாண சுந்தரம்** 3] வாணிதாசன் 4] பாரதிதாசன்

12. தமது பாடல்களின் வாயிலாக உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர் யார்?

1] திரு.வி.க 2] பாரதியார் 3] தாராபாரதி 4] **கல்யாண சுந்தரம்**

13. மாணவர் பிறர் ....................... நடக்கக் கூடாது.

1] போற்றும்படி 2] **தூற்றும்படி** 3] பார்க்கும்படி 4] வியக்கும்படி

14. நாம் ..................... சொல்படி நடக்க வேண்டும்.

1] இளையோர் 2] ஊரார் 3] **மூத்தோர்** 4] வழிப்போக்கர்

15. 'கல்வி கண் திறந்தவர்' என்று காமராசரை மனதார பாரட்டியவர் யார்?

1] **பெரியார்** 2] அண்ணா 3] எம்.ஜி.ஆர் 4] அம்பேத்கார்

16. பின்வருவனற்றுள் சரியானது எது/எவை?

i] காமராசர் கறுப்பு காந்தி என்று அழைக்கப்படுகிறார்.

ii] காமராசர் பெண்கல்விக்கு வித்திட்டார்.

iii] காமராசர் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.

iv] காமராசர் பல கிளை நூலகங்களைத் தொடங்கினார்.

1] i, ii, iii சரி 2] **i, iii, iv** சரி 3] iv, ii, i சரி 4] ii, iii, iv சரி

17. மாநில முழுக்க அனைவருக்கும் ........................க்கான சட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மேலும் மாணவர்கள் பசியின்றிப் படிக்க ........................ திட்டத்தினைக் கொண்டு வந்தார்.

1] அடிப்படை கல்வி, மதிய உணவு 2] **இலவசக் கட்டாய கல்வி, மதிய உணவு**

3] இலவச கல்வி, மதிய உணவு 4] கட்டாய கல்வி, மதிய உணவு

18. காமராசர் பள்ளிகளில் குழந்தைகள் ஏற்றத்தாழ்வின்றிக் கல்வி கற்கச் ................ திட்டத்தை அறிமுகம் செய்தார்.

1] அடிப்படை கல்வி 2] **சீருடைத்**

3] இலவசக் கட்டாயக் கல்வி 4] மதிய உணவு திட்டத்தைனைத்

19. மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்காக, காமராசரால் நிறுவப்பட்ட கல்லூரிகள் எது/எவை?

1] பொறியியல் கல்லூரி

2] மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி

3] ஆரிசியப் பயிற்சி நிறுவனம்

4] **மேற்கூறிய அனைத்தும்**

20. கல்வி புரட்சிக்கு வித்திட்டவர் என்ற சிறப்பு பெயரினை உடையவர் யார்?

1] தந்தை பெரியார் 2] **கர்ம வீரர்** 3] அம்பேத்கார் 4] அண்ணா

21. நடுவண் அரசு காமராசருக்கு எந்த ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கி சிறப்பித்தது?

1] 1970 2] **1976** 3] 1980 4] 1975

22. காமராசர் வாழ்ந்த ........................ இல்லம் மற்றும் .................. இல்லம் ஆகியன அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லங்களாக மாற்றப்பட்டன.

1] விருதுநகர் மற்றும் மதுரை 2] மதுரை மற்றும் சென்னை

3] **சென்னை மற்றும் விருதுநகர்** 4] விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி

23. ............................. பகுதியில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

1] கோயம்புத்தூர் 2] மும்பை

3] கொல்கத்தா 4] **சென்னை**

24. காமராசருக்கு மணிமண்டபம் எந்த தேதியில் எந்த ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது?

1] **02-10-2000** 2] 05-10-2001

3] 08-10-2000 4] 09-10-2001

25. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் ?

1] ஆடு மேய்க்க ஆள் இல்லை 2] **ஊரில் பள்ளிகூடம் இல்லை**

3] வழி தெரியவில்லை 4] பேருந்து வசதியில்லை

26. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?
1] **காட்டாறு** 2] காடாறு
3] காட்டு ஆறு 4] காடு ஆறு

27. ஆசியக்கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் எங்கு அமைந்துள்ளது?
1] கொல்கத்தா 2] மும்பை
3] **சென்னை** 4] அலகாபாத்

28. அண்ணா நூற்றாண்டு நூலகம் ................ அடுக்குகளை கொண்டது. இந்த நூலகம் எத்தனை பரப்பளவில் அமைந்துள்ளது.
1] எட்டு, பத்து 2] ஏழு, எட்டு
3] **எட்டு, எட்டு** 4] ஆறு, ஏழு

29. ஆசியா கண்டத்திலேயே மிகப்பெரிய நூலகம் ................... உள்ளது.
1] மும்பையில் 2] கொல்கத்தாவில்
3] **சீனாவில்** 4] சென்னையில்

30. 'இந்திய நூலக அறிவியலின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் யார்?
1] **அரங்கநாதன்** 2] வேணு கோபல்
3] ஜவகர்லால் நேரு 4] அம்பேத்கார்

31. ...................... தளத்தில் பார்வைத் திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது. அவர்கள் தொட்டுப் பார்த்து படிப்பதற்கான ................... நூல்கள் உள்ளன.
1] இரண்டாம், பிரெய்லி 2] மூன்றாம், சுவடுகள்
3] **தரைத், பிரெய்லி** 4] முதல், சுவடுகள்

32. குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் படிப்பதற்காக ............... ஒன்று முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
1] நூலகம் 2] விளையாட்டு கூடம்
3] **செயற்கை மரம்** 4] அழகான குடில்

33. நூலகத்தின் செயற்கை மரம் அமைந்துள்ள பகுதியில் .................... மேற்ப்பட்ட .......................... குழந்தைகளுக்காகச் சேகரித்து வைக்கப்பட்டு உள்ளன.

1] நூற்றுக்கும், நூல்கள்
2] நூற்றுக்கும், பல்லூடகக் குறுந்தகடுகள்
3] ஆயிரத்திற்கும், நூல்கள்
4] **ஆயிரத்திற்கும், பல்லூடகக் குறுந்தகடுகள்**

34. அண்ணா நூலகத்தில் …………………… தளத்தில் ஓலைச்சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

1] ஆறாம் 2] **ஏழாம்** 3] மூன்றாம் 4] நான்காம்

35. அண்ணா நூலகத்தின் ஏழாம் தளத்தில் எந்த நூல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது?

1] வரலாறு நூல்கள்
2] புவியியல் நூல்கள்
3] சுற்றுலா நூல்கள்
4] **மேற்கூறிய அனைத்தும்**

36. பொருத்துக:

| அண்ணா நூலகத்தின் தளங்கள் | நூல்கள் |
|---|---|
| 1.இரண்டாம் தளம் | - கணிதம், அறிவியல், மருத்துவம் |
| 2.ஐந்தாம் தளம் | - தமிழ் நூல்கள் |
| 3.மூன்றாம் தளம் | - பொருளியில், சட்டம், வணிகவியல், கல்வி |
| 4.நான்காம் தளம் | - கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள் |

1] **ஆ அ ஈ இ** 2] அ ஆ ஈ இ 3] இ ஈ அ ஆ 4] அ இ ஈ ஆ

37. அனைத்துத் துறை சார்ந்த தரமான …………………… மற்றும் …………… அண்ணா நூலகத்தின் ஏழாம் தளத்தில் அமைந்துள்ளது.

1] **மின் இதழ்கள், மின்நூல்கள்**
2] மின்நூல்கள், வரலாற்று சுவடுகள்
3] தொழில் நுட்ப நூல்கள், மின் இதழ்கள்
4] குறிப்பேடுகள், சுவடுகள்

38. அண்ணா நூலகத்தின் நிர்வாக பிரிவு எந்த தளத்தில் அமைந்துள்ளது?

1] முதல் தளம் 2] **எட்டாம் தளம்** 3] ஆறாம் தளம் 4] ஏழாம் தளம்

39. கீழே கொடுக்கப்பட்டவைகளை கவனி:

நூலகத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, உயர்ந்த நிலையை அடைந்ததவர்கள்

i] அண்ணா, நேரு, அம்பேத்கர்,
ii] காரல் மார்க்ஸ், லெனின்
iii] காந்தி,விவேகானந்தர்
iv] நேதாஜி,பட்டேல்

1] **i, ii சரி** 2] ii, iv சரி 3] ii, iii சரி 4] மேற்கூறிய அனைத்தும் சரி

winmeen.com

40. நூலகத்தின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக நூலகம் இல்லாத ஊரில் தமிழக அரசு ……………………… திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

1] கிளை நூலகம் 2] **நடமாடும் நூலகம்**

3] மாவட்ட நூலகம் 4] துணை நூலகம்

41. சிறந்த நூலகர்களுக்கு வழங்கப்படும் விருதின் பெயர்?

1] பத்ம பூசன் விருது 2] ஞானபீட விருது

3] சாகித்திய அகாதமி விருது 4] **டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது**

42. கூற்று: இன எழுத்துக்களுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு.

காரணம்: சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

1] கூற்று சரி, காரணம் தவறு

2] கூற்றுக்கு சரியான காரணம்

3] கூற்று தவறு காரணம் சரி

4] **இரண்டு சரி ஆனால் கூற்றுக்கு சரியான காரணம் அல்ல**

43. ஆறு வல்லின மெய்யெழுத்துகளும், ஆறு மெல்லின எழுத்துகளும் ……………………… எழுத்துகளாகும்.

1] மெய்யெழுத்துகள் 2] உயிர் எழுத்துகள்

3] **இன எழுத்துகள்** 4] உயிர்மெய் எழுத்துகள்

[குறிப்பு: வல்லின மெய்யெழுத்துகள் : க்,ச்,ட்,த்,ப்,ற்

மெல்லின மெய்யெழுத்துகள் : ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்

மெல்லின மெய்யெழுத்துகள் : ய்,ர்,ல்,வ்,ழ்,ள்]

44. ………………………… எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும்.

1] **உயிர் எழுத்துகள்** 2] மெய்யெழுத்துகள்

3] நெடில் எழுத்துகள் 4] குறில் எழுத்துகள்

45. குறில் இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு …………. என்பது அதன் இன எழுத்தாகும்.

1] ஒ 2] ஈ 3] **இ** 4] ஓ

46. குறில் நெடில் இல்லாத ஔ என்னும் எழுத்துக்கு .............. என்பது அதன் இன எழுத்தாகும்.

1] **உ** 2] ஒ 3] ஊ 4] ஓ

47. ................................ மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

1] உயிர் எழுத்துகளில் 2] மெய்யெழுத்துகளில்

3] சார்பு எழுத்துகளில் 4] **அளபெடையில்**

[குறிப்பு: அளபெடை சொற்கள்: ஓஒதல், தழீஇ. மேலும் சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவதில்லை. அதேபோல தமிழில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்துகள் இல்லை.]

48. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

1] மஞ்சள் 2] வந்தான் 3] **கல்வி** 4] தம்பி

49. விடுபட்ட சொற்களை கண்டறிக:

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்

............................ ............................ ........................

1] சாந்தணையும் கல்லா வாறு 2] **சாந்துணையும் கல்லாத வாறு**

3] சாந்தணையும் கல்லாத வாறு 4] சாந்துணையும் கல்லா வாறு

50. ஆற்றுஉணா வேண்டுவது இல் – என்ற பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

1] நாலடியார் 2] நான்மணிக்கடிகை

3] **பழமொழி நானூறு** 4] திருக்குறள்

51. இரு பொருள் தர இயலாத சொற்களை தேர்தெடுக்க:

1] மாலை 2] நூல் 3] ஆறு 4] **காலை**

52. பொருத்துக:

| தலைவர்கள் | அவர்களின் பிறந்த நாள் |
|---|---|
| 1.காமராசர் | - அ.மாணவர் தினம் |
| 2.இராதாகிருஷ்ணன் | - ஆ.குழந்தைகள் தினம் |
| 3.விவேகானந்தர் | - இ.கல்வி வளர்ச்சி நாள் |
| 4.அப்துல்கலாம் | - ஈ.ஆசிரியர் தினம் |
| 5.ஜவகர்லால் நேரு | – உ.தேசிய இளைஞர் தினம் |

1] **இ ஈ உ அ ஆ** 2] ஈ அ ஆ உ இ 3] ஆ இ ஈ உ அ 4] உ ஈ அ இ ஆ

53. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் ……………………..?

1] பெற்றோர் 2] **சிறுவன், சிறுமி** 3] மக்கள் 4] ஆசிரியர்கள்

54. முறை மாறியுள்ள சொற்களை சரியாக பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.

1.விளையும் முளையிலே பயிர் தெரியும்

2.பயிர் தெரியும் விளையும் முளையிலே

3.தெரியும் பயிர் முளையிலே விளையும்

4.விளையும் பயிர் முளையிலே தெரியும்

1] 1 சரி 2] 3 சரி 3] **4 சரி** 4] 2 சரி

55. பொருந்தாத இணையினை தேர்ந்தெடுக்கவும்

1.நூலகம் - Library

2.மின்படிக்கட்டு - Lift

3.மின் இதழ்கள் - E-Magazine

4.தொடக்கப் பள்ளி - Primary school

1] 1 2] 4 3] 3 4] **2**

56. ஔவையார் இயற்றிய நூல்களில் இல்லாத ஒன்றை தேர்ந்தெடுக்க?

1] மூதுரை 2] **நாலடியார்** 3] ஆத்திச்சூடி 4] நல்வழி

57. மாசற என்பதன் பொருள்?

1] மாசு நிறைந்த 2] மாசுடன் கூடிய 3] **குறையில்லாமல்** 4] குற்றமற்ற

58. கீழே கொடுக்கப்பட்டவர்களுள் சமூக கருத்துகளை வலியுறுத்தி பாடியுள்ளவர் யார்?

1] பெருஞ்சித்தனார் 2] நாமக்கல் கவிஞர்

**3] கல்யாண சுந்தரம்** 4] நாரயணக்கவி

59. ஏழை பங்காளர், படிக்காத மேதை, பெருந்தலைவர் என்ற சிறப்புப் பெயர்களுக்கு உரியவர் யார்?

1] அண்ணா 2] அம்பேத்கார் 3] **காமராசர்** 4] தேவர்

60. காமராசரின் மணிமண்டபம் அமைந்துள்ள இடம்?

1] சென்னை 2] விருதுநகர் 3] **கன்னியாக்குமரி** 4] காரைக்குடி



winmeen.com

# 6th Tamil Questions - Part 5 [New Book]

## Term – 2

1. ”நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
   இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
   ஒப்புரவு ஆற்றல் அறிதல் அறிவுடைமை” – என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது? இதனை எழுதியவர் யார்?
   1] **ஆசாரக்கோவை, பெரும்வாயின் முள்ளியார்**
   2] திரிகடுகம், நல்லாதனார்
   3] மூதுரை, ஔவையார்
   4] முதுமொழி காஞ்சி, கூடலூர் கிழார்.
2. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர் எது?
   1] மேலக்குடி 2] புதுக்கோட்டை 3] **கயத்தூர்** 4] காஞ்சிபுரம்
3. ஆசாரக்கோவை நூலில் காணப்படும் வெண்பாக்களின் எண்ணிக்கை எத்தனை?
   1] 300 வெண்பாக்கள் 2] 200 வெண்பாக்கள்
   3] **100 வெண்பாக்கள்** 4] 400 வெண்பாக்கள்
4. ஆசாரக்கோவையில் கூறப்பட்டுள்ள நல்லொழுக்கங்களின் எண்ணிக்கை எத்தனை? மேலும் ஆசாரக்கோவை என்பதன் பொருள் என்ன?
   1] 6, ஒழுக்கங்களின் தொகுப்பு 2] 4, நல்ல தொகுப்பு
   3] **8, நல்ல ஒழுங்கங்களின் தொகுப்பு** 4] 10, மருந்துகளின் தொகுப்பு
5. ஆசாரக்கோவையில், பிறர் செய்த உதவியை …………………… ,பிறர் செய்த தீமைகளைப் ……………………………… இனிய சொற்களை …………… ஆகிய நல்லொழுக்கங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.
   1] பேசுதல்,மறவாதிருத்தல்,கேட்டல்
   2] **மறவாதிருத்தல்,பொறுத்துக் கொள்ளுதல்,பேசுதல்**
   3] மறவாதிருத்தல்,பேசுதல்,கேட்டல்
   4] பொறுத்துக் கொள்ளுதல்,பேசுதல்,கேட்டல்
6. கீழ்கண்ட கூற்றுகளைக் கவனி
   ஆசாரக்கோவையில் கூறப்படும் நல்லொழுக்கங்கள்
   1. பிறர்க்கு உதவுதல், அறிவுடையவராய் இருத்தல்
   2. எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்
   3. கல்வி அறிவு பெறுதல், நற்பண்பு உடையவரோடு நட்புக் கொள்ளுதல்
   4. மேற்கூறிய அனைத்தும்

1] 1,2 சரி 2] 2,3 சரி 3] 3 மட்டும் சரி 4] **4 மட்டும் சரி**

7. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

பிறரிடம் நான் ……………….. பேசுவேன், பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்து கொள்வது …………. ஆகும்.

1] **இன்சொல், பொறை** 2] வன்சொல், அமைதி

3] கடுஞ்சொல், அடக்கம் 4] கொடுஞ்சொல், வம்பு

8. அறிவு + உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………

1] அறிவுஉடைமை 2] **அறிவுடைமை**

3] அறியுடைமை 4] அறிஉடைமை

9. பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதப் கிடைப்பது…………………………

1] **பொறுமை+உடைமை** 2] பொறை+யுடைமை

3] பொறு+யுடைமை 4] பொறை+உடைமை

10. ஆசாரக்கோவை எந்த நூல்களில் ஒன்றாக கருதப்படுகிறது?

1] நீதி நூல்கள் 2] அற நூல்கள்

3] **பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்** 4] பதினெண்மேல்க்கணக்கு நூல்கள்

11. ”நந்தவனம் கண் திறந்து

நற்றமிழ்ப் பூ எடுத்து

பண்ணோடு பாட்டிசைத்து” என்ற வரிகள் எந்த வகையான பாடல்களைச் சார்ந்தது?

1] **தாலாட்டு பாடல்கள்** 2] ஒப்பாரி பாடல்கள்

3] தொழில் பாடல்கள் 4] கடவுள் பாடல்கள்

12. பொருத்துக:

1.நந்தவனம் - அ. உலகம்

2.பண் - ஆ. இசை

3.இழைத்து - இ. பூஞ்சோலை

4.பார் - ஈ. செய்து

1] ஈ இ அ ஆ 2] **இ ஆ ஈ அ** 3] ஈ அ ஆ இ 4] அ ஆ இ ஈ

13. சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து விடுப்பட்ட இடத்தினை நிரப்புக.

அ. இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் …………………… முக்கனியோ!

ஆ. குளம் வெட்டி, அணைக்கட்டிக் குடிமக்களின் பசியினைப் போக்கும் …………………………… முத்தமிழோ!

1] சேர நாட்டின், பாண்டிய நாட்டின் 2] பாண்டிய நாட்டின், சோழ நாட்டின்

3] **சோழ நாட்டின், பாண்டிய நாட்டின்** 4] சோழ நாட்டின், சேர நாட்டின்

14. தவறான இணையினைத் தேர்ந்தெடுக்க

1.முத்தேன் - கொம்புத்தேன்,பொந்துத்தேன்,கொசுத்தேன்

2.முக்கனி - மா,பலா,வாழை

3.முத்தமிழ் - இயல்,இசை,நாடகம்

4.முந்நீர் - ஆற்றுநீர்,கடல்நீர்,மழைநீர்

1] **4** 2] 3 3] 1 4] 2

குறிப்பு: முந்நீர் குறிப்பது – ஆற்றுநீர்,ஊற்றுநீர்,மழைநீர்

15. பாட்டிசைத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

1] பாட்டி+சைத்து 2] பாட்டி+இசைத்து

3] **பாட்டு+இசைத்து** 4] பாட்டு+சைத்து

16. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்?

1] நிறைந்த 2] குறைந்த 3] **மறைந்த** 4] தோன்றிய

17. விடுப்பட்ட சொற்களை நிரப்புக:

அ. தங்கப்பூ பதிக்க தந்தத்தால் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த ……………… முத்தேனோ!

1] சோழ நாட்டின் 2] **சேர நாட்டின்** 3] பாண்டிய நாட்டின் 4] கொற்கை நாட்டின்

18. தால் என்பதன் பொருள் என்ன?

1] பருப்பு வகை 2] இளந்தளிர் 3] **நாக்கு** 4] உணவு வகை

19. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் ……………. வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் ………………… ஆகும்.

1] சிரிக்க, தாலாட்டு 2] பேச, தாலாட்டு

3] **தூங்க, தாலாட்டு** 4] விளையாட, தாலாட்டு

20. தமிழர்கள் கொண்டாடும் பல விழாக்கள் ………… போற்றும் வகையிலேயே அமைந்து இருக்கின்றன.

1] சமயத்தைப் 2] **இயற்கைப்**

3] பாரம்பரியத்தைப் 4] மொழியைப்

21. பொங்கல் திருவிழா …………………………………. திருநாள் என்றும் போற்றப்படுகிறது.

1] பாரம்பரிய 2] **தமிழர் திருநாள்**

3] பரம்பரை 4] இந்திய திருநாள்

22. உழவு தொழிலில் செய்யும் உழவர்கள் ………………………………. விதைகளை விதைப்பர். ……………………………. அறுவடை செய்து பயன் அடைவர்.

1] ஆடித்திங்களில், மார்கழித்திங்களில் 2] தைத்திங்களில், ஆடித்திங்களில்

3] **ஆடித்திங்களில், தைத்திங்களில்** 4] மார்கழித்திங்களில், ஆடித்திங்களில்

23. தமிழர்கள் கொண்டாடும் பொங்கல் திருவிழாவானது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1] உழவர் திருநாள் 2] தமிழர் திருநாள்
3] அறுவடை திருவிழா 4] **மேற்கூறிய அனைத்தும்**

24. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பது
1] பழமொழி 2] அறிவுரை
3] **ஆன்றோர் மொழி** 4] புதுமொழி

25. நாம் வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1] சங்காரண்டி விழா 2] போகித்திருநாள்
3] மார்கழி மாத இறுதி நாள் 4] **மேற்கூறிய அனைத்தும்**

26. வாழ்க்கைக்கு வளம் தரும் ………………… வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப்பண்டிகை …………………………… கொண்டாடப்பட்டது.
1] இந்திரனை, இந்திர விழாவாகக்
2] இந்திரனை, போகித்திருநாளாக
3] **மழைக்கடவுளை, இந்திர விழாவாகக்**
4] லிங்க கடவுளை, சங்கராண்டி விழாவாக

27. பொங்கல் என்பதன் பொருள்
1] இனிப்பு 2] தித்திப்பான சுவை
3] பொங்கி வருவது 4] **பொங்கிப்பெருகி வருவது**

28. தை முதல் நாளில் …………………… தொடங்குகிறது. அதோடு தை ………………………… நாள் திருவள்ளுவர் தினம் கொண்டப்படுகிறது.
1] போகிப்பண்டிகை, முதல் 2] **திருவள்ளுராண்டு, இரண்டாம்**
3] பொங்கல், ஐந்தாம் 4] மாட்டு பொங்கல், மூன்றாம் நாள்

29. உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுவது எது?
1] ஏர் கலப்பை 2] கதிர் அறுவாள் 3] **மாடுகள்** 4] உழவுத்தொழில்

30. மாடு என்ற சொல்லின் பொருள்
1] விலங்கு 2] கடவுள் 3] **செல்வம்** 4] உழைப்பு

31. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக ……………………… விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் …………………………… கொண்டாடப்படுகிறது.
1] ஏர் கலப்பைகள், உழவர் திருநாள் 2] **மாடுகள், மாட்டுப் பொங்கல்**
3] மாடுகள், உழவர் திருநாள் 4] ஏர் கலப்பைகள், மாட்டுப்பொங்கல்

32. …………………… என்பது மாடுகளை அடக்கித் தழுவும் வீர விளையாட்டு ஆகும்.

1] மாடுப்பிடித்தல் 2] ஜல்லிக்கட்டு 3] ஏறு தழுவுதல் 4] **மேற்கூறிய அனைத்தும்**

33. கீழ்கண்ட கூற்றுகளை கவனி.

பொங்கல் திருவிழாவானது

1. இயற்கையை போற்றும் திருவிழா
2. உழைப்பு மற்றும் நன்றியுணர்வை வெளிப்படுத்தும் திருவிழா
3. தமிழர் பண்பாடை போற்றும் திருவிழா
4. மேற்கூறிய அனைத்தும்

1] 2 சரி 2] 3 சரி 3] **4 சரி** 4] 1 சரி

34. 2019 ம் ஆண்டிற்கான திருவள்ளுவராண்டை கணக்கிடுக?

1] 2038 2] **2050** 3] 2042 4] 2045

[குறிப்பு: திருவள்ளுவர் ஆண்டு என்பது கொடுக்கப்பட்ட ஆண்டுடன் 31 கூட்டக் கிடைக்கப்பெறும் ஆண்டு ஆகும். 2019+31 = 2050]

35. 'மகரசங்கராந்தி' என்ற பெயரில் அறுவடை திருநாளை கொண்டாடும் மாநிலம் எது/எவை?

1] ஆந்திரா மற்றும் கர்நாடகா 2] உத்திரப் பிரதேசம்

3] மகாராட்டிரா 4] **மேற்கூறிய அனைத்தும்**

36. பஞ்சாப் மாநிலங்களில் அறுவடைத்திருவிழா ...................... பெயரில் கொண்டாடப்படுகிறது. மேலும் குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் ................................. பெயரில் கொண்டாடப்படுகிறது.

1] மகரசங்கராந்தி, லோரி 2] **லோரி, உத்தராயன்**

3] உத்தராயன், லோரி 4] உத்தராயன், மகரசங்கராந்தி

37. கதிர் முற்றியதும் ...................... செய்வர்.

1] **அறுவடை** 2] உரமிடுதல்

3] நடவு 4] களையெடுத்தல்

38. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் ................ கட்டுவர்.

1] செடி 2] கொடிகள் 3] **தோரணம்** 4] அலங்கார வளைவு

39. பச்சைப் பசேல் என்ற வயலைக் காண <u>இன்பம்</u> தரும்.

அடிக்கோடிட்ட சொல்லிற்கான எதிர் சொல்லை கண்டறிக.

1] அயர்வு 2] கனவு 3] **துன்பம்** 4] சோர்வு

40. போகிப்பண்டிகை என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது?

1] **போகி+பண்டிகை** 2] போ+பண்டிகை

3] போகு+பண்டிகை 4] போகிப்+பண்டிகை

41. மற்போரில் சிறந்தவர் என்ற சிறப்புக்குரியவர் யார்? அவரின் மற்றொரு பெயர் என்ன?

1] மகேந்திர வர்மன், மல்லன் 2] நரசிம்ம வர்மன், மாமன்னன்

3] **நரசிம்ம வர்மன், மாமல்லன்** 4] நந்திவர்மன், மாமல்லன்

42. மாமல்லபுரத்தில்,ஒரே பாறையில் செதுக்கிச் செய்யப்பட்ட கோவில் ……………………… போன்று காணப்படுகிறது. அதனால் இதனை ……………………… என்று அழைக்கிறார்கள்.

1] ரதங்கள், ஒற்றைக்கல் 2] **தேர்கள்(இரதம்), இரத் கோவில்**

3] தேர்கள், ஒற்றைக்கல் 4] சிற்பங்கள், இரதக் கோவில்

43. பஞ்ச பாண்டவர் ரதம் யாருடைய காலத்தில் உருவாக்கப்பட்டவை?

1] மகேந்திரவர்மன் 2] **மாமல்லன்**

3] இரண்டாம் மகேந்திர வர்மன் 4] நந்திவர்மன்

44. நரசிம்மவர்மனின் தந்தை பெயர், அவர் எந்த நாட்டை ஆட்சி செய்தார்?

1] நந்திவர்மன், சோழ நாடு 2] **மகேந்திர வர்மன், பல்லவ நாடு**

3] முதலாம் நரசிம்ம வர்மன், செர நாடு 4] இரண்டாம் மகேந்திர வர்மன், பல்லவ நாடு

45. மாமல்லபுரத்தில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. இந்த பாறைக்கு ……………………… பெயர். இவ்வாறாக செதுக்கப்படும் சிற்பங்களுக்கு …………………………… என்று பெயர்.

1] **அர்ச்சுனன் தபசு, புடைப்புச் சிற்பங்கள்**

2] புடைப்பு பாறைகள், அர்ச்சுனன் தபசு

3] அர்ச்சுனன் பாறைகள், கல்வெட்டு பாறைகள்

4] அர்ச்சுனன் பாறைகள், புடைப்பு ஓவியங்கள்

46. மாமல்லபுரத்தில் இரண்டு பாறைகளுக்கு இடையே நீர் வழிந்து வரும் அமைப்பிற்கு என்ன பெயர்?

1] நீர்வீழ்ச்சி 2] **ஆகாய கங்கை** 3] கங்கை வீழ்ச்சி 4] கங்கா ஊற்று

47. தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக்கலைக்கூடமாக காட்சியளிக்கும் இடம் எது?

1] மதுரை 2] **மாமல்லபுரம்**

3] காஞ்சிபுரம் 4] திருவண்ணாமாலை

48. சிற்பக்கலை எத்தனை வகைப்படும். இவை அனைத்தும் ஒரே இடத்தில் காணப்படும் இடம் எது?

1] மூன்று, காஞ்சிபுரம் 2] **நான்கு, மாமல்லபுரம்**

3] இரண்டு, மதுரை 4] ஐந்து, காஞ்சிபுரம்

49. கீழ்கண்ட பொருத்தமில்லாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க:

1. குடைவரைக் கோவில் மற்றும் கட்டுமானக் கோவில்
2. ஒற்றைக் கல் கோயில்கள்
3. புடைப்புச் சிற்பங்கள்

4. தஞ்சை பெரிய கோவில்

1] 1 சரி 2] 3 சரி 3**] 4 சரி** 4] 2 சரி

[குறிப்பு: 1,2,3 ஆகிய அனைத்தும் மாமல்லபுரத்தில் காணப்படுகிறது.]

50. நமது உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை …………………… என்கிறோம்.

1] இன எழுத்துகள் 2] **மயங்கொலிகள்**

3] பிழைகள் 4] வேறுபட்ட எழுத்துகள்

51. கீழ்க்கண்டவற்றுள் மயங்கொலி எழுத்துகள் அல்லாத இணையினை தேர்ந்தெடுக்க.

1] ண,ன,ந 2] ல,ழ,ள 3] ர,ற 4] **க,ச,ட**

52. நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ………………… கரம் பிறக்கிறது.

1] **ண கரம்** 2] ன கரம் 3] ள கரம் 4] ர கரம்

53. நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் ………………. பகுதியைத் தொடுவதால் 'ன' கரம் பிறக்கிறது.

1] **முன் பகுதியைத்** 2] நடுப்பகுதியினைத்

3] அடிப்பகுதியினைத் 4] நுனிப்பகுதியினைத்

54. நாவின் நுனி ……………………… அடிப்பகுதியினைத் தொடுவதால் 'ந' கரம் பிறக்கிறது.

1] மேல்வாயின் 2] **மேல்வாய்ப் பல்லின்**

3] கீழ்வாய் அண்ணத்தின் 4] மேல்வாய் அண்ணத்தின்

55. நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் பற்களின் அடியைத் தொடுவதால் ………………………….. தோன்றும்.

1] ள கரம் 2] **ல கரம்** 3] ழ கரம் 4] ன கரம்

56. நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் அண்ணத்தின் ……………………… தொடுவதால் 'ள' கரம் தோன்றும்

1] மேல் பகுதியினைத் 2] **நடுப்பகுதியினைத்**

3] முன் பகுதியினைத் 4] பின் பகுதியினைத்

57. நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் …………………… தோன்றும்.

1] ள கரம் 2] **ழ கரம்**

3] ன கரம் 4] ண கரம்

[குறிப்பு: ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனை சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம்.]

58. கீழே கொடுக்கப்பட்டவைகளை கவனி

1.மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது.

2.மேல் அண்ணத்தில் மையப்பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது.

1] 1 மட்டும் சரி 2] 2 மட்டும் சரி

3] **1 2 இரண்டும் சரி** 4] இரண்டும் தவறு.

59. பொருத்துக

1.விழை - அ.மெலிந்து போதல்

2.இளை - ஆ.விரும்பு

3.இழை - இ.புடவை

4.கூறை - ஈ.நூல் இழை

1] **ஆ அ ஈ இ** 2] அ ஆ இ ஈ

3] ஈ இ ஆ அ 4] இ அ ஈ ஆ

60. மயங்கொலிப் பிழைகளற்ற சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க.

1. எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
2. என் வீட்டுத் தோட்டத்தில் மளர்கள் மணம் வீசின.
3. என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.
4. எண் வீட்டு தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.

1] 2 மட்டும் சரி 2] 1 மட்டும் சரி 3] 4 மட்டும் சரி 4] **3 மட்டும் சரி**

61. பொருள் வேறுபாடறிந்து தகுந்த சொற்களால் நிரப்புக.

அ.போரில் பயன்படுத்தியது ..............................., பூனைக்கு உள்ளது .......................

1] வாள், வாழ் 2] வால், வாள் 3] வால், வாழ் 4] **வாள், வால்**

62. சரியான தொடரை கண்டறிந்து எழுதுக.

1. கதிரவன் மறையும் காலையில் உதித்து மாலையில்
2. மாலையில் காலையில் உதித்து மறையும் கதிரவன்
3. கதிரவன் காலையில் உதித்து மாலையில் மறையும்
4. மறையும் காலையில் உதித்து கதிரவன் மாலையில்

1] 1 சரி 2] **3 சரி** 3] 4 சரி 4] 2 சரி

63. தவறான இணையினைத் தேர்ந்தெடுக்க.

1. ஒப்பனை - அ. Make up
2. சில்லுகள் - ஆ. Chips
3. சிற்பங்கள் - இ. Tiffin
4. ஆயுத்த ஆடை - ஈ. Ready made dress

1] 1 சரி 2] 2 சரி 3] **3 சரி** 4] 4 சரி

64. விடுப்பட்ட சொற்களை நிரப்புக.

மோப்பக் குழையும் அனிச்சம் முகத்திரிந்து

................ .......................... .............................

1] குழையும் நோக்கத் விருந்து 2] விருந்து நோக்கத் குழையும்

3] **நோக்கத் குழையும் விருந்து** 4] நோக்கத் விருந்து குழையும்

65. விடுப்பட்ட சொற்களை நிரப்புக.

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

.............................. ...................... .........................

1] அனையது உள்ளத்து உயர்வு 2] **உள்ளத்து அனையது உயர்வு**

3] உள்ளத்து உயர்வு அனையது 4] அனையது உயர்வு உள்ளத்து

66. விருந்தினரின் முகம் எப்போது வாடும்?

1] **நம் முகம் மாறினால்** 2] நம் வீடு மாறினால்

3] நாம் நன்கு வரவேற்றால் 4] நம் முகவரி மாற்றினால்

67. ஆராயும் அறிவுடையவர்கள் .................... சொற்களைப் பேசமாட்டார்.

1] உயர்வான 2] விலையற்ற 3] **பயன்தராத** 4] பயனுடைய

68. நிலையான செல்வம் என்பது ......................?

1] தங்கம் 2] பணம் 3] **ஊக்கம்** 4] ஏக்கம்

69. பயன்+இலா என்பதனைத் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?

1] பயன்னில்லா 2] பயன் இல்லா

3] **பயனிலா** 4] பயன் இலா

70. பொருளுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

1] பொருள்+ளுடைமை 2] **பொருள்+உடைமை**

3] பொருளு+உடைமை 4] பொரு+ளுடைமை

# 6th Tamil Questions - Part 6 [New Book]

## Term – 2

1. தமிழர்கள் ……………………, ………………………… ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள் தோறும் அனுப்பி வணிகம் செய்தார்கள்.

 1] **ஏலம், மிளகு** 2] கரும்பு, சர்க்கரை

 3] ஏலம், சர்க்கரை 4] கரும்பு, மிளகு

2. உலகை வலம் வந்த தமிழன் எதற்கும் அஞ்சாதவன், ஆனால் …………………… அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுவான்.

 1] பெரியவர்கள் 2] **சான்றோர்கள்**

 3] புலவர்கள் 4] அரசர்கள்

3. ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கியவர்கள் யார்?

 1] அரசர்கள் 2] புலவர்கள்

 3] **தமிழர்கள்** 4] சான்றோர்கள்

4. தமிழர்கள் பனிசூழ்ந்த …………………………… தன் வெற்றிக் கொடியை நாட்டினார்கள். …………………………… மூழ்கி முத்தெடுத்தனர்.

 1] அகத்திய மலையில், கடலில் 2] **இமய மலையில், ஆழ்கடலில்**

 3] வட கிழக்கு மலைகள், ஆற்றில் 4] தென் இந்திய மலைகள், குளத்தில்

5. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலத்தினை நால்வகையாக பிரித்த ……………………… தமிழன் ஆவான்.

 1] வேற்று கிரக மனிதன் 2] நல்ல மனிதன்

 3] **நாகரிக மனிதன்** 4] சமூக பண்பாளன்

6. பொருத்துக;

 1. மல்லெடுத்த - அ.பெருமகிழ்ச்சி
 2. கழனி - ஆ.வலிமைபெற்ற
 3. கலம் - இ.வயல்
 4. எக்களிப்பு - ஈ.கப்பல்
 5. மறம் - உ.வீரம்

 1] அ ஆ இ ஈ உ **2] ஆ இ ஈ அ உ**

 3] இ ஈ அ ஆ உ 4] அ ஆ ஈ உ இ

7. 'மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளம்படுத்தி



winmeen.com

ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற

பேராக்கி வாழ்ந்த பெருமை அவன் பெற்றான்' என்ற பாடல் வரிகள் யாருடையது?

1] பாரதிதாசன் 2] **முடியரசன்** 3] வாணிதாசன் 4] கண்ணதாசன்

8. 'கங்கை நதிப்புறத்துக் கோதுமை பண்டம்

காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்' என்ற பாடல் வரியை எழுதியவர் யார்?

1] பாரதிதாசன் 2] **பாரதியார்** 3] கண்ணதாசன் 4] முடியரசன்

9. முடியரசன் அவர்களின் இயற்பெயர் யாது?

1] சுப்புரத்தினம் 2] **துரைராசு** 3] கனகரத்தினம் 4] துரைசாமி

10. கீழே கொடுக்கப்பட்ட நூல்களில் முடியரசனால் எழுதப்படாத நூல் எது?

1] பூங்கொடி 2] வீர காவியம் 3] காவியப்பாவை 4] **காவிய கொத்து**

11. 'திராவிட நாட்டின் வானம்பாடி' என்று பாரட்டப்பெற்றவர் யார்?

1**] முடியரசன்** 2] சுரதா 3] கண்ணதாசன் 4] நாமக்கல் கவிஞர்

12. நானிலம் படைத்தவன் என்னும் பாடல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

1] பூங்கொடி 2] **புதியதொரு விதி செய்வோம்**

3] புதிய விதி செய்வோம் 4] காவியப்பாவை

13. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ........................

1] மகிழ்ச்சி 2] துன்பம் 3] **வீரம்** 4] அழுகை

14. நானிலம் என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது?

1] நா+னிலம் 2] **நான்கு+நிலம்** 3] நா+நிலம் 4] நான்+நிலம்

15. கலம்+ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

1] கலம் ஏறி 2] கலமறி 3] கலன் ஏறி 4] **கலமேறி**

16. மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்பவர்கள் .................................. , அவர்களுக்கு ........................... விளக்குகளாகும்.

1] மீனவர்கள், நிலா ஒளியே 2] மீனவர்கள் டார்ச் விளக்கே

3] **மீனவர்கள், விண்மீன்களே** 4] மீனவர்கள், நட்சத்திரங்களே

17. மீன் பிடிக்கக் கடலுக்கு செல்லும் மீனவர்களுக்கு விரிந்த கடலே ..........................., கடல் அலையே ...................., வெண்மையான மணலே படுத்துறங்கும் .......................

1] தோழன், பள்ளிக்கூடம், மெத்தை

2] பள்ளிக்கூடம், மெத்தை, தோழன்

3] **பள்ளிக்கூடம், தோழன், பஞ்சு மெத்தை**

4] பஞ்சு மெத்தை, தோழன், பள்ளிக்கூடம்

18. கடலுக்கு செல்லும் மீனவர்களுக்கு விண்ணின் இடி அவர்கள் காணும் ………………, சீறிவரும் புயலே விளையாடும் …………………………, பனிமூட்டம்தான் உடலை சுற்றும்……………………

1] ஊஞ்சல், துணி, வேடிக்கை 2] வேடிக்கை, ஊஞ்சல், போர்வை

3] **கூத்து, ஊஞ்சல், போர்வை** 4] வேடிக்கை, போர்வை, ஊஞ்சல்

19. மீனவர்களுக்கு அனல் வீசும் கதிரவனின் ஒளிச்சுடர்தான் …………………………, கட்டுமரம்தான் அவர்களது …………………………, மின்னல் கோடுகளே …………………………………

1] வெளிச்சம், வேலை, பயம்

2] வெளிச்சம், வீடு, பயம்

3] **மேற்கூரை, வாழும் வீடு, அடிப்படை பாடம்**

4] மேற்கூரை, அடிப்படை பாடம், பயம்

20. மீனவர்களுக்கு வலைவீசிப் பிடிக்கும் மீன்களே ……………………., அவர்களுக்கு தெரிகின்ற முழு நிலவு தான் ………………………….., மூச்சடக்கிச் செய்யும் நீச்சலே அவர்கள் செய்யும் ……………………. ஆகும்.

1] கண்ணாடி, தவம், செல்வம் 2] தவம், செல்வம், கண்ணாடி

3] **செல்வம், கண்ணாடி, தவம்,** 4] கண்ணாடி, செல்வம், தவம்

21. அரிச்சுவடி என்பதன் பொருள்:

1] ஓலைச்சுவடி 2] சுவடி

3] **அகரவரிசை எழுத்துகள்** 4] அகரவரிசை சுவடி

22. கீழே கொடுக்கப்பட்டவைகளை கவனி

அ.கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் திணையின் நிலமாகும்

ஆ.பரதன், பரத்தியர், எயினர், எயிற்றியர் நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் ஆவார்.

இ.மீன் பிடித்தலும் உப்பு விளைவித்தலும் நெய்தல் நில மக்களின் தொழிலாகும்.

ஈ.நெய்தல் நிலத்தில் மலரும் பூ தாழம்பூ ஆகும்.

1] அ மட்டும் இ சரி 2] அ மட்டும் ஈ சரி

3] ஈ மட்டும் ஆ சரி 4] **அனைத்தும் சரி**

23. காதல் கேட்டு வாய் மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் நாட்டுப்புற பாடல்களை ………………. என்பர்.

1] வாய்மொழி கவிதை 2] **வாய்மொழி இலக்கியம்**

3] வாய்மொழி பாடல்கள் 4] நாட்டுப்புற இலக்கியம்

24. கீழே கொடுக்கப்பட்டவைகளில் நாட்டுப்புற பாடல்களாக கருதப்படுவது எது/ எவை?

1] தொழில் பாடல் 2] தாலாட்டு பாடல்

3] ஒப்பாரி பாடல் 4] **மேற்கூறிய அனைத்தும்**

25. ’கடலோடு விளையாடு என்ற நாட்டுப்புறப் பாடலை தொகுத்து வழங்கியவர் யார்?

1] **சு. சக்திவேல்** 2] ஆசிரியர் இல்லை 3] சு. கனகவேல் 4] த. அமுதவேல்

26. கதிர்ச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

1] கதிர்ச்+சுடர் 2] **கதிர்+சுடர்** 3] கதிரின்+சுடர் 4] கதிரவன்+சுடர்

27. அடிக்கும்+அலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

1] அடிக்குமலை 2] **அடிக்கும் அலை**

3] அடிக்கிலை 4] அடியலை

28. பொருள்களை பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் ………………. ஆகும். பொருளை விற்பவர் ……………… என்பர். பொருளை வாங்குவோர் ………………… ஆவார்.

1] நுகர்வு, நுகர்வோர், வணிகர் 2] வாணிகம், நுகர்வோர், நுகர்வு

3] **வணிகம், வணிகர், நுகர்வோர்** 4] நுகர்வோர், நுகர்வு, வணிகர்

29. நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்று கொள்வது ………………………….. ஆகும்.

1] உள்நாட்டு வணிகம் 2] வெளிநாட்டு வணிகம்

3] மொத்த வணிகம் 4] **பண்டமாற்று வணிகம்**

30. வணிகத்தைத் ………………………….. வணிகம், ……………………… வணிகம் எனப் பிரிக்கலாம்.

1] **தரைவழி, நீர்வழி** 2] நீர்வழி, விமான 3] விமான, ரயில் 4] ரயில், நீர்வழி

31. தரை வழியாகப் பொருள்களை கொண்டு செல்ல ………………….,……………………,………………… போன்ற விலங்குகளும் வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன.

1] **கழுதை, எருது, நாய்** 2] நாய், ஒட்டகம், யானை

3] நீர்யானை, புறா, கிளி 4] யானைகள், ஆடுகள், மாடுகள்

32. வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்கு செல்லும் போது குழுவாக செல்வார்கள். இக்குழுவை ……………………………… என்பர்.

1] வணிக்குழு 2] **வணிகச்சாத்து** 3] வாணிபக்குழு 4] வியாபரக்குழு

33. கடல் வழியாக வணிகர்கள் வாணிபம் செய்யும் போது, அவர்கள் பயன்படுத்தும் கப்பல்கள் வந்து நிற்கும் இடங்கள் ……………………… ஆகும்.

1] பட்டினங்கள் 2] பாக்கம் 3] **துறைமுகம்** 4] மேற்கூறிய அனைத்தும்

34. தமிழ்நாட்டின் தலைச்சிறந்த துறைமுகமாகப் ............................... விளங்கியது. அவற்றின் வாயிலாக ......................... பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. ................................. பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

1] தூத்துக்குடி, உள்நாட்டு, தமிழ்நாட்டு 2] புதுச்சேரி, தமிழ்நாட்டுப், உள்நாட்டு
3] மெரீனா, வெளிநாட்டு, தமிழ்நாட்டுப் 4] **பூம்புகார், வெளிநாட்டுப், தமிழ்நாட்டுப்**

35. தனிநபரால் உருவாக்கப்பட்டு நடத்தப்படும் வணிகம் .................. ஆகும். ஒன்றுக்கும் மேற்ப்பட்டோர் இணைந்து முதலீடு செய்து வணிகத்தை நடத்துவது ........................... ஆகும்.

1] நிறுவன வணிகம், கூட்டு வணிகம் 2] **தனிநபர் வணிகம், நிறுவன வணிகம்**
3] கூட்டு வணிகம், தனிநபர் வணிகம் 4] நிறுவன வணிகம், தனிநபர் வணிகம்

36. நம் அன்றாட தேவைகளான பால், கீரை, காய்கறிகள் போன்றவற்றை விற்பனை செய்பவர்கள் ............................ ஆவார்கள்.

1] தனி வணிகர் 2] சிறப்பு வணிகர் 3] **சிறு வணிகர்** 4] நுகர்வோர்கள்

37. நுகர்வோர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ள இயலாதவர்கள் ...................... ஆவார்கள்.

1] சிறு வணிகர் 2] குறு வணிகர் 3] **பெருவணிகர்** 4] மக்கள்

38. சீனாவிலிருந்து ........................, ........................... போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன.அரேபியாவிலிருந்து ................................ இறக்குமதி செய்யப்பட்டன.

1] இஞ்சி, மிளகு அரிசி 2] தேக்கு, மயில்தோகை, சந்தனம்
3] சந்தனம், மயில்தோகை, தேக்கு 4] **கண்ணாடி கற்பூரம், குதிரைகள்**

39. தவறான இணையினை தேர்ந்தெடுக்க.

| மேற்கோள்கள் | நூல்கள் |
|---|---|
| 1.தந்நாடு விளைந்த வெண்ணெல் | - அ.நற்றிணை |
| 2.உமணர் போலும் | - ஆ.குறுந்தொகை |
| 3.பாலொடு வந்து கூழோடு | - இ.அகநானுறு |
| 4.பிறவும் தமபோல் செயின் | - ஈ.நாலடியார் |
| 5.நடுவு நின்ற நன்னெஞ்சினோர் | - உ.பட்டினப்பாலை |

1] 1 சரி 2] **4 சரி** 3] 5 சரி 4] 2 சரி

**[குறிப்பு: ’ பிறவும் தமபோல் செயின்’ என்ற மேற்கோளானது திருக்குறளில் அமைந்துள்ளது.]**

40. கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்க நேரம் இல்லாதவர்களுக்கு .................................. உதவுகிறது.

1] உள்நாட்டு வணிகம் 2] வெளிநாட்டு வணிகம்
3] **இணையவழி வணிகம்** 4] இணையமில்லா வணிகம்

41. 'கொள்வதும் மிகை கொளாது

கொடுப்பதும் குறைபடாது' என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

1] திருக்குறள் 2] நற்றிணை 3] **பட்டினப்பாலை** 4] புறநானூறு

42. 'கோடாமை சன்றோர்க்கு அணி' என்ற மேற்கோள் உடைய நூல் எது?

1] பட்டினப்பாலை 2] நற்றிணை 3] **திருக்குறள்** 4] தொல்காப்பியம்

43. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] **நுகர்வோர்கள்** 2] தொழிலாளிகள் 3] முதலீட்டாளர்கள் 4] மக்கள்

44. பண்டம்+மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?

1] **பண்டமாற்று** 2] பண்டம்மாற்று 3] பண்மாற்று 4] பண்டுமாற்று

45. பொருத்துக;

1.டிமாண்ட் டிராப்ட் - அ.பற்று அட்டை

2.டெபிட் கார்டு - ஆ.வரைவோலை

3.ஆன்லைன் ஷாப்பிங் - இ.கட்டண அட்டை

4..கிரெடிட் கார்டு - ஈ.இணையதள வணிகம்

1] **ஆ அ ஈ இ** 2] அ ஆ இ ஈ 3] ஈ இ ஆ அ 4] அ ஈ இ ஆ

46. பாடுபட்டுத் தேடிய பணத்தை புதைத்து வைக்காதீர் என்பது ………………… அறிவுரை.

1] திருவள்ளுவரின் 2] **ஔவையாரின்** 3] கபிலரின் 4] புலவர்கள்

47. ஏதாவது ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் ……………………… என்று பெயர்.

1] வினா எழுத்துகள் 2] இன எழுத்துகள் 3] **சுட்டு எழுத்துகள்** 4] சார்பு எழுத்துகள்

48. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எந்தெந்த எழுத்துகள் சுட்டு எழுத்துகளாக பயன்படுத்தப்படுகின்றன?

1] **அ, இ, உ** 2] இ, ஈ, ஒ 3] எ, ஏ, ஒ 4] ஆ, உ, ஏ

[குறிப்பு: தற்போது நடைமுறையில் 'உ' என்ற எழுத்து சுட்டெழுத்தாக பயன்படுத்தபடுவதில்லை.]

49. சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே இருந்து சுட்டுப்பொருளைத் தருவது ……………. எனப்படும்.

1] அண்மைச் சுட்டு 2] சேய்மை சுட்டு 3] **அகச் சுட்டு** 4] புறச் சுட்டு

50. சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே இருந்து சுட்டுப்பொருளைத் தருவது …………… எனப்படும்

1] அண்மைச் சுட்டு 2] சேய்மை சுட்டு 3] அகச் சுட்டு 4] **புறச் சுட்டு**

51. அண்மையில் உள்ள பொருள்களை சுட்டிக்காட்ட உதவும் சுட்டெழுத்து ……………………… ஆகும்.

1] அ 2] **இ** 3] உ 4] எ

52. சேய்மையில் உள்ள பொருள்களை சுட்டிக்காட்ட உதவும் சுட்டெழுத்து ................................ ஆகும்.

1] **அ** 2] இ 3] உ 4] எ

53. அக்காலத்தில், அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட .................... என்ற சுட்டெழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது

1] அ 2] இ 3] **உ** 4] எ

54. அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் மாற்றம் பெற்று ........................, ............................. என வழங்கப்படுகின்றன.

1] **அந்த, இந்த** 2] அவை, இவை 3] அதனை, இதனை 4] அது, இது

55. சுட்டெழுத்துகள் மாற்றம் பெற்று திரிந்து சுட்டுப் பொருளை தருவது ................. எனப்படும்.

1] சுட்டெழுத்துகளின் மாற்றம் 2] **சுட்டெழுத்துகளின் திரிபு**

3] சுட்டெழுத்துகளின் நிலை 4] சுட்டெழுத்துகளின் மாறும் நிலை

56. வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர். இதில் சில வினா எழுத்துகள் சொல்லின் ......................... இடம்பெறும். சில வினா எழுத்துகள் சொல்லின் .................... இடம்பெறும்.

1] இடையில், கடைசியில் 2] **முதலில், இறுதியில்**

3] இறுதியில், நடுவில் 4] நடுவில், இறுதியில்

57. கீழே கொடுக்கப்பட்டவைகளை கவனி

அ. வினா எழுத்துகள் ஐந்து வகைப்படும்.

ஆ. எ,யா,ஆ,ஓ,ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்.

1] அ மட்டும் சரி 2] ஆ மட்டும் சரி

3] அ மற்றும் ஆ தவறானவை 4] **இரண்டும் சரி**

[குறிப்பு; எ, யா ஆகிய எழுத்துகள் சொல்லின் முதலில் வரும் வினா எழுத்துகள்.

ஆ, ஓ ஆகிய எழுத்துகள் சொல்லின் இறுதியில் வரும் வினா எழுத்துகள்.

ஏ ஆகிய எழுத்துகள் சொல்லின் முதலில் மற்றும் இறுதியில் வரும் வினா எழுத்துகள்.]

58. அகத்தே இருந்து வினாப் பொருளை தரும் வினா எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

1] **அகவினா** 2] புறவினா 3] சுட்டு வினா 4] அண்மை சுட்டு வினா

59. புறத்தே இருந்து வினாப் பொருளை தரும் வினா எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

1] அண்மை சுட்டு வினா 2] அகவினா

3] **புறவினா** 4] சேய்மை சுட்டு வினா

60. கிடைக்கும் பொருள்களின் ......................................க் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகமாகும்.

1] அளவை 2] **மதிப்பை** 3] எண்ணிக்கையை 4] எடையை

61. சிலை செதுக்கப்படும்போது உதிரும் கல்தூளை .................................... மாற்றலாம்.

1] உதிரி பொருளாக 2] சுண்ணாம்பாக

3] **கோலமாவாக** 4] சுண்ணாம்பு கட்டியாக

62. காடும் காடு சார்ந்த இடமாக கருதப்படும் நிலம் எது?

1] **நெய்தல்** 2] மருதம் 3] முல்லை 4] குறிஞ்சி

63. தவறான இணையினை கண்டறிக.

1. பண்டம் - Commodity
2. பயணப்படகுகள் - Ferries
3. பாரம்பரியம் - Heritage
4. கடற்பயணம் - Voyage
5. தொழில் முனைவோர் - Entrepreneur
6. கலப்படம் - Adulteration
7. வணிகர் - Consumer

1] 1, 2, 3 2] 4 மட்டும் 3] 5, 6 4] **7**

**குறிப்பு: வணிகர் என்பதன் ஆங்கில சொல் Merchant ஆகும்.**

# 6th Tamil Questions - Part 7 [New Book]

## Term – 3

1. ”புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம்! என்ற பாடல் வரிகளுள்ள மோனை சொற்களை தேர்ந்தெடுக்க?
1] புல்வெளி, காடாகி 2] **புல்வெளி, புன்னகை**
3] பூக்காடாகிப், செய்த 4] காடாகி, பொற்காலம்
[குறிப்பு: செய்யுளின் அடிகளிலோ அல்லது சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.]

2. ”புதுமைகள் செய்த தேசமிது
பூமியின் கிழக்கு வாசலிது!” என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
1] **பாரதம் அன்றைய நாற்றங்கால்** 2] பாரதம் இன்றைய நாற்றங்கால்
3] பாரத நாட்டின் நாற்றங்கால் 4] பாரத்தின் நாற்றங்கால்

3. ”மெய்களைப் போற்றிய இந்தியத் தாய்க்கு
மெய்யுணர்வு என்கிற மேலாடை! என்ற பாடல் வரியில் கொடுக்கப்பட்டுள்ள ‘மெய்’ என்பதன் பொருள்?
1] உடல் 2] உள்ளம் 3] **உண்மை** 4] உணர்வு

4. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் திருக்குறள் நமது நாடு அணிந்திருக்கும் ………………… விளங்குகின்றது. மேலும் உண்மைகளைப் போற்றும் இந்தியத் தாய்க்கு ………………………….. மேலாடையாக விளங்குகின்றது.
1] மெய்யுணர்வு, போடப்பட்டிருக்கும் 2] **ஆடையாக, மெய்யுணர்வு**
3] மேலாடையாக, மெய்யுணர்வு 4] மெய்யுணர்வு, போத்தப்படும்

5. யார் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிப்பதாக தாரா பாரதி கூறுகிறார்?
1] கம்பர் 2] **காளிதாசர்** 3] பாரதிதாசன் 4] பாரதியார்

6. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்கு …………………….. ஆற்றின் அலைகள் இசையமைப்பதாக தாரா பாரதி குறிப்பிட்டுள்ளார்?
1] யமுனை 2] நர்மதை 3] **கங்கை** 4] வைகை

7. தவறானதை தேர்ந்தெடுக்க
அ.குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன.
ஆ.மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லைவரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.
இ.புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாக புன்னகை புரிகின்றன.
ஈ.கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் ஓவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன.
1] அ மட்டும் சரி 2] இ மட்டும் சரி

3] **ஈ மட்டும் சரி** 4] ஆ மட்டும் சரி

[குறிப்பு: கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூடமாகக் காட்சி தருகின்றன]

8. அறத்தின் ஊன்றுகோலாக ……………………………… என்னும் சிறிய கைத்தடி விளங்குவதாக தாராபாரதி கூறிப்பிடுவது?

1] அம்பேத்காரின் சட்ட புத்தகம் 2] **காந்தியடிகளின் அகிம்சை**

3] பெரியாரின் முற்போக்கு எண்ணங்கள் 4] நேருவின் பஞ்சசீலக் கொள்கை

9. தாராபாரதியின் இயற்பெயர் என்ன?

1] தாரா கிருஷ்ணன் **2] இராதகிருஷ்ணன்**

3] கல்யாண சுந்தரம் 4] நாரயணக்கவி

10. 'கவிஞாயிறு' என்னும் அடைமொழிக்குரியவர்

1] **இராத கிருஷ்ணன்** 2] கல்யாண சுந்தரம்

3] நாரயணக்கவி 4] கண்ணதாசன்

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள நூல்களில் தாராபாரதியால் இயற்றப்படாத நூலினை தேர்ந்தெடுக்க?

1] புதிய விடியல்கள் 2] இது எங்கள் கிழக்கு

3] விரல் நுனி வெளிச்சங்கள் 4] **புரட்சி முழக்கம்**

12. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

1] **நூல்+ஆடை** 2] நூலா+டை 3] நூல்+லாடை 4] நூலா+ஆட

13. எதிர்+ஒலிக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?

1] எதிரலிக்க 2] எதிர்ஒலிக்க 3] **எதிரொலிக்க** 4] எதிர்ரொலிக்க

14. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளை கவனி

1] காந்தியடிகள் எளிமையை ஓர் அறமாக போற்றினார்

2] இந்தியாவில் காந்தியடிகளின் காலடி படாத இடமே இல்லை

3] காந்தியடிகள் பெண்களின் முன்னேற்றம், சமுதாய மறுமலர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றுக்காகவும் பாடுப்பட்டார்.

4] தமிழ்நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் காந்தியடிகள் அதிகப் பற்றுக் கொண்டவர்.

1] 2 மட்டும் சரி 2] 3 மட்டும் சரி

3] 4 மட்டும் சரி 4] **அனைத்தும் சரி**

15. …………………… ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார். அந்த சமயத்தில் ஆங்கில அரசு …………………… என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது.

1] 1918, வெள்ளையனே வெளியேறு 2] 1920, உப்பு காய்ச்சும் போரட்டம்

3] **1919, ரௌலட் சட்டம்** 4] 1940, உள்ளிருப்பு போரட்டம்

16. காந்தியடிகள், ரௌலட் சட்டத்தை எதிர்த்து பெரிய போரட்டத்தை நடத்துவதற்காக எந்த இடத்தில் கருத்தாய்வு கூட்டத்தினை நடத்தினார்.

1] பாரதியின் வீடு 2] **இராஜாஜியின் வீடு**

3] நேருவின் வீடு 4] காமராசரின் வீடு



winmeen.com

17. பாரதியாரை 'இவர் எங்கள் தமிழ்நாட்டுக் கவிஞர்' என்று கூறியவர் யார்?
1] காந்தியடிகள் 2] நேரு 3] **இராஜாஜி** 4] காமராசர்
18. எந்த ஆண்டு, மாதத்தில் காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வருகைப் புரிந்தார்?
1] 1920. மார்ச் 2] 1919, செப்டம்பர்
3] **1921, செப்டம்பர்** 4] 1922, மார்ச்
19. எந்த பகுதியில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் இடுப்பில் துண்டு மட்டும் அணிந்து இருப்பதை காந்தியடிகள் கண்டார்?
1] புதுக்கோட்டை 2] சென்னை
3] **மதுரை** 4] கோயம்முத்தூர்
20. காந்தியடிகளது தோற்றத்தில் பெரும் மாற்றத்தை ஏற்ப்படுத்திய பெருமை எந்த நாட்டிற்கு உண்டு?
1] தென் ஆப்பிரிக்கா 2] ஆஸ்திரேலியா
3] **தமிழ்நாடு** 4] இந்தியா
21. காந்தியடிகள் காரைக்குடியைச் சுற்றியுள்ள ஊர்களில் சுற்றுப்பயணம் மேற்க்கொள்ளும் போது எந்த ஊரில் தங்கினார்?
1] **கானாடுகாத்தான்** 2] கானாடுகான்
3] கானாடுப்புரம் 4] கானாடுபாளையம்
22. எந்த பகுதியில் உள்ள கோவிலுக்கு அனைத்து மக்களும் சென்று வர அனுமதியில்லை என்று தலைவர்கள் கூறினர்?
1] சென்னையிலுள்ள பிரகதீஸ்வரர் 2] **மதுரையிலுள்ள மீனாட்சியம்மன்**
3] திருச்செந்தூரிலுள்ள முருகன் 4] வடபழனி முருகன்
23. மனிதர்களிடம் ........................................ பாராட்டக்கூடாது என்பதில் காந்தியடிகள் உறுதியாக இருந்ததை இதன்மூலம் அறிய முடிகிறது.
1] ஏற்றத்தாழ்வு 2] **உயர்வு தாழ்வு** 3] நன்றி 4] இன்முகம்
24. எந்த நாட்டில் உள்ளபோது காந்தியடிகள் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கியதாக கூறியுள்ளார்?
1] ஆஸ்திரேலியா 2] **தென் ஆப்பிரிக்கா**
3] இந்தியா 4] அமெரிக்கா
25. காந்தியடிகள் ................................ எழுதிய .................................... தம்மைக் கவர்ந்தாகக் கூறியுள்ளார்?
1] வீரமாமுனிவர், தமிழேடு 2] **ஜி.யு.போப் தமிழ்க்கையேடு**
3] கம்பர், ராமயாணம் 4] பாரதியாரின், குயில்ப்பாட்டு
26. காந்தியடிகளை கவர்ந்த நூலின் பெயர்?
1] **திருக்குறள்** 2] தமிழேடு 3] பைபிள் 4] தமிழ் அகராதி
27. சென்னையில் இலக்கிய மாநாடு எப்போது நடைப்பெற்றது. இம்மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் யார்?
1] **1937, காந்தியடிகள்** 2] 1940, நேரு
3] 1945, நேதாஜி 4] 1958, இராஜாஜி

28.சென்னையில் நடைப்பெற்ற இலக்கிய மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவராக தலைமை வகித்தவர் யார்?

1] இராஜாஜி **2] உ.வே.சாமிநாதர்**

3] காந்தியடிகள் 4] பாரதியார்

29.யாருடைய நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது என்று காந்தியடிகள் கூறியுள்ளார்?

1] பாரதியார் 2] போப் 3] வீரமாமுனிவர் 4] **உ.வே. சாமிநாதர்**

30.பொருத்துக

1.இலக்கிய மாநாடு - அ.பாரதியார்

2.தமிழ்நாட்டுக் கவிஞர் - ஆ.சென்னை

3.குற்றாலம் - இ.ஜி.யு.போப்

4.தமிழ்க் கையேடு - ஈ.அருவி

1] அ ஆ இ ஈ 2] **ஆ அ ஈ இ** 3] அ இ ஈ ஆ 4] ஈ இ அ ஆ

31.கீழே கொடுக்கப்பட்டவைகளை கவனி

1] இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் மகள் வேலுநாச்சியார்.

2] வேலுநாச்சியார் தமிழ் மட்டுமில்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளை கற்றவர்.

3] சிலம்பம், குதிரை ஏற்றம் வாள்ப்போர், வில்பயிற்சி ஆகியவற்றை முறையாக கற்றவர்.

4] சிவகங்கை மன்னர் முத்துவடுநாதரை திருமணம் செய்து கொண்டார்.

1] 1 மட்டும் சரி 2] 1 மட்டும் 3 சரி 3] 3 மட்டும் 2 சரி 4] **அனைத்தும் சரி**

32.எந்த இடத்தில் நடைப்பெற்ற போரில் முத்துவடுகநாதர் ஆங்கில படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தார்?

1] சிவகங்கை 2] **காளையார் கோவில்**

3] காளையார்ப்பட்டி 4] இராமநாதபுரம்

33.வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்க, ………………………… என்ற இடத்தில் தங்கி ஒரு படையை திரட்டிப் பயிற்சி அளித்தார்.

1] நாமக்கல் கோட்டை 2] வேலூர் கோட்டை

3] திருச்சி கோட்டை 4] **திண்டுக்கல் கோட்டை**

34.வேலுநாச்சியாரிடம் அமைச்சராக பணிபுரிந்தவர் யார்?

1] பெரிய மருது 2] சின்ன மருது

3] **தாண்டவராயர்** 4] குறுநில மன்னர்கள்

35.வேலுநாச்சியாருக்கு சிவகங்கையை மீட்க 5000 குதிரை படைகளை அனுப்பியவர் யார்? அவர் எந்த பகுதியினைச் சேர்ந்தவர்?

1] பெரிய மருது, வேலூர் 2] சின்ன மருது, இராமநாதபுரம்

3] **ஐதர் அலி, மைசூர்** 4] மருது சகோதரர்கள், திண்டுக்கல்

36.நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்கு பெரிய நன்மையை தந்திருக்கிறது என்று வேலுநாச்சியாரை புகழ்ந்து கூறியவர்?

1] தாண்டவராயர் 2] **சின்ன மருது**

3] பெரிய மருது 4] மருது சகோதரர்கள்

37. கூற்று: ஐதர் அலி முகத்தில் பெரிய மகிழ்ச்சி தோன்றியதை நான் கண்டேன் என்று தாண்டவராயர் கூறினார்.

காரணம்: ஐதர் அலியைச் சந்திக்க மைசூர் சென்ற வேலுநாச்சியார் ஐதர் அலியிடம் உருது மொழியில் பேசினார்.

1] கூற்று சரி, காரணம் தவறு 2] காரணம் தவறு, கூற்று சரி

3] கூற்று சரி, அதற்கு தகுந்த காரணம் அல்ல. 4] **கூற்றுக்கு சரியான காரணம் ஆகும்.**

38. ”நமது வீரர்க்ளுடன் ஐதர் அலியின் ஐயாயிரம் குதிரைப்படை வீரர்களும் சேர்ந்துவிட்டதாகவும், ஆகவே நாளை சிவகங்கையை மீட்கப் புறப்படலாம் அல்லவா?” என்று கூறியவர்?

1] சின்ன மருது 2] **பெரிய மருது**

3] மருது சகோதரர்கள் 4] தாண்டவராயர்

39. வேலுநாச்சியாரின் படையானது முதலில் எந்த பகுதியினை முற்றுகையிட திட்டமிட்டது?

1] சிவகங்கை 2] இராமநாதபுரம்

3] **காளையார்கோவில்** 4] திண்டுக்கல்

40. ”நாம் இப்போதே சிவகங்கைக் கோட்டையைத் தாக்கினால் ஆங்கிலேயரை விரட்டியடித்து விடலாம் என்று வேலுநாச்சயாரிடம் கூறியவர் யார்?

1] சின்ன மருது 2] **பெரிய மருது** 3] தாண்டவராயர் 4] ஐதர் அலி

41. சிவகங்கைக் கோட்டைக் கதவுகள் எந்த திருநாளில் திறக்கப்படும்?

1] **விசயதசமி** 2] ஆயுதப்பூஜை

3] ஆடித்திருநாள் 4] மார்கழித் திங்கள்

42. வேலுநாச்சியாரின் ஆண்கள் படைப்பிரிவுக்கு ............................., பெண்கள் படைப்பிரிவிற்குக் ........................... தலைமை ஏற்றனர்.

1] தாண்டவராயர், குயிலியும் 2] **மருது சகோதர்கள், குயிலியும்**

3] பெரிய மருது, சின்ன மருதுயும் 4] பெரிய மருது, குயிலியும்

43. விஜயதசமி நாளில் சிவகங்கை கோட்டைக்குள் செல்ல யாருக்கு மட்டும் அனுமதியுள்ளது?

1] ஆண்கள் 2] மக்கள் 3] **பெண்கள்** 4] குழந்தைகள்

44. வேலுநாச்சியாரை காட்டிக்கொடுக்க வேண்டும் என்று யாரை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்கள். இந்த செய்தியினை வேலுநாச்சியாரிடம் கூறியவர் யார்?

1] குறு நில மன்னர்கள், பெரிய மருது 2] குறு நில மன்னர்கள், சின்ன மருது

3] **உடையாள், தாண்டவராயர்** 4] உடையாள், மருது சகோதரர்கள்

45. வேலு நாச்சியாரை காட்டிக்கொடுக்காத உடையாளுக்கு வேலுநாச்சியார் செய்த சிறப்பு என்ன?

1] நிலத்தினை பரிசாக வழங்கினார் 2] தங்ககாசுகளை பரிசளித்தார்.

3] **நடுகல் அமைத்தார்.** 4] வாளினை பரிசாக அளித்தார்.

46. உடையாளுக்காக நடப்பட்ட நடுகல்லுக்கு வேலுநாச்சியார் காணிக்கையாக அளித்த பரிசு யாது?

1] பூமாலை 2] தங்க மாலை **3] தாலி** 4] செயின்

47.ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்கிற்கு தீ மூட்டியது யாருடைய செயல்?

1] சின்ன மருது 2] பெரிய மருது 3] **குயிலி** 4] ஐதர் அலி

48.சிவகங்கையை மீட்கப்பட்டதன் முக்கிய காரணமாக கருதப்படுவது எது/எவை?

1] வேலுநாச்சியாரின் வீரம் 2] மருது சகோதரர்களின் ஆற்றல்

3] ஐதர் அலியின் உதவி 4] குயிலியின் தியாகம்

1] 1 மற்றும் 2 சரி 2] 3 மற்றும் 4 சரி 3] 2 மட்டும் சரி 4] **அனைத்தும் சரி**

49.வேலுநாச்சியார் வாழ்ந்த காலம்?

1] **1730-1796** 2] 1736-1798 3] 1738-1790 4] 1728-1790

50.வேலுநாச்சியார் சிவகங்கையை எந்த ஆண்டு மீட்டெடுத்தார்?

1] 1958 2**] 1980** 3] 1975 4] 1960

51.ஜான்சி ராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்த பெண்மணி?

1] குயிலி 2] உடையாள் 3] **வேலு நாச்சியார்** 4] அம்புஜத்தம்மாள்

52.தமிழில் சில எழுத்துகள் ………………. நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் …………………………… வந்தும் பொருள் தரும்.

1] தனித்து, பின்னால் 2] **தனித்து, தொடர்ந்து**

3] தொடர்ந்து, தனித்து 4] சேர்ந்து, சேர்ந்து

53.எழுத்துகள் தனித்து நின்றோ அல்லது தொடர்ந்து வந்தோ பொருள் தருமாயின், அவற்றை ………………….. என்கிறோம்.

1] மொழி 2] **சொல்** 3] தனிச்சொல் 4] உருபு

54.இலக்கண அடிப்படையில் சொற்கள் எத்தனை வகைப்படும்?

1] மூன்று 2] இரண்டு 3] **நான்கு** 4] ஐந்து

55.எழுத்துகள் ஒன்றிணைந்து ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் ………………………………… எனப்படும்.

1] வினைச்சொல் 2] **பெயர்ச்சொல்** 3] இடைச்சொல் 4] உரிச்சொல்

56.…………………………… என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் ……………………………… எனப்படும்.

1] வினைச்சொல், வினை 2] பெயர்ச்சொல், பெயர்

3] **வினை, வினைச்சொல்** 4] பெயர், வினைச்சொல்

57.கீழே கொடுக்கப்பட்டவைகளை கவனி

வா, போ, எழுது, விளையாடு போன்ற சொற்கள் எந்த சொல்லை குறிக்கின்றன?

1] இயற்சொல் 2] **வினைச்சொல்** 3] உரிச்சொல் 4] இடைச்சொல்

58.பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் ……………………………… இடைசொல் ஆகும். இந்த சொற்கள் …………………. இயங்காது.

1] இடைச்சொல், சேர்ந்து 2] **இடைச்சொல், தனித்து**

3] உரிச்சொல், சேர்ந்து 4] உரிச்சொல், தனித்து

59.பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது .......................... சொற்கள் ஆகும்.

1] பெயர்ச்சொல் 2] வினைச்சொல் 3] இடைச்சொல் 4] **உரிச்சொல்**

60.தவறான இணையினை தேர்ந்தெடுக்க

1. உம் - தந்தையும் தாயும்
2. மற்று - மற்றொருவர்
3. ஐ - திருக்குறளை
4. சால - சாலச்சிறந்த்து

1] 1 சரி 2] 3 சரி **3] 4 சரி** 4] 2 சரி

61.கீழே கொடுக்கப்பட்டவைகளை கவனி

நால்வகை சொற்களிலிருந்து பொருந்தாத சொற்களைத் தேர்ந்தெடுக்க?

1.மதுரை 2] நாற்காலி 3] சித்திரை 4] **ஓடினான்**

1] 1 சரி 2] 3 சரி 3] 4 சரி 4] 2 சரி

**[குறிப்பு: ஓடினான் என்ற சொல்லானது வினைச்சொல்லினைக் குறிக்கின்றன.]**

62.ஆங்கிலேயரின் கப்பல்களுக்குப் போட்டியாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தவர் யார்?

1] பாரதியார் 2] **வ.உ.சிதம்பரனார்** 3] சுப்பரமணியன் 4] தேவர்

63.சிதம்பரனார் சுதேசி நாவாய்ச் சங்கம் என்ற ...................... நிறுவனத்தைப் பதிவு செய்தார்.

1] உப்பு காய்ச்சும் **2] உள்நாட்டு இந்திய கப்பல்**

**3]** இந்திய போரட்டக்குழு 4] உள்நாட்டு வணிக்குழு

64.சுதேசி நாவாய்ச் சங்கம் என்ற கப்பல் நிறுவனத்தை சிதம்பரனார் எந்த ஆண்டு எந்த மாதம் தொடங்கினார்?

1] **1906, அக்டோபர் 16ம் நாள்** 2] 1908, செப்டம்பர் 17ம் நாள்

3] 1907, மார்ச் 20ம் நாள் 4] 1910, டிசம்பர் 9ம் நாள்

65.கூற்றுகளைக் கவனி

அ.சிதம்பரனார் சென்னைக்கு செல்லும்போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஆ.சிதம்பரனார் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார்.

இ.வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முக தன்மையுடன் விளங்கியவர் சிதம்பரனார்.

ஈ.சுதேசி நாவாய்ச் சங்கம் என்ற உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

1] அ மட்டும் சரி 2] இ மட்டும் ஆ சரி 3] ஆ மட்டும் சரி 4] **அனைத்தும் சரி**

66.ஒன்று என்பதனை குறிக்க ..................., ........................... ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன.

1] ஒர், ஒன்று 2] ஒன்று, ஒரு 3] **ஓர், ஒரு** 4] ஒரு, ஒன்று

67. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ............................ என்னும் சொல்லைக் பயன்படுத்த் வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ................. என்னும் சொல்லை பயன்படுத்த வேண்டும்.

1] ஒரு, ஓர் 2] **ஓர், ஒரு** 3] ஒன்று, ஒரு 4] ஒரு, ஒன்று

68. கீழ்க்காணும் தொடர்களில் பிழையற்ற தொடரை தேர்ந்தெடுக்க.

1. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்
2. ஓர் இரவும் பகலும் சேர்ந்தது ஒருநாள்
3. ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள்
4. ஒரு இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள்

1] 1 சரி 2] **3 சரி** 3] 2 சரி 4] 4 சரி

69. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் .......................... என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

1] அது 2] **அஃது** 3] இது 4] அல்ல

70. உயிர் மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ......................... என்னும் சொல்லை பயன்படுத்த வேண்டும்.

1] **அது** 2] அஃது 3] இது 4] அல்ல

71. பொருந்தாத இணையினை தேர்ந்தெடுக்க

1. நாட்டுப்பற்று - Patriotism
2. இலக்கியம் - Literature
3. கலைக்கூடம் - Red gallery
4. மெய்யுணர்வு - Knowledge of Reality

1] 1 மட்டும் சரி 2] 4 மட்டும் சரி 3] 2 மட்டும் சரி 4] **3 மட்டும் சரி**

**[குறிப்பு: கலைக்கூடம் என்பதன் ஆங்கில சொல் Art Gallery.]**

winmeen.com

# 6th Tamil Questions - Part 8 [New Book]

## Term – 3

1. விடுப்பட்ட இடங்களை நிரப்புக:

   தம் உயிர்ப்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர்

   ……………………… ……………………… ……………………… ………………

   1] இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!

   2] செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!

   3] அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!

   4] இன்பநிலை ஏவல்நின்று அறியேன் பராபரமே!

   1] 1 சரி 2] **2 சரி** 3] 3 சரி 4] 4 சரி

2. பொருத்துக

   1.தண்டருள் - அ.தொண்டு

   2.ஏவல் - ஆ.மேலான பொருளே

   3.செம்மையர் - இ.குளிர்ந்த கருணை

   4.கூர் - ஈ.மிகுதி

   5] பராபரமே - உ.சான்றோர்

   1] இ ஈ அ ஆ உ 2**] இ அ உ ஈ ஆ** 3] ஈ அ ஆ உ இ 4] உ அ இ ஈ ஆ

   [குறிப்பு: பணி என்பதன் பொருளும் தொண்டு ஆகும்.]

3. அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோருக்கு என்ன செய்ய வேண்டும்?

   1] அன்பளிப்பு 2] **தொண்டு** 3] சன்மானம் 4] உதவி

4. எல்லாரும் ……………………… இருக்க நினைப்பதுவே

   அல்லாமல் வேறொன்று ……………………… பராபரமே! என்ற பாடல்களில் விடுப்பட்ட சொற்களை நிரப்புக.

   1] அமைதியாக, அல்லாமல் 2] துன்புற்று, இல்லையே

   3] **இன்புற்று, அறியேன்** 4] அடிமையாக, அறியாமில்லையே

5. பராபரக்கண்ணி என்னும் பாடலை எழுதியவர்?

   1] **தாயுமானவர்** 2] திரு.வி.க 3] கம்பர் 4] பாரதி

6. ”தமிழ் மொழியின் உபநிடதம்” எனப் போற்றப்படும் நூல்?

   1] **தாயுமானவர் பாடல்கள்** 2] சின்மயதீபிகை

   3] திருவருட்பா 4] திருக்குறள்

7. தாயுமானவர் எந்த அரசரிடம் தலைமைக் கணக்கராகப் பணிப்புரிந்தார்? அந்த அரசர் ஆண்ட பகுதியினை தேர்ந்தெடுக்க?

   1] ராஜராஜன், மதுரை 2] **விஜயராகுநாத சொக்கலிங்கரிடம், திருச்சி**

   3] முதலாம் குலோத்துங்கன், தஞ்சை 4] இரண்டாம் குலோத்துங்கன், தென்மதுரை



winmeen.com

8. கண்ணி என்பது ……………………….. அடிகளில் பாடப்படும் பாடல்வகை.
 1] மூன்று 2] நான்கு 3] **இரண்டு** 4] எட்டு
9. தம்+உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?
 1] **தம்முயிர்** 2] தமதுயிர் 3] தம்உயிர் 4] தம்மு உயிர்
10. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?
 1] தானெ+என்று 2] **தான்+என்று** 3] தா+னென்று 4] தான்+னென்று
11. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல்?
 1] அழிவு 2] துன்பம் 3] **சுறுசுறுப்பு** 4] சோகம்
12. ”உழைக்கும் போது நீங்கள்
 புல்லாங் குழலாகி விடுகிறீர்கள்” என்ற பாடல் வரிகள் யாரால் எழுதப்பட்டது?
 1] கலீ இம்ரான் 2] **கலீப் கிப்ரான்** 3] சலீம் கிப்ரான் 4] சலீம் இம்ரான்
13. ”கொடுப்பது வேரின் இயல்பு
 பெறுவது வேரின் இயல்பு” என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
 1] **தீர்க்கதரிசி** 2] தீர்க்கப்பரிசு 3] தீர்க்கதியாகி 4] தீர்க்கயாத்திரை
14. மேற்கூறிய கூற்றுகளை ஆராய்க
 1.கலீப் கிப்ரான் லெபனான் நாட்டைச் சேர்ந்தவர்.
 2.கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர்.
 3.தீர்க்கதரிசி என்னும் நூலினை மொழிப்பெயர்த்தவர்.
 4.சிறந்த ஓவியராக கலீப் கிப்ரான் திகழ்ந்தார்.
 1] 1 மட்டும் 3 சரியானவை 2] 3 மட்டும் 4 சரியானவை
 3] 2 மட்டும் 3 சரியானவை 4] **3 மட்டும் தவறானவை**
15. தீர்க்கதரிசி என்னும் நூலை மொழிப்பெயர்த்தவர் யார்?
 1] கலீப் கிப்ரான் 2] **புவியரசு** 3] கிப்ரான் 4] ஜான் பனியன்
16. பரிசு பெறும் போது நம் மனநிலை ……………………….. ஆக இருக்கும்.
 1] கவலை 2] துன்பம் 3**] மகிழ்ச்சி** 4] சோர்வு
17. வாழ்வில் உயர கடினமாக ……………………….. வேண்டும்.
 1] பேச 2] சிரிக்க 3] நடக்க 4] **உழைக்க**
18. உலக உயிர்கள் அனைத்தும் வாழ்நாள் முழுவதும் ……………………….. தேடியே உழைக்கின்றன.
 1] பணம் 2] உடை 3] இருப்பிடம் 4] **உணவு**
19. தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இச்செகத்தினை அழித்திடுவோம் என்ற பாடல் வரியினை எழுதியவர் யார்?
 1] பாரதிதாசன் 2] கவிமணி 3] **பாரதியார்** 4] திருவள்ளுவர்
20. உலகில் பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவு அளிப்பது ………………………….. இணையானது. அதுவே சிறந்த ……………………………… ஆகும்.
 1] சிறந்த செயலுக்கு, செயல் 2] கடவுளின் காட்சிக்கு, செயல்
 3**] உயிர் கொடுப்பதற்கு, அறம்** 4] உயிரினை பெறுவதற்கு, அறம்

21. மணிமேகலை எந்த தீவிற்கு கொண்டு செல்லப்பட்டாள்? அழைத்துச் சென்றது யார்?
    1] இலட்சத்தீவு, மணிமேகலையின் தோழி 2] மாலத்தீவு, தீவுதிலகை
    3] **மணிபல்லவத்தீவு, மணிமேகலா தெய்வம்** 4] மணிபல்லவத்தீவு, மணிமேகலா தெய்வம்
22. மணிமேகலை மணிபல்லவத்தீவில் யாரை சந்தித்தார்?
    1] மணிமேகலா தெய்வம் 2] **தீவுத்திலகை**
    3] அறவண அடிகள் 4] மாதவி
23. தீவுத்திலகை மணிபல்லவத்தீவில் தான் செய்யும் பணிகளாக மணிமேகலையிடம் கூறியது எது/எவை?
    1] வருபவர்களை வரவேற்பது, உணவு அளிப்பது
    2] மணிபல்லவத் தீவை பாதுகாப்பது, வருபவர்களை வரவேற்பது
    3] **மணிபல்லவத் தீவினை பாதுகாப்பது, புத்தபீடிகையை காவல் செய்வது**
    4] புத்தப்பீடிகை காவல் செய்வது, மணிமேகலையை பாதுகாப்பது
24. பூக்கள் நிறைந்து விளங்கும் பொய்கைக்கு தீவுத்திலகை கூறும் இன்னொரு பெயர் என்ன?
    1] கோமாதா 2] புண்ணிய நதி 3] **கோமுகி** 4] புண்ணிய ஊற்று
25. கோமுகி என்பதன் பொருள்
    1] பசுவின் முழு வடிவம் 2] விலங்கு வடிவம் 3] **பசுவின் முகம்** 4] பொய்கை ஆறு
26. பசுவின் முகம் போன்று அமைந்திருப்பதால், ..................................... கோமுகி என்னும் பெயரைப் பெற்றது.
    1] வைகை 2] நர்மதா 3] கங்கா 4] **பொய்கை**
27. பொய்கை நீரின் மேல் தோன்றும் அதிசயம் என்ன? அந்த அதிசயம் எப்போது நிகழ்வதாக தீவுத்திலகை மணிமேகலையிடம் கூறுகிறாள்?
    1] சக்கரம், முழு அமாவாசை 2] சங்கு, திங்கள் முழு நிலவு
    3] **அரிய பாத்திரம், திங்கள் முழு நிலவு** 4] அமுத சுரபி, முழு அமாவாசை
28. அமுத சுரபியின் சிறப்பாக தீவுத்திலகை கூறுவது யாது?
    1] அள்ள பணம் குறையாது 2] அள்ள தங்க காசு குறையாது
    3] **அள்ள அள்ள உணவு குறையாது** 4] அள்ள அள்ள உடை குறையாது
29. அமுதசுரபி முதன் முதலில் யாரிடம் இருந்தது?
    1] மணிமேகலா தெய்வம் 2] தீவுத்திலகை 3] **ஆபுத்திரன்** 4] ஆதிரை
30. மணிமேகலை முதன்முதலில் யாரிடம் உணவு பெற்றாள்?
    1] ஆபுத்திரன் 2] தீவுத்திலகை 3] **ஆதிரை** 4] மாதவியிடம்
31. மணிமேகலையின் பெற்றோர் யார்?
    1] கோவலன் – கண்ணகி 2] கோவலன் – மாதிரி
    3] **கோவலன் – மாதவி** 4] மணிமேகலா தெய்வம்
32. மணிமேகலை அமுதசுரப்பியில் உள்ள உணவை முதலில் யாருக்கு வழங்குகிறார்?
    1] **உடல் குறையுற்றோர், பிணியாளர், ஆதரவு அற்றோர்**
    2] ஏழை எளியோர், ஆதரவு அற்றோர், பிணியாளர்

3] பிணியாளர், பிச்சைக்காரர்கள்

4] ஆதரவு அற்றோர், ஏழை எளியோர்

33. மணிமேகலை ……………………… நகரில் உள்ள சிறைச்சாலைக்கு சென்று அங்கு உள்ளவர்களுக்கு உணவிடுகிறாள்?

1] வேலூர் 2] **மதுரை (பூம்புகார்)** 3] திருச்சி 4] சென்னை

34. மன்னரிடம், மணிமேகலை சிறைக்கோட்டம் எவ்வாறாக மாற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்?

1] பூந்தோட்டமாக 2] **அறக்கோட்டமாக** 3] அரண்மனையாக 4] கோவிலாக

35. சிறையில் உள்ளவர்களுக்கு மணிமேகலை எதனை கற்றுக் கொடுக்க வேண்டும் என்று மன்னரிடம் கூறினார்?

1] **அற நெறிக் கல்வியினை** 2] அற நெறிக் கொள்கை

3] போதனைகள் 4] வாழ்க்கை அறம்

**[குறிப்பு: அறநெறி கல்வி என்பது பெற்றோரை மதித்தல், முதியவரைப் பேணல், உறவினர்களை அரவணைத்தல்.**

**புத்தர் போதித்தது – போதனைகள்**

**திருவள்ளுவர் - வாழ்க்கை அறத்தினைப் பற்றி எடுத்துரைத்தார்.]**

36. 'பாதம்' என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

1] ஜானகி மாணளன் **2] ராமகிருஷ்ணன்**

3] ஜெயகாந்தன் 4] கல்கி

37. 'பாதம்' என்ற சிறுகதையில் மாரி செய்த தொழில் என்ன?

1] கூலிவேலை 2] மாடு மேய்ப்பவர்

3] **செருப்பு தைப்பவர்** 4] மீன் பிடிப்பவர்

38. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் இராமகிருஷ்ணன் எழுதிய நூல் எது/எவை?

1] உபபாண்டவம் 2] கதாவிலாசம் 3] தேசாந்திரி 4] கால் முளைத்த கதைகள்

1] 1 மட்டும் 2 சரி 2] 2 மட்டும் 3 சரி 3] 3 மட்டும் 4 சரி 4] **அனைத்தும் சரி**

39. கீழே கொடுக்கப்பட்டவைகளில் ராம்கிருஷ்ணன் எழுதிய 'பாதம் என்னும் சிறுகதையானது எந்த சிறுகதையின் தொகுப்பில் அமைந்துள்ளது?

1] கால் முளைத்த கதைகள் 2] **தாவரங்களின் உரையாடல்**

3] கதாவிலாசம் 4] தேசாந்திரி

40. பாதம் என்னும் சிறுகதையில் மாரியிடம் வித்தியசமான செருப்பை தைக்க கொடுத்து யார்?

1] பெரியவர் 2] சிறுவன் 3] **சிறுமி** 4] முதியோர்

41. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?

1] 5 2] **6** 3] 8 4] 10

42. உயிருள்ள பொருட்களையும், உயிரற்ற பொருள்களையும் குறிக்கும் பெயருக்கு ………………… என்று பெயர்.

1] இடப்பெயர் 2] **பொருட்பெயர்**

3] பண்புப்பெயர் 4] சினைப்பெயர்

43. பொருந்தாத ஒன்றினை தேர்ந்தெடுக்கவும்.

1] சென்னை 2] பள்ளி 3] பூங்கா 4] **நாற்காலி**

**குறிப்பு: மற்ற மூன்றும் இடப்பெயரினை குறிக்கிறது.**

44. கீழே கொடுக்கப்பட்டவைகளுள் காலப்பெயரினை குறிக்காத சொல்லினை தேர்ந்தெடுக்கவும்.

1] நிமிடம், நாள் 2] வாரம், சித்திரை

3] ஆண்டு, நாட்கள் 4] **கண், இலை**

குறிப்பு: கண், இலைஆகியவை சினைப்பெயரினை குறிக்கின்றது.

45. பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் ?

1] இடப்பெயர் 2] பண்புப்பெயர்

3] **சினைப்பெயர்** 4] பொருட்பெயர்

46. கீழே கொடுக்கப்பட்டவைகளில் பண்பு பெயரினை குறிக்காத சொல்லினை தேர்ந்தெடுக்கவும்?

1] சதுரம் 2] நன்மை 3] செம்மை 4] **கண்**

குறிப்பு: கண் என்பது சினைப்பெயரினை குறிக்கின்றது.

47. பொருத்துக:

1.தொழிற்பெயர் - அ.கை

2.சினைப்பெயர் - ஆ.சித்திரை

3.காலப்பெயர் - இ.பாடுதல்

4.இடப்பெயர் - ஈ.பறவை

5.பொருட்பெயர் - உ.பூங்கா

1] அ ஆ இ ஈ உ **2] இ அ ஆ உ ஈ** 3] உ ஆ அ இ ஈ 4] ஈ இ ஆ அ உ

48. நம் முன்னோர்கள் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் ……………………… ஆகும்.

1] குறிப்புபெயர் 2] **இடுகுறிப்பெயர்**

3] காரணப்பெயர் 4] காரணப்பொதுப்பெயர்

49. இடுக்குறிப்பெயர் எத்தனை வகைப்படும்?

1] 3 வகைப்படும் 2] **2 வகைப்படும்** 3] 4 வகைப்படும் 4] 5 வகைப்படும்

**[குறிப்பு: இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்பு பெயர் என இருவகைப்படும்.]**

50. ஓர் இடுக்குறிப்பெயர் அத்தன்மை உடைய எல்லாப் பொருள்களையும் குறிப்பது ……………………… எனப்படும்.

1] இடுகுறிப் பெயர் 2] **இடுகுறிப் காரணப்பெயர்**

3] இடுக்குறிப் பொதுப்பெயர் 4] இடுக்குறி சிறப்பு பெயர்

51. ஓர் இடுக்குறிப்பெயர் குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது …………………………… எனப்படும்.

1] இடுக்குறிப்பெயர் 2] **இடுக்குறி சிறப்பு பெயர்**

3] இடுக்குறிப் பொதுபெயர் 4] காரணப்பெயர்

52. நம் முன்னோர் சில பொருள்களுக்கு ……………….. கருதிப் பெயரிட்டனர்.

1] பொதுத்தன்மைக் 2] சிறப்புக்
3**] காரணம்** 4] பண்புக்

53.காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாக குறித்தால் அது ………………… எனப்படும்.

1] காரணப்பெயர் 2] காரணச் சிறப்பு பெயர்
3] **காரணப் பொதுப்பெயர்** 4] இடுக்குறி சிறப்பு பெயர்

54.குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ………….. மட்டும் சிறப்பாக குறிப்பது காரணச்சிறப்பு பெயர் ஆகும்.

1] **பொதுவான ஒன்றை** 2] பொதுவான இரண்டை
3] பொதுவான மூன்றை 4] சிறப்பான இரண்டை

55.கீழே கொடுக்கப்பட்டவைகளில் இடுக்குறிச் சிறப்புப் பெயரினை தேர்ந்தெடுக்க.

1] வயல் 2] **வாழை** 3] மீன்கொத்தி 4] பறவை

56.கீழே கொடுக்கப்பட்டவைகளில் காரணப்பெயர் அல்லாத ஒன்றினை தேர்ந்தெடுக்க.

1] நாற்காலி 2] கரும்பலகை 3] வளையல் 4**] கருவேலங்காடு**

57.”அன்பினில் இன்பம் காண்போம்
அறத்தினில் நேர்மை காண்போம்” என்ற பாடல் வரியினை எழுதியவர் யார்?

1] பாரதிதாசன் 2] **முத்தரையனார்** 3] கலீப் கிப்ரான் 4] நாமக்கல் கவிஞர்

58.ஆறு என்ற சொல்லினை குறிக்காத சொல்லை தேர்ந்தெடுக்க.

1] திங்கள் 2] நதி 3] எண் 4] **கடல்**

59.பொருந்தாதை தேர்ந்தெடுக்க:

1.சாரண சாரணியர் - அ.Scouts & Guides
2.தன்னார்வலர் - ஆ.Volunter
3.இளம் செஞ்சிலுவைக் சங்கம் - இ.Junior Red Cross
4.சமூக பணியாளர் - ஈ.Social Worker
5.அறக்கட்டளை - உ.Indus Department

1] 2 மட்டும் 2] 3 மற்றும் 4 3] 1 மட்டும் 4**] 5 மட்டும்**

குறிப்பு: அறக்கட்டளை என்பதன் ஆங்கிலச் சொல் Trust என்பதாகும்.

60.ஏழைக்களுக்கு உதவி செய்வதே …………….. ஆகும்.

1] பகை 2] **ஈகை** 3] வறுமை 4] கொடுமை

61.பிற உயிர்களின் ………………………….. கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.

1] மகிழ்வை 2] செல்வத்தை 3] **துன்பத்தை** 4] பகையை

62.உள்ளத்தில் ………………………….. இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.

1] மகிழ்ச்சி 2] மன்னிப்பு 3] துணிவு 4] **குற்றம்**

63.தீயினால் சுடப்பட்டவர்கூடப் பிழைத்துக் கொள்ள முடியும். ஆனால் ………………… தீங்கு செய்தவர் தப்ப முடியாது.

1] மனிதர்களுக்கு 2] **பெரியவர்களுக்கு** 3] கடவுளுக்கு 4] நண்பர்களுக்கு

64. தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமென்பது ................................ கூறப்படும் அறங்களில் சிறந்தாக கருதப்படுகிறது.

1] திருக்குறளில் 2] நாலடியாரில் 3] **அறநூல்களில்** 4] நன்னூலில்

65. நமக்குத் துன்பம் செய்தவர் நாணும்படி அவருக்கு .............................. செய்வதுதான், அவரை ...................... வழியாகும்.

1] கெடுதல், மேம்படுத்தும் 2] தீமை, தண்டிக்கும்
3] நன்மை, மேம்படுத்தும் 4] **நன்மை, தண்டிக்கும்**

66. இல்லாதவருக்கு தருவதால் உண்டாகும் .............................. அறியாதவர்கள் .................. சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து விடுவார்கள்.

1] துன்பத்தினை, பொருளை 2] துன்பத்தினை, பணத்தினை
3] மகிழ்ச்சியினை, சொத்தினை 4] **இன்பத்தை, பொருளை**

67. மனித வாழ்க்கையில் பொறாமை, .............................., சினம், ................................ ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும்.

1] **பேராசை, கடுஞ்சொல் பேசுதல்** 2] பொய் சொல்லாமை, பேராசை
3] துன்பம், பேராசை 4] துன்பம், பொய்

68. விடுப்பட்ட சொற்களை நிரப்புக.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
.............................. ................................... ....................................

1] **வைத்திழக்கும் வன்க ணவர்** 2] குறியெதிர்ப்பை நீரது உடைத்து
3] தொகுத்தவற்றுள் எல்லாம் தலை 4] போற்றலுள் எல்லாம் தலை

69. தகுந்த சொற்களை கொண்டு நிரப்புக.

பகுத்துண்டு .................... ஓம்புதல் ................................ நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

1] ஆற்றல், எல்லாம் 2] இகழாமை, போற்றலுள்
3] **பல்லுயிர், ஓம்புதல்** 4] ஒறுத்தல், நன்னயம்

70. உள்ளத்தில் ......................... இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும் என்று வள்ளுவர் கூறுவது யாது?

1] உண்மை 2] துன்பம் 3] **குற்றம்** 4] கடுஞ்சொல்

winmeen.com

# 6th Tamil Questions - Part 9 [New Book]

## Term – 3

1. சான்றோர் எதனை சிறந்த பண்பு என்று கருதுகின்றனர்?
   1] குணம் 2] **இரக்கம்**
   3] பொறுமை 4] சினம்
2. உலக உயிர்கள் எல்லாம் துன்பம் இன்றி இன்புற்று வாழ வேண்டும் என்று விரும்பியவர் யார்?
   1] கண்ணதாசன் 2] **புத்தர்**
   3] பாரதியார்
   4] கவிமணி
3. அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் அரண்மனையை விட்டு வந்தவர் யார்?
   1] கவிமணி 2] விநாயகனார்
   3] **புத்தர்பிரான்** 4] அர்னால்டு
4. புத்தர் எந்த மன்னனின் யாகசாலைக்கு சென்ற ஆடுகளை காப்பாற்றி, உயிர் கொலையைத் தடுத்து நிறுத்தினார்?
   1] சமுத்திர குப்தர் 2] புத்தபிரான்
   **3] பிம்பிசாரர்** 4] சந்திர குப்தர்
5. அக்காலத்தில் நாடெங்கும் நடைப்பெற்று வந்த உயிர்க்கொலையை தடுத்தி நிறுத்தியவர் யார்?
   1] பிம்பிசாரர் 2] **புத்தர் பிரான்**
   3] சமுத்திர குப்தர் 4] சந்திர குப்தர்
6. வாழும் உயிரை வாங்கிவிடல் – இந்த
   மண்ணில் எவர்க்கும் எளிதாகும்: என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது? அதனை எழுதியவர் யார்?
   1] புத்தர், ஆசியஜோதி 2] **கவிமணி தேசிய விநாயகனார், ஆசிய ஜோதி**
   3] கண்ணதாசன், ஆசிய ஜோதி 4] பிம்பிசாரர், ஆசிய ஜோதி
7. பொருந்தாத ஒன்றினை தேர்ந்தெடுக்க:
   1.பூதலம் - அ.பூமி
   2.முற்றும் - ஆ.முழுவதும்
   3.கும்பி - இ.வயிறு
   4.பார் - ஈ.உலகம்
   5.அஞ்சினர் - உ.பரந்த உலகம்
   1] 1 மற்றும் 2 சரி 2] 2 மற்றும் 3 சரி

3] 3 மற்றும் 4 சரி 4] **5 மட்டும் சரி**

8. வாழ்கின்ற உயிர்களை அழிப்பது இந்த உலகத்தில் எல்லார்க்கும் ---------- செயல். ஆனால் இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது ---------------- முடியாத செயலாகும்.

1] அரிதான, சிறப்பான 2] **எளிதான, மன்னனாலும்**

3] இயற்கையான, கடவுளாலும் 4] சிறப்பான, சான்றோராலும்

9. ”எல்லா உயிர்களும் மீதும் இரக்கம் கொள்பவரே ------------------------ வாழ்வு வாழ்பவர் ஆவார்” என்று கவிமணி கூறுகிறார்.

1] செல்வ செழிப்போடு 2] **நேர்மையான**

3] பொறுமையான 4] எளிமையான

10. தேசிக விநாயகனார் வாழ்ந்த நூற்றாண்டு?

1] முப்பதாம் நூற்றாண்டு 2] **இருபதாம் நூற்றாண்டு**

3] நாற்பதாம் நூற்றாண்டு 4] பத்தாம் நூற்றாண்டு

11. தேசிக விநாயகனார் முப்பத்தாறு ஆண்டுகள் எந்த துறையில் சிறப்பாக பணியாற்றினார்?

1] கவித்துறை 2] புலவராக

3] ஓவியராக 4] **ஆசிரியராக**

12. கீழே கொடுக்கப்பட்டவைகளில் தேசிக விநாயகனார் எந்த பட்டத்தினை பெற்றவர்?

1] **கவிமணி** 2] பாவலர்

3] சிறந்த எழுத்தாளர் 4] கல்வியில் சிறந்தவர்

13. ஆசியஜோதி என்னும் நூல் எந்த நூலை தழுவி எழுதப்பட்டது?

1] லைட் ஆப் இந்தியா 2] **லைட் ஆப் ஆசியா**

3] லைட் ஆசியா 4] லைட் கிரெட் ஆசியா

14. லைட் ஆப் ஆசியா என்னும் நூலானது எதனைப் பற்றி விவரிக்கிறது?

1] உயிரனங்களின் வாழ்க்கை 2] மனிதரின் வாழ்க்கை வரலாறு

3] **புத்தரின் வாழ்க்கை வரலாறு** 4] விநாயகனாரின் வாழ்க்கை வரலாறு

15. லைட் ஆப் ஆசியா என்னும் நூலினை ஆங்கிலத்தில் எழுதியவர் யார்?

1] விநாயகனார் 2] **எட்வின் அர்னால்டு**

3] கிரேவின் 4] புத்தர் பிரான்

16. ஒருவர் செய்யக்கூடாதது என்று புத்தர் கூறுவது யாது?

1] நல்வினை 2] **தீவினை**

3] பிறவினை 4] தன்வினை

17. எளிதாகும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?

1] எளிது+தாகும் 2] எளி+தாகும்
3] **எளிது+ஆகும்** 4] எளிதா+ஆகும்

18. இனிமை+உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்?
1] இன் உயிர் 2] இனிய உயிர்
3] **இன்னுயிர்** 4] இனிமைஉயிர்

19. புத்தரின் வரலாற்றை கூறும் நூல் எது?
1] **ஆசிய ஜோதி** 2] ஜீவஜோதி
3] நவஜோதி 4] ஜீவன் ஜோதி

20. விடுப்பட்ட சொற்களை நிரப்புக?
காடு மலையெல்லாம் மேய்ந்துவந்து – ஆடுதான்
---------- வருந்திடப் பலையெல்லாம்
தேடிஉம் ---------------- ஊட்டுவதும்
1] மக்கள், கன்று 2] **கன்று, மக்கள்**
3] விலங்கு, கன்று 4] மனிதன், கன்று

21. மனிதன் தனக்கென வாழமால், பிறர்க்கென வாழ எந்த குணங்கள் தேவை?
1] அருள், பொறுமை 2] பரிவு, நன்றி உணர்வு
3] இன்சொல் பேசுதல், அன்பு 4] **மேற்கூறிய அனைத்தும்**

22. மனித நேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் ------------------ கொண்டிருக்கிறது.
1] சுழன்றுக் 2] வாழ்ந்துக்
3] **இயங்கிக்** 4] நின்றுக்

23. தமக்கென முயலா நோன்றாள் – பிறர்க்கென
முயலுநர் உண்மையானே – என்ற பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
1] அகநானூறு 2] **புறநானூறு**
3] தொல்காப்பியம் 4] நாலடியார்

24. ”வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்” என்ற கூற்றினைக் கூறியவர் யார்?
1] பாரதியார் 2] **வள்ளலார்**
3] அன்னை தெரசா 4] புத்தர்

25. வள்ளலார் எவ்வூரில் சத்திய தருமச்சாலையைத் அமைத்து எல்லோருக்கும் உணவளித்தார்?
1] கடலூர் 2] புதுச்சேரி
3] விருத்தாசலம் 4] **வடலூர்**

26. அன்னை தெரசா எந்த நோயின் தாக்கத்தினை எதிர்த்து தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தார்?

1] காசநோய் 2] **தொழுநோய்**

3] புற்று நோய் 4] குடல்நோய்

27. ”வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை” என்ற கூற்றினைக் கூறியவர் யார்?

1] **அன்னை தெரசா** 2] வள்ளலார்

3] புத்தபிரான் 4] இயேசு

28. மக்களுக்கு செய்யும் பணியே இறைவனுக்கு செய்யும் பணி என்று தன் வாழ்நாள் முழுதும் வாழ்ந்த அன்னை தெரசா அவர்களை தேடி வந்த பரிசு எது?

1] **அமைதிக்கான நோபல் பரிசு** 2] அமைதிக்கான பரிசு

3] அமைதிக்கான தங்க பரிசு 4] தங்கப்பணம்

29. அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு வாங்கிய இந்தியர் யார்?

1] **கைலாஷ் சத்யார்த்தி** 2] கைலாஷ் சத்தியமூர்த்தி

3] கைலாஷ் மூர்த்தி 4] கைலாஷ் கணேசன்

30. கைலாஷ் சத்யார்த்தியால் தொடங்கப்பட்ட இயக்கத்தின் பெயர் என்ன?

1] குழந்தைகளை கவனிப்போம் 2] **குழந்தைகளைப் பாதுகாப்போம்**

3] குழந்தைகளை பேணுவோம் 4] குழந்தைகளை காப்போம்

31. குழந்தைகளை ---------------- மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றமாக கைலாஷ் சத்தியமூர்த்தி கருதினார்.

1] ஆதரவற்றவர்களாக 2] **தொழிலாளர்களாக**

3] தலைவர்களாக 4] முதலாளிகளாக

32. எல்லா உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் --------------------

1] மனித வாழ்க்கை 2] மனித உரிமை

3] **மனித நேயம்** 4] மனித உடைமை

33. தம் பொருளைக் கவர்ந்தவரிடம் ---------------- காட்டியவர் வள்ளலார்.

1] கவலை 2] கோபம்

3] வெறுப்பு 4] **அன்பு**

34. பொருத்துக

1.வள்ளலார் - அ. நோயாளிகளிடம் அன்புக் காட்டியவர்

2.அன்னை தெரசா - ஆ.பசிப்பிணி போக்கியவர்

3.கைலாஷ் சத்யார்த்தி - இ.குழந்தைகள் உரிமைக்கு பாடுப்பட்டவர்

1] அ ஆ இ 2] அ இ ஆ

3] இ அ ஆ 4] **ஆ இ அ**

35. முடிவில் ஒரு தொடக்கம் என்னும் கதையானது எதனைப் பற்றி விவரிக்கிறது?

1] வாழ்க்கையின் துன்பம் 2] இரத்ததானம்

3] **உடல் உறுப்புதானம்** 4] கண் தானம்

36. மனித நேயத்தின் மகத்தான சாதனையாக கருதுவது எதனை?

1] இரத்த தானம் 2] நன்கொடை

3] கண் தானம் 4] **உடல் உறுப்புதானம்**

37. மனித நேயத்தின் மகத்தான சாதனையாக கருதப்படும் உடல் உறுப்பு தானத்தை செய்த தம்பதியினரின் பெயர் என்ன?

1] **அசோகன் – புஷ்பாஞ்சலி** 2] கணேசன் – ராதா

3] ராம்கி – கல்யாணி 4] சுரேந்தர் – நித்யா

38. முடிவில் தொடக்கம் கதையில் யாருக்கு இதயம் தேவைப்பட்டது?

1] இளைஞனுக்கு 2] பெண்ணுக்கு

3] **சிறுமிக்கு** 4] பெரியவருக்கு

39. முடிவில் தொடக்கம் என்ற கதையில் யாருடைய இதயம் சிறுமிக்கு பொருத்தப்பட்டது?

1] சிறுமியின் 2] பெரியவரின்

3] **இளைஞனின்** 4] சகோதரனின்

40. சிறுமிக்கு பொறுத்தப்பட்ட இதயத்தை வழங்கிய இளைஞ்னி பெயர் என்ன?

1] அசோகன் 2] **ஹிதேந்திரன்**

3] விஜயேந்திரன் 4] சுரேந்திரன்

41. முடிவில் ஒரு தொடக்கம் கதையில் பாதிக்கப்பட்ட சிறுமி எந்த ஊரை சேர்ந்தவள்?

1] சென்னை 2] திருக்கழுக்குன்றம்

3] **பெங்களூரு** 4] மும்பை

42. உலகத்தாரின் இதயங்களை கொள்ளை கொண்ட ஹிதேந்திரன் எந்த ஊரினை சார்ந்தவர்?

1] மும்பை 2] **திருக்கழுக்குன்றம்**

3] மதுரை 4] திருநெல்வேலி

43. அணி என்பதற்கு என்ன பொருள்?

1] கவிதை 2] **அழகு**

3] வரிசை 4] அணிகலன்

44. கவிஞர்கள் கற்பனைத் திறத்தாலும் புலமையாலும் தாம் இயற்றும் பாடல்களுக்கு அழகு சேர்க்கின்றனர், இதனை விளக்குவது ---------------- ஆகும்.

1] சொல் இலக்கணம் 2] பொருள் இலக்கணம்



winmeen.com

3**] அணி இலக்கணம்** 4] சொற்பொருள் இலக்கணம்

45. கவிஞர் தமது கருத்தைச் சுவையோடு சொல்வதற்கு உதவுவது --------------- ஆகும்.

1] சொற்றொடர் 2] பொருள்

3] **அணி** 4] புலமை

46. மருந்தைக் தேனில் கலந்து கொடுப்பது போல் கருத்துகளை சுவைப்படக் கூறுவது ------- ------------ ஆகும்.

1] கவிதை 2] கதைகள்

3] **அணி** 4] புலமை

47. ஒரு பொருளின் இயல்பு உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது ----------- ஆகும்.

1] சொற்றொடர் 2] உயர்வு நவிற்சி அணி

3] **இயல்பு நவிற்சி அணி** 4] வேற்றுமை அணி

48. இயல்பு நவிற்சி அணியின் மற்றொரு பெயர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1] இயல்பான நவிற்சி அணி 2] **தன்மை நவிற்சி அணி**

3] உயர்வு நவிற்சி அணி 4] வேற்றுபொருள் வைப்பணி

49. ”தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி” என்ற பாடலினை எழுதியவர் யார்?

1] **கவிமணி** 2] பாரதியார்

3] பாரதிதாசன் 4] கண்ணதாசன்

50. ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது ---------------- ஆகும்.

1] **இயல்பு நவிற்சி அணி** 2] உயர்வு நவிற்சி அணி

3] வேற்றுமை அணி 4] சொல்பொருள் அணி

51. ”குளிர்நீரில் குளித்தால்
கூதல் அடிக்கமென்று
வெந்நீரில் குளித்தால்
மேலே கருக்குமென்று” என்ற பாடல்வரிகள் எடுத்துரைக்கும் அணி எது?

1] இயல்பு நவிற்சி அணி 2] தன்மை நவிற்சி அணி

3] **உயர்வு நவிற்சி அணி** 4] வேற்றுமை அணி

52. பொருத்துக

1.மனித நேயம் - அ.Lorry

2.கருணை - ஆ.Nobel Prize

3.உறுப்புமாற்று அறுவைசிகிச்சை - இ.Mercy

4.நோபல் பரிசு - ஈ.Transplantation

5.சரக்குந்து - உ.Humanity

1] அ ஆ இ ஈ உ 2] **உ இ ஈ ஆ அ**

3] அ இ உ ஈ ஆ 4] ஈ அ ஆ இ உ

53. எள்ளாமை வேண்டுவான் என்பான எனைத்துஒன்றும்

------------------ ---------------- -----------------

விடுப்பட்ட சொற்களை நிரப்புக.

அ.ஆவது போலக் கெடும் ஆ.தள்ளாது புத்தேள் உலகு

இ.செய்யாமை மாசுஅற்றார் கோள் ஈ.**கள்ளாமை காக்கதன் நெஞ்சு**

54. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயம் செய்து விடல் – இக்குறள் எந்த தலைபின் கீழ் இடம் பெற்றுள்ளது?

1] கள்ளாமை 2] **இன்னா செய்யாமை**

3] கொல்லாமை 4] ஊக்கமுடைமை

55. உள்ளதை உள்ளபடி கூறும் அணியின் பெயர் என்ன?

1] உயர்வு நவிற்சி அணி 2] **இயல்பு நவிற்சி அணி**

3] வேற்றுமை அணி 4] வேற்றுபொருள் வைப்பணி

56. அன்னை தெரசாவால் காப்பாற்றுப்பட்டு, தொழுநோயால் கடுமையான வேதனைக்கு உள்ளானவர் யார்?

1] பெரியவர் 2] **மூதாட்டி**

3] அன்னை தெரசாவின் தங்கை 4] இளைஞன்

57. தொழுநோயால் பாதிக்கப்பட்ட மூதாட்டியுடன் உடனிருந்தது யார்?

1] நாய் 2] **பூனை**

3] அன்னை தெரசா 4] கைலாஷ் சத்யார்த்தி

58. ஆயிரக்கணக்கான நோயாளிகள் எந்த நோயால் பாதிக்கப்பட்டு உதவி செய்ய யாருமின்றி வாடுவதை அன்னை தெரசா கண்டார்?

1] புற்றுநோய் 2] **தொழுநோய்**

3] குடல் நோய் 4] பக்கவாதம்

59. வள்ளலார் மக்களின் ----------------- கண்டு உள்ளம் வாடினார், அதனை நீக்குவும் விரும்பினார்.

1] பசிப்பிணியைக் 2] **வறுமையைக்**

3] திருட்டுதனத்தைக் 4] நோயின் தன்மைக்

60. ஆயிரம் பாவங்கள் செய்வதெல்லாம் – ஏழை

ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ? என்ற பாடல் வரிகளை எழுதியவர் யார்?

1] **கவிமணி தேசிக விநாயகனார்** 2] பாரதியார்

3] கண்ணதாசன் 4] பாரதிதாசன்

winmeen.com

# NOTES

# QUESTIONS

## 6ஆம் வகுப்பு தமிழ்
## இரண்டாம் பருவம்



## 6ஆம் வகுப்பு இரண்டாம் பருவம்

## தமிழ் ஒரு மதிப்பெண் இரண்டு மதிப்பெண் வினாக்கள்

### 1. கண்ணெனத் தகும்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர்கள் நூல்களை _______ க் கற்க வேண்டும்.

அ. மேலோட்டமாக **ஆ. மாசற** இ. மாசுற ஈ. மயக்கமுற

2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. இடம் + மெல்லாம் ஆ. **இடம் + எல்லாம்**

இ. இட + எல்லாம் ஈ. இட + மெல்லாம்

3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. மச + அற ஆ. **மாசு + அற** இ. மாச+உற ஈ. மாசு +உற

4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. **குற்றமில்லாதவர்** ஆ. குற்றம் இல்லாதவர்

இ. குற்றமல்லாதவர் ஈ. குற்றம் அல்லாதவர்

5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. சிறப்புஉடையார் ஆ. **சிறப்புடையார்**

இ. சிறப்படையார் ஈ. சிறப்பிடையார்

6. ‘மன்னனும்’ எனத்தொடங்கும் பாடல் அமைந்திருக்கும் நூல் _________

அ. ஆத்திச்சூடி ஆ. கொன்றைவேந்தன் **இ. மூதுரை** ஈ. நல்வழி

7. மூதுரை நூலின் ஆசிரியர்

அ. **ஔவையார்** ஆ. பொன்முடியார் இ. குமர குருபரர் ஈ. சிவப்பிரகாசர்

**குறுவினாக்கள்**

**1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

மன்னனையும் மனக்குற்றம் நீங்கும்படி கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் கற்றவரே மன்னனைக் காட்டிலும் சிறந்தவர். ஏனென்றால், மன்னனுக்கு அவனது நாட்டில் மட்டும் சிறப்பு உண்டு. கல்வி கற்றவருக்கோ அவர் செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்பு உண்டாகும்.

**2. மூதுரை – குறிப்பு வரைக.**

மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள். சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது. இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் ஔவையார்.

**3. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

எத்தனையோ செல்வங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை மூன்று. அருட்செல்வம் அவ்வுலகத்துக்கு உரியது. பொருட் செல்வம் இவ்வுலகத்துக்கு உரியது. கல்விச் செல்வம் எவ்வுலகத்தும் சிறப்புத்தருவது ; ஏழு பிறப்புகளிலும் உதவுவது; கொடுத்தால் குறையாது; புகழ் தருவது; அழியாதது. இவற்றுள் "கொடுத்தால் குறையாது" என்பதையே கல்வியின் சிறப்பாக நான் கருதுகிறேன்.

**4. கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.**

**கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகள்:**

1. கல்லாதவர்க்குச் சான்றோர் அவையில் மதிப்பு இருக்காது; அங்கு அவர் அமைதியாய் இருப்பது ஒரு நாய் இருப்பது போன்றது; ஏதாவது பேசினால் அது நாய் குரைப்பது போன்றது.
2. கல்லாதவர் அறிவு சில சமயங்களில் – சமயோசிதமாய் – வெளிப்பட்டாலும் அதனை அறிவுடையார் ஏற்கமாட்டார்.
3. கல்லாதவர், அரசு அலுவலகங்கள், வங்கிகள் முதலியவற்றிற்குச் சென்றால் தம்முடைய பணிகளை முடிக்க இடர்ப்படுவர்; பிறர் உதவியை நாடியே நிற்பர்.
4. தம்மிடம் உள்ள பணத்தை எண்ணிக்கையிடவும் தெரியாமல் திண்டாடுவர்.

**கல்வியே அழியாத செல்வம்**

கல்வி என்பது வாழும் உயிர்களுக்கெல்லாம் பொது. ஒரு செடி கதிரவனது ஒளியைப் பெறுவதற்காகச் சற்றே வளைவது அதன் கல்வி எனலாம். தாயினை நன்றாகப் பிடித்துக் கொள்ளத்

தெரியாத குரங்குக் குட்டியைக் ‘கல்லாவன்பறழ்’ என நூல்கள் கூறும். குழந்தை பிறந்தது முதலாகக் கற்கத் தொடங்கிவிடுகிறது. கண்டும் கேட்டும் அறிவைப் பெறும் குழந்தை வாசிக்கக் கற்றுக்கொள்ள எடுத்துக் கொள்ளும் நிலையையே ‘கல்விகற்றல்’ என்கிறோம்.

கல்வியின் பெருமையை எடுத்துக் கூறும் நூல்கள் பல. மனிதனுக்குக் கண் போன்றது கல்வி என்பார் திருவள்ளுவர். எண் எழுத்து இகழேல் என ஆத்திசூடியிலும், எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் எனக் கொன்றை வேந்தனிலும் ஔவையார் கூறுவார். கல்வியின் பிரிவுகள் பலப் பல. ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். இன்றைக்கோ அவை பல நூறு என வளர்ந்து விட்டன. பழங்காலத்துக் கல்வியாகிய ‘போர்க்கல்வி’ தொடங்கி இன்றைய கணினிக் கல்விவரை அனைத்தும் மனித இனவளர்ச்சியின் அடையாளங்களே. ‘கல்வி கரை இல, கற்பவர் நாள் சில’ என நாலடியார் என்னும் நூல் சொல்வது உண்மையே!

கல்விச் செல்வம் அழிவற்றது. பொருட் செல்வம் அழியும் தன்மையுடையது.

**‘கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**

**மாடல்ல மற்றை யவை’**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**வைப்புழிக் கோட்படா, வாய்த்து ஈயின் கேடு இல்லை**

**மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்**

**எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன**

**விச்சை மற்று அல்ல பிற**

என்பது நாலடியார்.

“வெள்ளத்தே போகாது; வெந்தணலில் வேகாது; கொள்ளத்தான் போகாது;

கொடுத்தாலு குறையாது ; கள்ளருக்கும் எட்டாது; காவலுக்குள் அமையாது” என்று கல்வியின் பெருமையைப் பெரியோர் கூறுவர்.

அழியாத செல்வமாகிய கல்வியைச் சேர்ப்போம். அழியாத புகழை ஈட்டுவோம்.

1. கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே - வெற்றிவேற்கை

2. மலைவாழை அல்லவோ கல்வி – நீ

வாயார உண்ணுவாய் போ என் புதல்வி - பாரதிதாசன்

## துன்பம் வெல்லும் கல்வி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர் பிறர் ______ நடக்கக் கூடாது.

அ. போற்றும்படி **ஆ. தூற்றும்படி** இ. பார்க்கும்படி ஈ. வியக்கும்படி

2. நாம் ______ சொற்படி நடக்க வேண்டும்.

அ. இளையோர் ஆ. ஊரார் **இ. மூத்தோர்** ஈ. வழிப்போக்கர்

3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ. கையில் + பொருள் ஆ, கைப் + பொருள்

**இ. கை+பொருள்** ஈ. கைப்பு + பொருள்

4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ. மானம்இல்லா **ஆ. மானமில்லா** இ. மானமல்லா ஈ. மானம்மில்லா

5. துன்பத்தை வெல்லும் ______ வேணும்.

**அ. கல்வி** ஆ. செல்வம் இ. துணிவு ஈ. காலம்

**II. சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**1. மனமாற்றம் :** கலிங்கப்போரில் அசோகர்க்கு மனமாற்றம் ஏற்பட்டது.

**2. ஏட்டுக்கல்வி :** ஏட்டுக் கல்வி வாழ்க்கைக்கும்ப் பயன்பட வேண்டும்.

**3. நல்லவர்கள் :** உலகில் நல்லவர்கள் பலர் உள்ளனர்.

**4. சோம்பல்** : சோம்பல் தவிர்த்தால் வாழ்வில் உயரலாம்.

**III. குறுவினாக்கள்**

**1. நாம் யாருடன் சேரக் கூடாது?**

தன்மானம் இல்லாத கோழைகளுடன் நாம் சேரக் கூடாது.

**2. எதை நம்பி வாழக் கூடாது?**

மற்றவர் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது.

**3. இந்தப் பாடலின் முதல் இருவரிகள் நினைவூட்டும் திருக்குறள் எது?**

ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே – நீ

ஏன்படித்தோம் என்பதையும் மறந்து விடாதே.

இந்த வரிகள் நினைவூட்டும் திருக்குறள்:

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக.

**4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?**

வெற்றிமேல் வெற்றி வரவும், அவற்றால் பெருமை பெறவும் மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும்.

**5. நாம் எதை மறந்துவிடக் கூடாது?**

நாம் கற்றதன் பயனை மறந்துவிடக் கூடாது.

**6. நாம் எப்படி நடக்கக் கூடாது?**

நாம் நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது.

**7. நாம் எவற்றை மீறக் கூடாது?**

நாம் பெரியோர் சொல்லும் அறிவுரைகளை மீறக் கூடாது.

**8. நாம் எதை விட்டு விட வேண்டும்?**

பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை நாம் விட்டுவிட வேண்டும்.

**9. வற்றாமல் நம்மோடு வாழவேண்டியவை யாவை?**

பெற்ற தாயின் புகழும் பிறந்த நாட்டின் புகழும் வற்றாத வகையில் நாம் வாழ வேண்டும்.

**10. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திற்கு உரிய சிறப்புப் பெயர் யாது?**

பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரத்திற்கு உரிய சிறப்புப் பெயர் " மக்கள்" கவிஞர் என்பது.

**11. நாம் எவ்வாறு வாழக்கூடாது எனப் பட்டுகோட்டையார் கூறுகிறார்?**

நாம் நூல்களைக் கற்பதோடி இருந்துவிடக்கூடாது; கற்றதன் பயனை மறக்கக் கூடாது; நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது; நல்லவர்கள் குறை சொல்லும்படி வளரக் கூடாது;

பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக்கூடாது; பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்பு நெறி மாறக் கூடாது; பிறர் உழைப்பில் வாழக் கூடாது; தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

**12. நாம் எவற்றையெல்லாம் கொள்ள வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?**

நாம், துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும்; சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேண்டும்; வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி நடக்க வேண்டும்; இவை மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெற வேண்டும்; பெற்ற தாயின் புகழும் நம் நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

**13. பட்டுக்கோட்டையார் பாடற் பொருளைத் தொகுத்துக் கூறுக.**

நாம் நூல்களைக் கற்பதோடு இருந்துவிடக்கூடாது; கற்றதன் பனை மறக்கக் கூடாது; நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது. நல்லவர்கள் குறை சொல்லும்படி வளரக் கூடாது;

பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக்கூடாது; பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்பு நெறி மாறக் கூடாது; பிறர் உழைப்பில் வாழக் கூடாது; தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது; பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை விட்டுவிட வேண்டும்.

நாம் துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும்; சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேண்டும்; வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி நடக்க வேண்டும்; இவை மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெற வேண்டும்; பெற்ற தாயின் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழ வேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்.

வரும்பகைவர் படைகண்டு
மார்தட்டிக் களம் புகும்
மக்களைப் பெற்றோர் வாழ்க!

மனம் கொண்ட துணைவர்க்கு
விடைதந்து வேல்தந்த
மறக்குலப் பெண்கள் வாழ்க!

உரங்கொண்டு போராடி
உதிரத்தில் நீராடி
அறம் காத்த உன்னம் வாழ்க!

திறமான புகழ்கொண்ட
திடமான தோள்களும்
செயல் வீரர் மரபும் வாழ்க!

- **பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்**

## கல்விக்கண் திறந்தவர்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் _______

அ. ஆடு மேய்க்க ஆள் இல்லை **ஆ. ஊரில் பள்ளிக்கூடம் இல்லை**

இ. வழி தெரியவில்லை ஈ. பேருந்து வசதியில்லை

2. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ. **பசி + இன்றி** ஆ. பசி+யின்றி இ. பசு +இன்றி ஈ. பசு + யின்றி

3. காடு+ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது______

அ. **காட்டாறு** ஆ. காடாறு இ. காட்டுஆறு ஈ. காடுஆறு

4. படிப்பறிவு என்னும்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______

அ. **படிப்பு + அறிவு** ஆ. படிப்பு+அறிவு இ. படி+அறிவு ஈ. படிப்பு+ வறிவு

5. _______ தூரத்தில் ஆரம்பப் பள்ளி, ______ தூரத்தில் நடுநிலைப் பள்ளி, _______ தூரத்தில் உயர்நிலைப்பள்ளி இருக்க வேண்டும் என்று காமராசர் திட்டம் வகுத்தார்.

அ. ஐந்து மைல், ஒரு மைல், மூன்று மைல்

ஆ. **ஒரு மைல், மூன்று மைல், ஐந்து மைல்**

இ. மூன்று மைல், ஒரு மைல், ஐந்து மைல்

ஈ. ஒரு மைல், ஐந்து மைல், மூன்று மைல்

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**அ) வகுப்பு :** நான் ஆறாம் வகுப்பு மாணவன்.

**ஆ) உயர்கல்வி :** உயர்கல்வி கற்க வெளியூருக்குப் போவேன்.

**இ) சீருடை :** சீருடை அணியாத மாணவனை ஆசிரியர் கண்டித்தார்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குழந்தைகளைப் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்கச் ______ அறிமுகப்படுத்தினார்.

**விடை: சீருடைத் திட்டத்தை**



winmeen.com

2. காமராசரைக் ‘கல்விக் கண் திறந்தவர்’ என மனமாரப் பாராட்டியவர்________

**விடை: தந்தை பெரியார்**

**குறுவினாக்கள்**

**1. காமராசர் காலத்தில் தொடக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?**

காமராசர் காலத்தில் தொடக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பொறியியற் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் என்பன.

**2. காமராசர் முதல்வராய்ப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?**

காமராசர் முதல்வராய்ப் பொறுப்பேற்ற நேரத்தில் தமிழகத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டிருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.இதுவே கல்விக்காக அவர் செய்த முதற் பணி.

**3. காமராசரின் சிறப்புப் பெயர்கள் யாவை?**

காமராசரின் சிறப்புப் பெயர்கள்: பெருந்தலைவர், கறுப்பு காந்தி, படிக்காத மேதை, ஏழைப் பங்காளர், கர்ம வீரர், தலைவர்களை உருவாகுபவர், கல்விக்கண் திறந்தவர், கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர்.

**4. காமராசரின் மதிய உணவுத் திட்டம் குறித்து எழுதுக.**

பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் தேசியக் கொடி ஏற்றுமாறு அழைக்கக் காமராசர் எழுந்தார். அனைவரும் எழுந்து நின்றார்.அப்போது ஒரு மாணவன் மயங்கிக் கீழே விந்தான். அனைவரும் பதற்றம் அடைந்தனர். தண்ணீர் தெளித்து அவனை எழுப்பினர்.

மயக்கம் தெளிந்த சிறுவனிடம் அவர் “காலையில் சாப்பிட்டாய” எனக் கேட்டார். அவன் “எதுவும் சாப்பிடவில்லை” என்றான். அதறு அவர் “ஏன்?” என்று கேட்டார். மாணவன் “சாப்பிட எதுவும் இல்லை” என்று பதில் கூறினான். இதற்குப் பிறகு படிக்க வரும் மாணவர்களுக்கு ஒருவேளை உணவாவது வழங்க வேண்டும் என்று முடிவு செய்தார் அவர். காமராசரின் மதிய உணவுத் திட்டம் இவ்வாறு உருவானது.

**5. காமராசர் கல்விப் புரட்சிக்கு வித்திட்டவர் என்பதை விளக்குக.**

காமராசர் முதல் அமைச்சராய்ப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆனையிட்டார். மாநிலம்

முழுக்க அனைவரும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார். தமிழ்நாட்டில் பல கிளை நூலகங்களைத் தொடங்கினார். மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றை தொடக்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசரே ஆவார்.

**6. காமராசருக்குத் தமிழக அரசு செய்துள்ள சிறப்புகள் யாவை?**

- மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு ‘மதுரை காமராசர் பல்கலைக்கழகம்’ எனப்பெயர் சூட்டப்பட்டது.
- நடுவண் அரசு 1976 இல் பாரதரத்னா விருது வழங்கியது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் மற்றும் விருதுநகர் இல்லம் ஆகியன அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லங்களாக மாற்றப்பட்டன.
- சென்னை மெரினா கடற்கரையில் சிலை நிறுவப்பட்டது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

**நூல்களின் பட்டியல்**

1. அக்னிச் சிறகுகள் - ஆ.ப.ஜெ. அப்துல்கலாம்
2. அழகின் சிரிப்பு - பாரதிதாசன்
3. என் சரித்திரம் - டாக்டர் உ.வே.சாமிநாதையர்
4. கப்பலோட்டிய தமிழர் - ம.பொ.சி
5. கல்லோ? காவியமோ? - இன்பசேகரன்
6. கள்ளோ? காவியமோ? - டாக்டர்.மு.வ.
7. கிரௌஞ்சவதம் - காண்டேகர் (கா.ஸ்ரீ.ஸ்ரீ)
8. கீதாஞ்சலி - தாகூர்
9. சத்திய சோதனை - மகாத்மாகாந்தி
10. சீறாப்புராணத் திறனாய்வு - சிலம்பொலி செல்லப்பன்
11. தமிழ்க் காதல் - டாக்டர். வ.சுப. மாணிக்கம்
12. திருக்குறள் - திருவள்ளுவர்
13. திருவாசகம் - மாணிக்கவாசகர்

14. தேம்பாவணி ஆராய்ச்சி - மரிய அந்தோணி
15. பத்துப்பாட்டு ஆராய்ச்சி - டாக்டர். மா. இராசமாணிக்கனார்
16. பொன்னியின் செல்வன் - கல்கி
17. மலரும் மாலையும் - கவிமணி
18. மலைக்கள்ளன் - நாமக்கல் கவிஞர்
19. வீரவாஞ்சி - ம. கண்ணன்
20. ஜய ஜய சங்கர - ஜெயகாந்தன்

**கவிமணி**

சிறப்புகள்: செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு மலரும் மாலையும் என்றும் உரிமையாகும்.

நூல்கள்: மலரும் மாலையும், தேவியின் கீர்த்தனங்கள், ஆசிய ஜோதி, உமர்கய்யாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம். காந்தளூர்ச் சாலை, கவிமணியின் உரைமணிகள் என்பன இவருடைய படைப்புகள்.

காலம்: 27.7.1876 – 26.9.1954

**இன எழுத்துகள்**

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

அ. மஞ்சள் ஆ. வந்தான் இ. **கல்வி** ஈ. தம்பி

2. தவறான சொல்லை வட்டமிடுக.

அ. கண்டான் **ஆ. வென்ரான்** இ. நண்டு ஈ. வண்டு

**பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

| **பிழையான சொல்** | **திருத்தம்** |
|---|---|
| தெண்றல் | தென்றல் |
| கன்டம் | கண்டம் |
| நன்ரி | நன்றி |

மன்டபம் மண்டபம்

**சிறுவினா.**

**1. இன எழுத்துகள் என்றால் என்ன?**

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

**2. இன எழுத்துகள் எவ்வாறு அமைகின்றன?**

ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

**3. உயிர் எழுத்துகளில் இன எழுத்துகள் யாவை?**

மெய்யெழுத்துகளைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

**இருபொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமைக்க.**

**(நூல், மாலை, ஆறு, படி)**

**1. நூல்** - ஆடை தைக்க உதவுவது நூல்.

- மூதுரை அற நூல்

**2. மாலை** - பூக்களால் உருவாவது மாலை.

- பகலுக்கும் இரவுக்கும் இடைப்பட்ட நேரம் மாலை.

**3. ஆறு**- ஐந்துக்கு அடுத்த எண் ஆறு.

- ஊருக்கு அழகு தருவது ஆறு.

**4. படி** - மாடிக்குப் போக உதவுவது படி.

- நூலைப்படி.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைவர்களின் பிறந்த நாள் எந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது?**

**(குழந்தைகள் தினம், மாணவர் தினம், ஆசிரியர் தினம், தெசிய இளைஞர் தினம், கல்வி வளர்ச்சி நாள்)**

1. காமராசர் பிறந்த நாள் **கல்வி வளர்ச்சி நாள்.**

2. டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் பிறந்த நாள் **ஆசிரியர் தினம்.**

3. அப்துல்கலாம் பிறந்த நாள் **மாணவர் தினம்.**

4. விவேகானந்தர் பிறந்த நாள் **தேசிய இளைஞர் தினம்.**

5.ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் **குழந்தைகள் தினம்.**

## காமராசர்

**முன்னுரை:**

பெருந்தலைவர், படிக்காத மேதை, கர்ம வீரர், கறுப்புக் காந்தி என்றெல்லாம் மக்களால் போற்றப்படுபவர் காமராசர். அவருடைய இளமைக்காலம், கல்விப்பணி, தொண்டுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இளமைக் காலம்:**

காமராசர் தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள விருதுநகரில் 15.7.1903 இல் பிறந்தார். இவர் தந்தை குமாரசாமி ; தாய் சிவகாமி. காமராசர் இளமையிலேயே துணிவும் பொறுமையும் நுட்பமான அறிவும் உடையவராய் விளங்கினார். ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போதே படிப்பு நிறுத்தப்பட்டது. தாய்மாமன் கடையில் வியாபார அனுபவம் பெறக் காமராசர் அனுப்பப்பட்டார். காமராசர் பத்திரிக்கைகள் படித்தும் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்றும் அரசியலில் ஈடுபாடு கொண்டார்; உப்புச் சத்தியாக் கிரகம் சட்டமறுப்பு இயக்கம் , வெள்ளையனே வெளியேறு இயக்கம் எனப்பல போராட்டங்களில்

கலந்து கொண்டு சிறப்பட்டார். பல காலம் பல போராட்டங்களில் ஈடுபட்ட்தால் சிறையில் கழித்த மொத்த நாள்கள் 3000 எனப் புள்ளி விவரம் கூறுகிறது.

**காமராசரின் கல்விப்பணிகள்:**

காமராசர் 1954 இல் தமிழ் நாட்டின் முதலைச்சரானார். காமராசர் முதல் அமைச்சராய்ப்பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார். மாநிலம் முழுக்க அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றிப் படிக்கமதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார். தமிழ்நாட்டில் பல கிளை நூலகங்களைத் தொடங்கினார். மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைத் தொடங்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசரே ஆவார்.

**நிறைவேற்றிய பிறதிட்டங்கள்:**

காமராசர் ஒன்பது ஆண்டுகாலம் முதலமைச்சராய் இருந்தார். சென்னைத் துறைமுக விரிவாக்கம், நெய்வேலி நிலக்கரித் திட்டம், நீலகிரித் திரைப்படச் சுருள் தொழிற்சாலை, கிண்டி ஆறுவைச் சிகிச்சைத் தொழிற்சாலை. ஆவடி ரயில்வே வானத் தொழிற்சாலை, மேட்டூர்க் காகிதத் தொழிற்சாலை. குந்தா மின்திட்டம் முதலிய பல அவரது ஆட்சிக் காலத்தில் செயற்பாட்டுக்கு வந்தன.

**முடிவுரை:**

காமராசர் காந்தியவாதி, நேர்மையான தொண்டர்; தூய்மையான அரசியல்வாதி. காந்தி பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாள் காமராசர் மறைந்தார். ஆண்டு 1975. என்றென்றும் அவர் புகழ் நிற்கும். காமராசரது பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

## 2. பாடறிந்து ஒழுகுதல்

## கவிதைப் பேழை

## ஆசாரக் கோவை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிறரிடம் நான் ______ பேசுவேன்.

அ. கடுஞ்சொல் **ஆ. இன்சொல்** இ. வன்சொல் ஈ. கொடுஞ்சொல்

2. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது _______ ஆகும்.

அ. வம்பு ஆ. அமைதி இ. அடக்கம் **ஈ. பொறை**

3. அறிவு +உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்____

**அ. அறிவுடைமை** ஆ. அறிவுஉடைமை இ. அறியுடைமை ஈ. அறிஉடைமை

4. இவை + எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______

அ. இவைஎட்டும் **ஆ. இவையெட்டும்** இ. இவ்வெட்டும் ஈ. இவ்எட்டும்

5. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __

அ. நன்றி+ யறிதல் **ஆ. நன்றி + அறிதல்** இ. நன்று + அறிதல் ஈ. நன்று+அறிதல்

6. பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______

அ. பொறுமை+உடைமை ஆ.பொறை+யுடைமை

இ. பொறு+யுடைமை **ஈ. பொறை+உடைமை**

7. ஆசாரக் கோவையின் ஆசிரியர்______

அ. கணிதமேதாவியார் ஆ. காரியாசான்

இ. **பெருவாயின் முள்ளியார்** ஈ. பொய்கையார்

**குறுவினாக்கள்**

**1. எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது எது?**

எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது துன்பம்.

**2. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?**

நாம் நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ள வேண்டும்.

**3. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?**

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல், பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல், இனிய சொற்களைப் பேசுதல், எவ்வுயிருக்கும் துன்பம் செய்யாதிருத்தல், கல்வி அறிவு பெறுதல், பிறருக்கு உதவுதல், அறிவுடையவராய் இருத்தல், நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.

## கண்மணியே கண்ணுறங்கு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பாட்டிசைத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ. பாட்டி+சைத்து ஆ. பாட்டி+இசைத்து

இ. **பாட்டு + இசைத்து** ஈ. பாட்டு+சைத்து

2. கண்ணுறங்கு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____

அ. **கண் + உறங்கு** ஆ. கண்ணு+உறங்கு

இ. கண் + றங்கு ஈ. கண்ணு + றங்கு

3. வாழை + இலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________

அ. **வாழையிலை** ஆ. வாழைஇலை இ. வாழைலை ஈ. வாழிலை

4. கை + அமர்த்தி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______

அ. கைமர்த்தி ஆ.கைஅமர்த்தி இ. **கையமர்த்தி** ஈ. கையைமர்த்தி

5. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்______

அ. **மறைந்த** ஆ. நிறைந்த இ. குறைந்த ஈ. தோன்றிய

6. முத்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்தால் கிடைப்பது ______

அ. மு+தமிழ் ஆ. முத்து+தமிழ்

இ. முத்து+அமிழ் **ஈ. மூன்று+தமிழ்**

**குறுவினா.**

**1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?**

தாலாட்டுப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன.

**2. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?**

இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று வாழைஇலை விரித்து அறுசுவை உணவளித்துபசாரம் செய்ய வேண்டும் என நாட்டுப் புறப்பாடல் கூறுகிறது.

**3. சேர, சோழ, பாண்டிய நாடுகளில் சிறப்புப் பெற்றவை யாவை?**

சேர நாட்டில் சிறப்புடையவை முத்தேன். அவை கொம்புத்தேன், பொந்துத்தேன், கொசுத்தேன் என்பன.

சோழ நாட்டில் சிரப்புடையவை முக்கனி. அவை மா, பலா, வாழை ஆகும்.

பாண்டிய நாட்டுக்குச் சிறப்புத் தருவன முத்தமிழ். அவை இயல், இசை, நாடகம் ஆகும்.

**4. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறார்?**

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடு உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூப் பதித்த தந்தத்தாஅல் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உனவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி, அணை

கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக! என்று, தாய் தன் குழந்தையைப் பாராட்டுகிறாள்.

**5. வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுக்க.**

**வாய்மொழி இலக்கிய வகைகள்:** மீனவர் பாடல், வேட்டுவ்வரி, குரலைப் பாட்டு, குன்றக் குரவை, அம்மானை, ஊஞ்சற்பாடல், உலக்கைப் பாட்டு, கும்மி, தாலாட்டு.

## உரைநடை உலகம்

## தமிழர் பெருவிழா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்துஎழுதுக.**

1. கதிர் முற்றியதும் ______ செய்வர்.

**அ. அறுவடை** ஆ. உரமிடுதல் இ. நடவு ஈ. களையெடுத்தல்

2. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் _______ கட்டுவர்.

அ. செடி ஆ. கொடி **இ. தோரணம்** ஈ. அலங்கார வளைவு

3. பொங்கல்+ அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்________

அ. **பொங்கலன்று** ஆ. பொங்கல்அன்று

இ. பொங்கலென்று ஈ. பொங்கஅன்று

4. போகிப் பண்டிகை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்_______

அ. **போகி +பண்டிகை** ஆ. போ+பண்டிகை

இ.போகு + பண்டிகை ஈ. போகிப்+பண்டிகை

5. பழையன கழிதலும் ______ புகுதலும்.

அ. **புதியன** ஆ. புதுமை இ. புதிய ஈ. புதுமையான



winmeen.com

6. பச்சைப் பசேல் என்ற வயலைக் காண இன்பம் தரும்

பட்டுப்போன மரத்தைக் காண்பது ______ தரும்.

அ. அயர்வு ஆ. கனவு **இ. துன்பம்** ஈ. சோர்வு

7. ______ நன்றி கூறிச் சிறப்புச் செய்யும் விழா பொங்கல் விழா.

அ. **கதிரவனுக்கு** ஆ. சந்திரனுக்கு இ. முருகனுக்கு ஈ. விரருக்கு

8. _________மாதத்தின் கடைசி நாள் போகிப் பண்டிகை.

அ. **மார்கழி** ஆ. தை இ. மாசி ஈ. பங்குனி

9. தைம் முதல் நாளில் தொடங்கும் ஆண்டு_______

அ. தமிழ் ஆண்டு ஆ. ஆங்கில ஆண்டு

**இ. திருவள்ளுவர் ஆண்டு** ஈ. சாலிவாகன ஆண்டு

10. திருவள்ளுவர் பொ.ஆ.மு._______இல் பிறந்தார்.

அ. 13 **ஆ. 31** இ. 41 ஈ. 21

**குறுவினா.**

**1. போகிப் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?**

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள். இது மார்கழி மாதத்தின் இறுதி நாள் ஆகும்.

**2. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்று செலுத்துகின்றனர்?**

உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குவதால் உழவர்கள் மாடுகளுக்கு நன்று செலுத்துகின்றனர்.

**3. தமிழர் வழிபாட்டு முறை யாது?**

இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கை முறை ஆகும். இயற்கையைக் கடவுளாக வணங்குதல் தமிழர் மரபு. தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கையைப் போற்றும் வகையிலேயே அமைந்து இருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது பொங்கல் விழா ஆகும்.

**4. அறுவடைத் திருநாள் – குறிப்பு வரைக.**

உழவர்கள் ஆடித்திங்களில் விதைப்பர். தைத்திங்களில் அறுவடை செய்து பயனடைவர். தைத்திங்கள் முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். எனவே இத்திருவிழாவை அறுவடைத் திருவிழா என்பர்.

**5. மஞ்சு விரட்டு பற்றி எழுதுக.**

மாட்டுப் பொங்கள் நாளிலோ அதற்கு அடுத்த நாளிலோ சில ஊர்களில் மஞ்சு விரட்டு நடைபெறும். மஞ்சுவிரட்டு என்பது மாடுகளை அடக்கித் தழுவும் வீர விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு மாடு பிடித்தல்,ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுத என்றும் அழைக்கப்படுகிறது.

**6. காணும் பொங்களை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?**

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும். மக்கள் இந்நாளில் உற்றார் உறவினர் மற்றும் நண்பர் விடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர்; குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர்; மேலும் பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்துவர்; விளையாட்டுப் போட்டிகள் நட்த்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டுவர்.

**7. விழாக்களினால் விளையும் பயன்கள் யாவை?**

உறவுகள் ஒன்றுகூடிக் கொண்டாடும் விழாக்கள் மனத்திற்கு மகிழ்வைத் தரும்;மனிதரிடையே ஒற்றுமையை வளர்க்கும். தமிழரின் நாகரிகம், வீரம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவை நமது பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கின்றன.

**8. போகித் திருநாள் அன்றும் இன்றும் கொண்டாடப்படும் முறை பற்றி எழுதுக.**

வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக் கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப் பண்டிகை இந்திர விழாவாகக் கொண்டாடப்பட்டது.

“பழையன கழிதலும் புதியன புகுதலும்” என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள்.இது இன்றையமுறை.

**9. பொங்கல் திருநாளை மக்கள் எங்ஙனம் கொண்டாடுகின்றனர்?**

தைம் மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாள் ஆகும். மக்கள் இத்திருநாளன்று வாசலில் வண்ணக் கோலமிடுவர்; மாவிலைத் தோரணம் கட்டுவர்; புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம், முந்திரி, நெய் சேர்த்துப் பொங்கலிடுவர். பொங்கல் என்பதற்குப் பொங்கிப்பெருகி வருவது என்றுப் பொருள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் “பொங்கலோ பொங்கல்” என்று மங்கல ஒலி எழுப்பிப் போற்றுவர். பொங்கல் பொங்கி வருவது போல் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கிப் பெருகும் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். பின்னர்த் தலைவாழை இலையிட்டுப் பொங்கலைப் படைப்பர். கரும்பு, மஞ்சள் கொத்து, தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு ஆகியவற்றை வைத்து வழிபடுவர். விளைச்சலுக்குக் காரணமான கதிரவனை நன்றியோடு வணங்கி மகிழ்வர். சர்க்கரைப் பொங்கலை அனைவருக்கும் அளித்துத் தாமும் உண்டு மகிழ்வர்.

**10. மாட்டுப் பொங்கல் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?**

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல். உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மக்கள், மாட்டுப் பொங்கலன்று மாடுகளை நீராட்டுவர்; கொம்புகலைச் சீவி வண்ணங்கள் தீட்டுவர்; மாடுகளின் கழுத்திலே மணிகளைக் கட்டுவர்; பூவும் தழையும் சூட்டுவர்; மாட்டுக்கு மஞ்சள், குங்குமம் இடுவர்; பொங்கல், தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்குப் போன்றவற்றைப் படைத்து வழிபடுவர்.

**தேசிய விழாக்கள்**

1. தேசிய இளைஞர் நாள் விழா - ஜனவரி 12
2. குடியரசு நாள் விழா - ஜனவரி 26
3. விடுதலை நாள் விழா - ஆகஸ்டு 15
4. ஆசிரியர் தின விழா - செப்டம்பர் 5
5. காந்தி பிறந்த நாள் விழா - அக்டோபர் 2
6. மாணவர் தின விழா - அக்டோபர் 15
7. குழந்தைகள் தின விழா - நவம்பர் 15

**தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடைபெறும் இடங்கள்:**

அலங்காநல்லூர், மதுரை மாவட்டம் அவனியாபுரம், உறங்கான்பட்டி, வாடிப்பட்டி, சிறுகுடி, காரைக்குடி.

**தலங்களும் காண வேண்டிய இடங்களும்**

1. **சென்னை** : கடற்கரை, அண்ணா நூலகம், கிண்டி, பார்த்தசாரதிப் பெருமாள் கோவில், வள்ளுவர் கோட்டம், மயிலாப்பூர்.
2. **மதுரை** : மீனாட்சி கோவில், அழகர் கோவில், திருப்பரங்குன்றம், காந்தி அருங்காட்சியகம், திருமோகூர், யானைமலை, திருமலைநாயக்கர் அரண்மனை, தூய மரியன்னை பேராலயம்.
3. **திருச்சிராப்பள்ளி** : மலைக்கோட்டை, திருவனைக்கா, திருவரங்கம், கல்லணை, தூயவளனார் பேராலயம்.
4. **தஞ்சாவூர்** : பெரிய கோவில், தமிழ்ப் பல்கலைக்கழகம், சரசுவதி மகால்.
5. **இராமேசுவரம்** : கோயில், கடற்கரை
6. **மாமல்லை** : சிற்பங்கள், கடற்கரை
7. **குற்றாலம்** : அருவிகள், சித்திரசபை
8. **கொடைக்கானல்** : ஏரி, குறிஞ்சியாண்டவர் கோயில், செண்பகனூர்.
9. **உதகமண்டலம்** : குன்னூர், தொட்டபெட்டா
10. **முதுமலைக்காடு** : விலங்குகள் சரணாலயம்.

## மயங்கொலிகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சிரம் என்பது ________ (தலை/தளை)

**விடை: தலை**

2. இலைக்கு வேறுபெயர் _______ (தளை/ தழை)

**விடை: தளை**

3. வண்டி இழுப்பது _______ (காலை/ காளை)

**விடை: காளை**

4 கடலுக்கு வேறுபெயர் _______ (பரவை/ பறவை)

**விடை: பரவை**

5. பறவை வானில் _________ (பரந்தது/ பறந்தது)

**விடை: பறந்தது**

6. கதவை மெல்லத் _______ (திரந்தான்/ திறந்தான்)

**விடை: திறந்தான்**

7. பூ ________ வீசும். (மணம்/ மனம்)

**விடை: மணம்**

8. புலியின் ________ சிவந்து கானப்படும். (கன்/ கண்)

**விடை: கண்**

9. குழந்தைகள் _______ விளையாடினர். (பந்து/ பன்து)

**விடை: பந்து**

10. வீட்டு வாசலைல் ______ போட்டனர். (கோலம்/ கோளம்)

**விடை:கோலம்**

**குறுவினா.**

**1. மயங்கொலி என்றால் என்ன? மயங்கொலி எழுத்துக்கள் யாவை?**

சில எசுத்துக்கள் உச்சரிக்கும் போது ஏறத்தாழ ஒன்று போலவே ஒலிக்கும். ஆனால் அவற்றுக்கு இடையே வேறுபாடு உண்டு. இவ்வாறு உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.

ண ன ந, ல ழ ள, ர ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

**2. ண, ன, ந இவை எவ்வாறு பிறக்கின்றன?**

ண - நாவின் நுனி மேலாய் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

ன - நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

ந - நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.

**3. ண், ந்,ன் – இவெழுத்துக்கள் எச்சொல்லால் குறிக்கப்படுகின்றன?**

(ட், ண்) (த்,ந்) (ற்,ன்) ஆகியவை இன எழுத்துகள்.

டகரத்தை அடுத்து வரும் ணகரம் டண்ணகரம் என்றும்,

தகரத்தை அடுத்து வரும் நகரம் தந்நகரம் என்றும், றகரத்தை அடுத்து வரும் னகரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

**4. ல –எழுத்து எம்முயற்சியால் பிறக்கின்றது? எவ்வாறு குறிக்கப்படுகின்றது?**

ல – நாவின் இருபக்கங்கள் தடித்து மேற் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும்.

இடையின எழுத்துகளான ல, ழ,ள என்னும் மூன்றனுள், வரிசை முறையில் முதலில் இருப்பது ‘ல’ ஆகும். எனவே இது முதல் லகரம் எனப்படுகிறது.

**5. ள – எழுத்து எம்முயற்சியால் பிறக்கிறது? அது எவ்வாறு குறிக்கப்படுகிறது?**

ள – நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம்.

**6. ழ – எழுத்து எம்முயற்சியால் பிறக்கிறது? அது எப்படிக் குறிக்கப்படுகிறது?**

ழ- நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். ‘ழ’ தமிழுக்கே சிறப்பானது. எனவே சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம்.

**7. ர – எழுத்து எம்முயற்சியால் பிறக்கிறது? அதை எவ்வாறு குறிக்கிறோம்?**

ர – நாவின்நுனி, மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது. இஃது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.

**8. ற –எழுத்து எவ்வகையில் பிறக்கிறது? அதை எப்படிக் குறிப்பிடுகிறோம்?**

ற – நாவின்நுனி, மேல் அண்ணத்தில் மையப் பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. இஃது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.

## வாழ்வியல்

## திருக்குறள்

**சரியான விடையத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. விருந்தினரின் முகம் எப்போது வாடும்?

**அ. நம் முகம் மாறினால்** ஆ. நம் வீடு மாறினால்

இ. நாம் நன்கு வரவேற்றால் ஈ. நம் முகவரி மாறினால்

2. நிலையான செல்வம் _____

அ. தங்கம் ஆ. பணம் **இ. ஊக்கம்** ஈ. ஏக்கம்

3. ஆராயும் அறிவு உடையவர்கள் ______ சொற்களைப் பேசமாட்டார்.

அ. உயர்வான ஆ. விலையற்ற **இ. பயன்தராத** ஈ. பயன்உடைய

4.பொருளுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

அ. பொருளு+டைமை ஆ. பொரு+ளுடைமை

இ. **பொருள்+உடைமை** ஈ. பொருள்+ளுடைமை

5. உள்ளுவது+எல்லாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. உள்ளுவதுஎல்லாம் ஆ. **உள்ளுவதெல்லாம்**

இ. உள்ளுவத்தெல்லாம் ஈ. உள்ளுவதுதெல்லாம்

6. பயன்+இன என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ. பயனிலா** ஆ.பயன்னில்லா இ. பயன்இல ஈ. பயன்இல்லா

**எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

**எதுகை:** **உள்**ளுவது, **தள்**ளினும் **தள்**ளினும், **தள்**ளாமை

**மோனை:** **உ**ள்ளுவது, **உ**யர்வுள்ளல் **த**ள்ளினும், **த**ள்ளாமை

**இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

1. பணிவுடையான் ஆதல் இன்சொலன் ஒருவற்கு

மற்றுப் பிற அணியல்ல.

**விடை:**

பணிவுடையான் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணியல்ல மற்றுப் பிற.

2. உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது

தள்ளாமை தள்ளினும் நீர்த்து

**விடை:**

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

**"ஊக்கமது கைவிடேல்" என்பது ஔவையாரின் ஆத்திசூடி தொடர்புடைய திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று.

winmeen.com

**உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**

**நில்லாது நீங்கி விடும்.**

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க

சொல்லில் பயன்இலாச் சொல்

**குறுவினா.**

**1. எப்படி உண்பது விரும்பத்தக்கது?**

அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும்போது தான்மட்டும் உண்பது விரும்பத்தக்கது அன்று. எனவே, விருந்தோடு சேர்ந்து உண்பது விரும்பத்தக்கது.

**2. விருந்தினரின் மனம் எத்தன்மையானது என வள்ளுவர் கூறுகிறார்?**

மோந்து பார்த்தால் அனிச்ச மலர் வாடிவிடும். நம் முகம் மாறினாலே விருந்தினர் உள்ளம் வாடிவிடும் என வள்ளுவர் கூறுகிறார்.

**3. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகிறார்?**

அடுத்தவர் பொருளைக் களவாடலாம் என உள்ளத்தால் நினைப்பதுகூட தீமையானது என்று வள்ளுவர் கூறுகிறார்.

**4. களவினால் சேர்க்கும் என்ன ஆகும்?**

களவு மூலம் சேர்க்கப்படும் செல்வம் வளர்வது போலத் தோன்றினாலும் முடிவில் அழிந்துவிடும்.

**5. எது நிலையான செல்வம் என்று வள்ளுவர் கூறுகிறார்?**

ஊக்கமே நிலையான செல்வம். மற்றவை எல்லாம் நிலைத்து நில்லாமல் அழிந்து விடும்.

**6. ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?**

தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கமானது தானே வழிகேட்டுக் கொண்டு செல்லும்.

**7. எந்த உவமையின் மூலம் ஊக்கம் உடைமையின் உயர்வினை வள்ளுவர் விளக்குகிறார்?**

தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப நீர்ப்பூக்கள் வளரும். அதுபோல, ஊக்கத்தின் அளவுக்கு ஏற்ப மனிதர்கள் உயர்வார்கள் என வள்ளுவர் விளக்குகிறார்.

**8. எண்ணத்தின் சிறப்பு யாது?**

எண்ணுவதை உயர்வாகவே என்ன வேண்டும். எண்ணியதை அடையாவிட்டாலும் எண்ணமே மனநிறைவைத் தரும்.

**9. அறிவுடையார் இயல்பு யாது?**

நன்மை எது என ஆராயும் அறிவு உடையவர்கள் பயன்தராத சொற்களைப் பேசமாட்டார்கள்.

**10. நாம் எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?**

பயனுடைய சொற்களை மட்டுமே பேசுக. பயன் இல்லாத சொற்களைப் பேசாமல் விட்டு விடுக என வள்ளுவர் கூறுகிறார்.

**11. திருக்குறள் உலகப் பொதுமறை எனப்படுவது ஏன்?**

படிப்பதற்கு எளிதாய் உணர்வதற்கு அரிதாய் விளங்குவது திருக்குறள். உலகத்து விளங்கும் மொழிகளில் பெரும்பாலான மக்கள் பேசுகிற மொழியல்ல. எனினும் உலகத்து மக்கள் நேசிக்கிற மொழியாய்த் தமிழ் திகழ்கிறது. காரணம் என்ன? திருக்குறள் தான்.

**‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**

**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’**

எனப்பாடினார் மகாகவி பாரதியார்.

தமிழ்மறை எனப் போற்றப்படும் திருக்குறள் உலகப் பொதுமறையாகவும் திகழ்கிறது. ஏனெனில் திருக்குறள் ஒரு மதத்தினருக்கோ ஒரு மொழியினருக்கோ ஒரு இனத்தினருக்கோ உரியதல்ல.

எம்மதத்தவர் கடவுள் குறித்தும் ‘கடவுள் வாழ்த்து’ என்னும் அதிகாரத்தில் ‘கடவுள் வாழ்த்து’ என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் பாடவில்லை. இறைவனின் திருவடிகளைப் பற்றி மட்டுமே. ‘நற்றாள், மாணடி’ என்று அடைமொழி கொடுத்தும் அடி, தாள் என அடைமொழி கொடுக்காமலும் கூறுகிறார்.

குறள் தமிழில் அமைந்தது எனினும் தமிழ் என்னும் சொல்லோ மொழி பற்றிய செய்தியோ நூலில் இல்லை.

அறநெறி எல்லாக் காலத்திற்கும் எல்லா நாட்டினருக்கும் எல்லா மதத்தவருக்கும் எல்லா மொழியினருக்கும் எல்லாச் சாதியினருக்கும் பொதுதான். அதையே வள்ளுவர் கூறுகிறார். திருக்குறளுக்கு அமைந்த வேறு பெயர்களுள் ‘அறம்’ என்பதும் ஒன்று.

எனவே திருக்குறள் உலகப் பொதுமறை என உலகத்தவரால் போற்றப்படுகிறது. இதற்குச் சான்று யாது? உலகத்தில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் அறநூல் திருக்குறள்.

## 3. கூடித் தொழில் செய்

## கவிதைப் பேழை

## நானிலம் படைத்தவன்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ________

அ. மகிழ்ச்சி ஆ. துன்பம் இ. வீரம் ஈ. அழுகை.

2. கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. கல் + அடுத்து **ஆ. கல் +எடுத்து**

இ. கல்+லடுத்து ஈ. கல் +லெடுத்து

3. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ. நா+னிலம் **ஆ. நான்கு+நிலம்** இ. நா+நிலம் ஈ. நான்+நிலம்

4. நாடு+ என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ. நாடென்ற** ஆ. நாடன்ற இ. நாடுஎன்ற ஈ. நாடுஅன்ற

5. கலம்+ ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்________-

அ. கலம்ஏறி ஆ. கலமறி இ. கலன்ஏறி **ஈ. கலமேறி**

6. பெருவெலி என்னும் தொடர்ச் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____



winmeen.com

அ. பெரிய+வெளி ஆ. பெரு+வெளி

இ. **பெருமை+வெளி** ஈ. பெருகு+வெளி

7. திண்டோள் என்பது _____ எனப் பிரியும்.

அ. திண்+தோள் ஆ. திண்டு+தோள்

**இ. திண்மை+தோள்** ஈ. திண்ணிய+தோள்

8. மாந்தன்+அவன் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ. மாந்தனவன்** ஆ. மாந்தனவான் இ. மாந்தவலன் ஈ. மாத்தனவன்

9. முத்தெடுத்தான் என்பது ______ எனப் பிரியும்.

அ. **முத்து+எடுத்தான்** ஆ. முத்தம்+எடுத்தான்

இ. மும்மை+எடுத்தான் ஈ. மு+எடுத்தான்

10. முடியரசன் இயற்பெயர்______

அ. கனகராசு ஆ. சுப்புராசு **இ. துரைராசு** ஈ. வீரராசு

**குறுவினா.**

**1. நான்கு நிலங்கள் யாவை?**

நான்கு நிலங்கள் என்பன முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என்பன.

**2. தமிழன் எதற்கு அஞ்சினான்?**

தமிழன், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சினான்.

**3. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?**

தமிழன் வாணிகத்திற்காக ஏலம், மிளகு ஆகியவற்றைக் கப்பல்களில் ஏற்றிக் கண்டங்களைச் சுற்றி வந்தான்; போருக்காகவும் சுற்றி வந்தான்.

**4. முடியரன் – குறிப்புத் தருக.**

முடியரசனின் இயற்பெயர் துரைராசு. பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை முதலிய நூல்களை எழுதியுள்ளார். திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப்பெற்றவர் அவர்.

**5. தமிழன், தான் வளர்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?**

தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான்; தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான்; ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான்; முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்தினான்.

**6. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?**

பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான்; அச்சம் தரும் போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான்; பனி சூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான்; ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தான்; ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள்தோறும் அனுப்பி வணிகம் செய்தான்; கப்பலில் உலகை வலம் வந்தான்; அவன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுவான் என முடியரசர் கூறுகிறார்.

**குறிஞ்சி, முலை, மருதம், நெய்தலுக்கு உரிய நிலங்களை அறிந்து எழுதுக.**

**குறிஞ்சி** : மலையும் மலை சார்ந்த இடமும்

**முல்லை** : காடும் காடு சார்ந்த இடமும்

**மருதம்** : வயலும் வயல் சார்ந்த இடமும்.

**நெய்தல்** : கடலும் கடல் சார்ந்த இடமும்

## கவிதைப்பேழை

## கடலோடு விளையாடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கதிர்ச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______

அ. கதிர்ச்+சுடர் ஆ. கதிரின்+சுடர்

இ. கதிரவன்+சுடர் **ஈ. கதிர்+சுடர்**

2. மூச்சடக்கி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

அ. **மூச்சு+அடக்கி** ஆ. மூச்+அடக்கி

இ. மூச்+சடக்கி ஈ. மூச்சை+அடக்கி

3. பெருமை+வானம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_______

அ. பெருமைவானம் **ஆ. பெருவானம்** இ. பெருமானம் ஈ. பேர்வானம்

4. அடிக்கும்+அலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ. **அடிக்குமலை** ஆ. அடிக்கும் அலை இ. அடிக்கிலை ஈ. அடியலை

5. வெண்மணல் __________ பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

அ. வெண்+மணல் ஆ. **வெண்மை+மணல்**

இ. வெள்ளை+மணல் ஈ. வெள்ளி+மணல்

6. உடல்+போர்வை – சேர்த்து எழுதக் கிடைப்பது______

அ. உடல் போர்வை ஆ. உடப்போர்வை

இ. உடல்ப்போர்வை ஈ. **உடற்போர்வை**

**குறுவினா.**

**1. அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?**

மீனவர்கள் அலையைத் தோழனாகவும் மேகத்தைக் குடையாகவும் கருதுகின்றனர்.

**2. கடல் பாடலில் கண்ணாடியாகவும் தலைவனாகவும் குறிப்பிடப்படுவன யாவை?**

கடல் பாடலில் நிலவு கண்ணாடியாகவும் வானம் தலைவனாகவும் குறிப்பிடப்படுகின்றன.

**3. மீனவர்க்கு விளக்கு எது? பள்ளிக்கூடம் எது?**

மீனவர்க்கு விடிவெள்ளியே விளக்கு; கடலே பள்ளிக்கூடம்

**4. மீனவர்க்குப் பஞ்சுமெத்தையும் அவர்கள் காணும் கூத்தும் எவை?**

மீனவர்க்கும் வெண்மணலே பஞ்சுமெத்தை. வானத்தின் இடியே அவர்கள் காணும் கூத்து.

**5. மீனவர்க்கு ஊஞ்சலும் போர்வையும் யாவை?**

பாய்ந்து வரும் புயலே மீனவர்க்கு ஊஞ்சல், பனிமூட்டமே அவர்களுக்குப் போர்வை.

**6. மீனவர்க்கு வீடும் கூரையும் எவை?**

மீனவர்க்குக் கட்டுமரமே வீடு; கதிரவன் ஒளியே கூரை.

**7. கடல் பாடலின் பொருளை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**

மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்பவர்கள் மீனவர்கள். அவர்களுக்கு விண்மீன்களே விளக்குகள். விரிந்த கடலே பள்ளிக்கூடம். கடல் அலையே தோழன். மேகமே குடை வெண்மையான மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை. விண்ணின் இடி அவர்கள் காணும் கூத்து. சீறிவரும் புயலோ விளையாடும் ஊஞ்சல். பனிமூட்டம்தான் உடலைச் சுற்றும் போர்வை. அனல் வீசும் கதிரவனின் ஒளிச்சுடர்தான் மேற்கூரை. கட்டுமரம் அவர்கள் வாழும் வீடு. மின்னல் கோடுகளே அடிப்படைப் பாடம். வலைவீடுப் பிடிக்கும் மீன்கலே அவர்களது செல்வம். முழு நிலவுதான் கண்ணாடி. மூச்சடக்கிச் செய்யும் நீச்சலே அவர்கள் செய்யும் தவம். இவற்றுக்கு இடையே மீனவர்கள் மன உருதியோடு தொழில் செய்கின்றனர்.

**8. நாட்டுப்புற இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்கள் என்று கூறக் காரணம் என்ன?**

உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடலே நாட்டுப்புறப் பாடலாகும். காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் இதனை வாய்மொழி இலக்கியம் என்பர். ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு முதலான தொழில்பாடல்களும் விளையாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் முதலியனவும் நாட்டுப்புறப் பாடல்களுள் அடங்கும்.

## உரைநடை உலகம்

## வளரும் வணிகம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்______

அ. **நுகர்வோர்** ஆ. தொழிலாளி

இ. முதலீட்டாளர் ஈ. நெசவாளி

2. வணிகம் + சாத்து என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_____

அ. வணிகசாத்து ஆ. வணிகம்சாத்து

**இ. வணிகச்சாத்து** ஈ. வணிகத்துசாத்து

3. பண்டம்+மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ. **பண்டமாற்று** ஆ. பண்டம்மாற்று

இ. பண்மாற்று ஈ. பண்டுமாற்று

4. வண்ணப் படங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______

அ. **வண்ணம்+படங்கள்** ஆ. வண்ணப்+படங்கள்

இ. வண்ண+படங்கள் ஈ. வண்ணமான+படங்கள்

5. விரிவடைந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______

அ. விரி+வடைந்த ஆ. விரி+ அடைந்த

**இ. விரிவு+அடைந்த** ஈ. விரிவ்+அடைந்த

**குறுவினா.**

**1. வணிகம் என்றால் என்ன?**

ஒரு பொருளை பிறரிடம் இருந்து வாங்குவதும் பிறருக்கு விற்பதும் வணிகம் ஆகும்.

**2. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

நம் வீட்டிற்கே வந்து பழைய செய்தித்தாள்கள், பயனற்ற நெகிழிப் பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு அவற்றுக்குப் பதிலாக வீட்டு உபயோகப் பொருள்களைத் தருகின்றனர். இது பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டு.

**3. பண்டமாற்று முறையின் பழைமையை விளக்குக.**

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும். நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர். ஆட்டின் பாலைக் கொடுத்து தானியத்தைப் பெற்றனர். இந்தச் செய்திகள் சங்க இலக்கியங்கள் காணப்படுக்கின்றன.

**4. சிறு வணிகப் பொருள்கள் யாது?**

நம் அன்றாடத் தேவைகளை பால், கீரை, காய்கறிகள் போன்றவை சிறுவணிகப் பொருள்கள் ஆகும்.

**5. பொருள்களை விற்பவரும் வாங்குபவரும் எவ்வாறு குறிக்கப்படுகின்றனர்?**

பொருள்கள் விற்பவரை வணிகர் என்பர். வாங்குபவரை நுகர்வோர் என்பர்.

**6. தரைவழி வணிகம் என்பது யாது?**

தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு சென்று விற்பது தரைவழி வணிகம் ஆகும். தரைவழியாகப் பொருள்களைக் கொண்டு செல்ல எருது, கழுதை, குதிரை போன்ற விலங்குகளும் வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன.

**7. 'வணிகச் சாத்து' என்பது யாது?**

வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்குச் செல்லும் போது குழுவாகவே செல்வார்கள். இக்குழுவை வணிகச் சாத்து என்பவர்.

**8. நீர்வழி வணிகம் என்பது யாது?**

கடல்வழியாகக் கப்பல்கள் மூலம் பொருள்களை அனுப்புவதும் வரவழைப்பதும் நீர்வழி வணிகம் ஆகும்.

**9. துறைமுகம் – குறிப்பு வரைக.**

கப்பல்கள் வந்து நிற்கும் இடங்கள் துறைமுகங்கள் ஆகும். துறைமுக நகரங்கள் பட்டினம் என்றும் பாக்கம் என்றும் குறிக்கப்பட்டன.

**10. தமிழ்நாட்டின் தலைசிறந்த பழைய துறைமுகம் பற்றி எழுதுக.**

தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகப் பூம்புகார் விளங்கியது. அவ்வூர்த் துறைமுகத்தில் பல்வேறு நாட்டுக் கப்பல்கள் தத்தம் நாட்டுக் கொடிகளோடு வந்து நின்றன. அவற்றின் மூலம் வெளிநாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தமிழ்நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**11. வணிகர்கள் நேர்மையாகத் தொழில் செய்வர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் எங்ஙனம் எடுத்துக்காட்டுகின்றன?**

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோல் செயின்.

என்னும் திருக்குறள் வணிகரின் நேர்மையைப் பற்றிக் கூறுகிறது. வணிகர்கள் பொருளை வாங்கும்பொழுது உரிய அளைவைவிட அதிகமாக வாங்க மாட்டர்கள். பிறருக்குக் கொடுக்கும்பொழுது அளவைக் குறைத்துக் கொடுக்க மாட்டார்கள். எனவே வணிகரை

**"நடுவு நின்ற நன்னெஞ்சினோர்"** என்று பட்டினப்பாலை பாரட்டுகிறது.

**12. சிறு வணிகம் ,பெருவணிகம் – வேறுபடுத்துக.**

**சிறுவணிகம்:** சிறு முதலீட்டில் பொருள்களை வாங்கி வந்து வீதிகளில் வைத்து விற்பனை செய்வர். தலையில் சுமந்து சென்று விற்றல், தரைக்கடை அமைத்து விற்றல், தள்ளுவண்டி மூலம் விற்றல் போன்ற முறைகளில் சிறு வணிகம் நடைபெறும். சிறு வணிகர்கள் நுகர்வோரிடம் நேரடித் தொடர்பு கொள்பவர்கள் ஆவர்.

**பெருவணிகம்:** பெருந்தொகையை முதலீடு செய்து பொருள்களை அதிக அளவில் திரட்டி வைத்து விற்பனை செய்வது பெருவணிகம் ஆகும். பெருவணிகர்கள் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்வர். அவற்றைச் சிறுவணிகர்களுக்கு விற்பனை செய்வர். பெருவணிகர்களுக்கு நுகர்வோருடன் நேரசித் தொடர்பு இருப்பது அரிது.

**13. பழந்தமிழர் ஏற்றுமதி இறக்குமதி செய்த பொருள்கள் யாவை?**

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பிற நாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி எனப்படும். பிற நாடுகளில் இருந்து பொருள்களை வாங்குவது இறக்குமதி ஆகும். பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து தேக்கு, மயில்தோகை, அரிசி, சந்தனம், இஞ்சி, மிளகு போன்றவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சீனத்திலிருந்து கண்ணாடி, கற்பூரம், பட்டு போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. அரேபியாவில் இருந்து குதிரைகள் வாங்கப்பட்டன.

**14. இணைய வழி வணிகம் பற்றி எழுதுக.**

கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்க நேரம் இல்லாதவர்களுக்கு இணைவழி வணிகம் உதவுகிறது. இணையதளம் மூலம் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பல உள்ளன. இவற்றி இணையதளப் பக்கத்தில் நமக்குத் தேவையான பொருள்களைப் பற்றிய விவரங்கள் இருக்கும். பொருள்களின் தரம், விலை, சிறப்பு ஆகியவற்றைப் பிற நிறுவனப் பொருள்களொடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். நமக்குப் பிடித்த பொருள்களை நம் வீட்டிற்கே வரவழைக்கலாம். பொருளைப் பெற்றுக் கொண்ட பிறகு பணம் செலுத்தலாம். மின்னணுப் பரிமாற்றம் மூலமும் பணத்தைச் செலுத்தலாம்.

**ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுதுக.**

| **ஆங்கிலச் சொல்** | **தமிழ்ச்சொல்** |
|---|---|
| கரன்சிநோட் | பணத்தாள் |
| பேங்க் | வங்கி |
| செக் | காசோலை |
| டிமாண்டி டிராப்ட் | வரைவோலை |
| டிஜிட்டல் | மின்னணுமயம் |
| டெபிட் கார்டு | கடன் அட்டை |
| கிரெடிட் கார்டு | பற்று அட்டை |
| ஆன்லைன் ஷாப்பிங் | இணையத்தள வணிகம் |

**ஒவ்வொரு ஊரிலும் கிடைக்கும் சிறப்புப் பொருள்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துக.**

1. மதுரை – மல்லிகை

6. திருநெல்வேலி - அல்வா

2. சேலம் - மாம்பழம்
3. கோவில்பட்டி- கடலை மிட்டாய்
4. திருப்பூர் - பனியன்
5. நாமக்கல் -முட்டை
7. மணப்பாறை- முறுக்கு
8. பழநி - பஞ்சாமிர்தம்
9. திருப்பதி - லட்டு
10. தூத்துக்குடி - உப்பு

## விரிவானம்

## உழைப்பே மூலதனம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. என் வீடு **அங்கே** உள்ளது. (அது/ அங்கே)

2. தம்பி **இங்கே** வா. (இவர்/ இங்கே)

3. நீர் **எங்கே** தேங்கி இருக்கிறது? (அது / எங்கே)

4. யார் **அவர்** தெரியுமா? (அவர்/ யாது)

5. உன் வீடு **எங்கே** அமைந்துள்ளது? (எங்கே/ என்ன)

**குறுவினாக்கள்.**

**1. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?**

ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துக்களுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர். அ,இ,உ ஆகிய முன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால் 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

**2. அகச்சுட்டு : விளக்குக.**

இவன், அவன், இது, அது – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை. இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே(அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

**3. புறச்சுட்டாவது யாது? விளக்குக.**

அந்நீர்வீழ்ச்சி, இம்மலை, இந்நூல் – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

**4. அண்மைச் சுட்டு –விளக்குக.**

இவன், இவர், இது, இவை, இம்மரம், இவ்வீடு – இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே இவை அண்மைச் சுட்டு எனப்படும். அண்மைச்சுட்டு எழுத்து இ ஆகும்.

**5. சேய்மைச் சுட்டினை விளக்குக.**

அவள், அவர், அது, அவை, அவ்வீடு, அம்மரம் – இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே இவை சேய்மைச்சுட்டு எனப்படும் சேய்மைச் சுட்டு எழுத்து அ ஆகும்.

**6. சுட்டுத்திரிபு – விளக்குக.**

அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும். (எ.கா) அந்த வீடு – இந்தப்பள்ளி.

**7. வினா எழுத்துகள் யாவை? அவை சொற்களில் எவ்விடங்களில் அமையும்?**

வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர். சிலவினா எழுத்துகள் சொல்லின் முதலில் இடம்பெறும். சில வினா எழுத்துகள் சொல்லின் இறுதியில் இடம்பெறும்.

எ,யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்.

மொழியில் முதலில் வருபவை - எ, யா (எங்கு, யாருக்கு)

மொழியின் இறுதியில் வருபவை – ஆ,ஆ (பேசலாமா, தெரியுமோ)

மொழி முதலிலும் இறுதியிலும் வருவது – ஏ (ஏன், நீ தானே?)

**8. அகவினா - விளக்குக.**

வினா எழுத்து சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருமானால் அது அகவினா எனப்படுகும்.

எ.கா. எது, யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகளுக்குப் பொருள் இல்லை.

**9. புறவினா – விளக்குக.**

வினா எழுத்து சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருமானால் அது புறவினா எனப்படும்.

எ.கா. அவனா, வருவானோ இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.

**10. அகவினா, புறவினா – வேறுபாடு யாது?**

அகவினா அமைந்த சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள்பொருள் தரமாட்டா. புறவினா அமைந்த சொற்களில் வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் சொற்களாய் நின்று பொருள் தரும்.

**11. அகச்சுட்டு, அகவினா, புறச்சுட்டு, புறவினா என்று பெயரிட்ட காரணத்தை எழுதுக.**

அகச்சுட்டு, அகவினா என்பவற்றில் அகம் என்பது உள்ளே எனப் பொருள் தருகிறது. சுட்டு எழுத்துகளும் வினா எழுத்துகளும் சொல்லுக்கு உள்ளேயே-சொல்லைவிட்டுப் பிரிக்க முடியாதபடி சேர்ந்து –நின்று பொருள் தரும். அவை அகச்சுட்டு , அகவினா எனப்படும்.

புறச்சுட்டு, புறவினா என்பவற்றில் புறம் என்பது வெளியே எனப் பொருள் தருகிறது. சுட்டு எழுத்துகளும் வினா எழுத்துகளும் சொற்களுக்கு வெளியே நிற்கும். அவற்றைப் பிரித்தாலும் சொற்கள் பொருள் தரக்கூடிய முறையில் அமையும். புறச்சுட்டு, புறவினா என்று அவை பெயர் பெறும்.

**பின்வரும் நவமணிகளை அகரவரிசைப்படுத்து எழுதுக.**

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.

**கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.**

**பண்டைத் தமிழகத்தின் துறைமுகங்கள் பற்றியும் அங்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைப் பற்றியும் எழுதுக.**

தமிழ்நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி. இது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில்

கலக்குமிடத்தில் இயற்கையாய் உருவான துறைமுகமாகும். முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது. யவனர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு 'யவனப்பிரியா' என்ற பெயர் ஏற்பட்டது. யவனக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதர்காக முசிறிக்கு வந்தன. இதனை,

சோழவள நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின் மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருக்கிறது.

"பல்வேறு நாடுகளிலிருந்து கடல் வழியாக கப்பல்கள் மூலம் வந்து இறங்கிய பொருள்களும், வெளிநாடுகளுக்குக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உள்நாட்டின் பலபகுதிகளில் இருந்தும் வந்துள்ள பொருள்களும் எண்ண முடியாத அளவுக்குக் குவிந்திருக்கும்; புகார் நகரத்தில், காவல் மிகுந்த சுங்கச்சாவடி இருக்கும் சாலையில்,சுங்கத் தீர்வையைப் பெற்றுக்கொண்டு, சோழப் பேரரசின் இலச்சினையான புலிச்சின்னத்தை அடையாளமிட்டு வெளியே அனுப்புவதற்காகக் குவிந்து வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் மலைபோல் தோற்றம் தரும்."

பாண்டிய நாட்டில் கொர்கைக் குடாக் கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்துகல் தொலைவிற்கு ஊடுருவியிருந்தது. இங்கு முத்துச்சிப்புகளும் சங்குகளும் உண்டாயின.

பாண்டிய மன்னர்களின் குதிரைப்படைகளுக்காக ஆண்டுதோறும் கொற்கைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான பாய்மரக் கப்பல்களில் 16,000 அரேபிக் குதிரைகள் வந்து இறங்கும்.

Winmeen's

# 6ஆம் வகுப்பு தமிழ்

## 3ஆம் பருவம்

## Notes & Questions

www.winmeen.com

## ஆறாம் வகுப்பு
## தமிழ் – மூன்றாம் பருவம்
## இயல் – 1. நாடு, சமூகம், அரசு, நிர்வாகம்
## 1. பாரதம் அன்றைய நாற்றங்கால்

**முக்கிய குறிப்புகள்**

- கவிஞர் தாராபாரதி தமிழக அரசின் **நல்லாசிரியர்** விருது பெற்றுள்ளார்.
- **கவிஞாயிறு** என்ற சிறப்புப் பெயரால் இவர் அழைக்கப்பட்டார்.
- இவர் நூல்களை தமிழ்நாடு அரசு நாட்டுடைமையாக்கிப் பெருமைப்படுத்தியுள்ளது.
- **புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, விரல்நுனி வெளிச்சங்கள்** முதலானவை இவர் இயற்றிய நூல்களாகும்.
- **திருவள்ளுவர், காளிதாசன், கம்பன்** ஆகியோர் தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்கள் ஆவர்.
- வியத்தகு பல புதுமைகள் செய்த **பாரத தேசமே** பூமியின் கிழக்கு வாசல் ஆகும்.
- மெய்யுணர்வாகிய தத்துவ ஞானத்தை பாரதத்தாய்க்கு மேலாடை எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்.
- அமுதம் போன்ற கம்பனின் கவிதைகளுக்குக் **கங்கை அலைகள்** இசையமைக்கும் என்று தாராபாரதி கூறுகிறார்.
- கன்னியக்குமரியின் கூந்தலுக்காகக் காஷ்மீர்த்தோட்டம் பூத்தொடுக்கும் என்கிறார் தாராபாரதி
- கல்லைக் காவியமாக்கிக் காட்டுவது **கலைக்கூடம்** ஆகும்.
- அண்ணல் காந்தியடிகளின் கைத்தடியை அறத்தின் ஊன்றுகோலாகத் தாராபாரதி குறிப்பிடுகிறார்.

**ஆசிரியர் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | இராதாகிருஷ்ணன் |
| புனைபெயர் | : | தாராபாரதி |
| ஊர் | : | திருவண்ணாமலை மாவட்டம், குவளை என்னும் சிற்றூர் |
| காலம் | : | பிறப்பு: 1947, பிப்ரவரி 26<br>இறப்பு: 2000, மே 13 |
| பெற்றோர் | : | துரைசாமி, புஷ்பம் அம்மாள் |

**1. பொருள் கூறுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மெய் | - | உண்மை | தேசம் | - | நாடு |
| அமுதம் | - | அமிர்தம் | கோல் | - | கம்பு |
| அமுதசுரபி | - | எடுக்க எடுக்கக் குறையாது உணவு தரும் கலன் | | | |

**2. பிரித்து எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேசமிது | - | தேசம் + இது | மேலாடை | - | மேல் + ஆடை |
| மெய்யுணர்வு | - | மெய் + உணர்வு | பூக்காடு | - | பூ + காடு |

**3. சேர்த்து எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமுதம் + கவிதை | - | அமுதக்கவிதை | பூ + தொடுக்கும் | - | பூத்தொடுக்கும் |

கிழக்கு + கரை - கிழக்குக்கரை கலை + கூடம் - கலைக்கூடம்

**4. எதிர்ச்சொல் எழுதுக**

மெய் x பழமை புதுமை x பழமை

**5. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் ........................

அ) திருவாசகம் **ஆ) திருக்குறள்**

இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

2. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம் ....................

**அ) காவிரிக்கரை** ஆ) வைகைக்கரை

இ) கங்கைக்கரை ஈ) பமுனைக்கரை

3. கலைக்கூடமாகக் காட்சி தருவது ....................

**அ) சிற்பக்கூடம்** ஆ) ஓவியக்கூடம்

இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்

4. நூலாடை என்னும் சொல்லைப் பரித்து எழுதக் கிடைப்பது ....................

**அ) நூல் + ஆடை** ஆ) நூலா + டை

இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆட

5. எதிர் + ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....................

அ) எதிரலிக்க ஆ) எதிர்ஒலிக்க

**இ) எதிரொலிக்க** ஈ) எதிர்ரொலிக்க

6. நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கியப் பங்கு வகிப்பது?

அ) போக்குவரத்து **ஆ) அறிவியல் கண்டுபிடிப்புகள்**

இ) தங்க நகைகள் ஈ) தொலைக்காட்சி

7. மேலாடை பிரித்து எழுதக் கிடைப்பது ....................

அ) மேல் + டை ஆ) மே + ஆடை

இ) மேலா + ஆடை **ஈ) மேல் + ஆடை**

8. காஷ்மீரின் சிறப்பாகப் பாடலாசிரியர் குறிப்பிடுவது ....................

அ) குளிர்ச்சி ஆ) மலைகள்

**இ) பூக்கள்** ஈ) ஆப்பிள்

9. பூமியின் கிழக்கு வாசல் எனப் பாடலாசிரியர் எதைக் குறிப்பிடுகிறார்?

அ) ஜப்பான் ஆ) இலங்கை

**இ) பாரதநாடு** ஈ) அண்டைநாடு

10. நற்கருத்துக்களை ஓரிரு வரிகளில் புதுமையாக எழுதுவது ...................

அ) கசல் ஆ) மரபுக்கவிதை

**இ) ஹைக்கூ** ஈ) ஹைரோ

11. நாட்டு மக்களின் பசி தீர்க்க அறிவியல் தொழில் நுட்பத்தைக் கொண்டு வர வேண்டிய துறை ..................

அ) தொழில் **ஆ) விவசாயம்**

இ) போக்குவரத்து ஈ) தகவல் தொடர்பு

12. மக்கள் ஆரோக்கியமாக வாழ அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு முக்கியம் தரவேண்டிய துறை ...............

அ) கல்வி ஆ) தகவல் தொடர்பு

**இ) மருத்துவம்** ஈ) தொழில்

13. சிற்பங்களை அழகாகச் செதுக்கக்கூடிய நிபுணர் யார்?

அ) தச்சர் ஆ) பொறியாளர்

**இ) சிற்பி** ஈ) ஆசிரியர்

14. பின்வருவனவற்றுள் தாராபாரதி எழுதிய நூல் எது?

அ) இருண்ட வீடு ஆ) விடியல் புதிது

இ) கிழக்கு வானம் **ஈ) புதிய விடியல்**

15. “கவிஞாயிறு” என்னும் அடைமொழியால் அழைக்கப்படுபவர் ..................

அ) பழனிபாரதி **ஆ) தாராபாரதி**

இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

**6. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்னும் பாடலில் அமைந்துள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக**

**எதுகைச் சொற்கள்**

| | |
|---|---|
| மெ<u>ய்</u>களைப் | அ<u>ன்</u>னை |
| மெ<u>ய்</u>யுணர்வு | அ<u>ன்</u>னிய |

**மோமைச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| <u>பு</u>துமைகள் | <u>கா</u>ளிதாசனின் | <u>பு</u>ல்வெளி |
| <u>பூ</u>மியின் | <u>கா</u>விரிக் கரையில் | <u>பு</u>ன்னகை |
| <u>அ</u>ன்னை | <u>க</u>ல்லை | <u>அ</u>ண்ணல் |
| <u>அ</u>ன்னிய | <u>க</u>ட்டி | <u>அ</u>றத்தின் |

## 1.1. தமிழ்நாட்டில் காந்தி

**முக்கியக் குறிப்புகள்**

- காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினார்
- ஜி.யு.போப் எழுதிய தமிழ்க்கையோடு மற்றும் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் ஆகியன காந்தியடிகளை மிகவும் கவர்ந்த நூல்களாகும்.
- தமிழ்நாட்டின் சொத்து **பாரதியார்** ஆவார்.
- **உ.வே.சாமிநாதர் அடி நிழலில்** இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்.
- தமிழ்நாட்டில் காந்தியடிகள் இராஜாஜி வீட்டில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.
- 1937ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு நடைபெற்றது அந்த மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே. சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார்.

- உப்புச் சத்தியாகிரகம், தண்டி யாத்திரை, ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், சுதேசி இயக்கம், வரி கொடா இயக்கம் ஆகியன காந்தியடிகள் நடத்திய அறவழிப் போராட்டங்கள் ஆகும்.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் .........................

அ) கோவை **ஆ) மதுரை**

இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்

2. காந்தியடிகள் எந்தப் பெரியவரின் அடிநிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பி

அ) நாமக்கல் கவிஞர் ஆ) திரு.வி.க

**இ) உ.வே.சா** ஈ) பாரதியார்

**2. பொருத்துக**

1. இலக்கிய மாநாடு - அ) பாரதியார்
2. தமிழ்நாட்டுக் கவிஞர் - ஆ) சென்னை
3. குற்றாலம் - இ) ஜி.யு.போப்
4. தமிழ்க் கையேடு - ஈ) அருவி

**விடை: 1 – ஆ, 2 – அ, 3 – ஈ, 4 – இ**

**3. சொற்றொடரில் அமைத்து எழுதுக**

1. ஆலோசனை – போராட்டத்தைப்பற்றிய **ஆலோசனைக்** கூட்டம் நடந்தது
2. பாதுகாக்க – பாரதியைப் பத்திரமாகப் **பாதுகாக்க** வேண்டும் என்று கருதினர்.
3. மாற்றம் – தோற்றத்தில் **மாற்றத்தை** ஏற்படுத்திய பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு.
4. ஆடம்பரம் – பங்களாவின் அமைப்பு முறை **ஆடம்பரமாக** இருந்தது.

**4. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பல மொழிகளில் மொழி யெர்க்கப்பட்ட தமிழ் நூல் ..................

அ) பழமொழி **ஆ) திருக்குறள்**

இ) மதுரை ஈ) மணிமேகலை

2. காலத்தால் அழியாமல் தமிழ் ஒலைச்சுவடிகளைத் தொகுத்தவர் ......................

அ) தாராபாரதி ஆ) வ.உ.சி

**இ) உ.வே.சா** ஈ) பாரதியார்

3. குற்றால அருவி உள்ள மாவட்டம் ...................

அ) கன்னியாகுமரி ஆ) மதுரை

இ) நாகப்படினம் **ஈ) திருநெல்வேலி**

4. பாபுஜி என்று மக்களால் அழைக்கப்பட்டவர் ..................

**அ) காந்தியடிகள்** ஆ) நேருஜி

இ) நேத்தாஜி ஈ) ராஜாஜி

5. காந்தியடிகளுக்குத் தமிழில் பிடித்த அறநூல் எது?

அ) ஆத்திசூடி **ஆ) திருக்குறள்**

இ) மதுரை ஈ) நாலடியார்

6. காந்தியடிகள் வரவால் 'கானாடு காத்தான்' ஊரின் செல்வரிடம் ஏற்பட்ட மாற்றம் .................

அ) வலிமை ஆ) உயர்வு

இ) ஆடம்பரம் **ஈ) எளிமை**

7. 'இந்தியாவின் சொத்து' எனக் காந்தியடிகளால் பாராட்டப்பட்டவர் .........................

அ) தாராபாரதி **ஆ) பாரதியார்**

இ) இராஜாஜி ஈ) உ.வே.சா

8. 1) காந்தியடிகள் புதிய கல்லூரியை ஆரம்பித்தார்.

2) காந்தியடிகள் புதிய கல்வி முறையைத் தோற்றுவித்தார்

அ) இரண்டும் சரி ஆ) கூற்று 1 சரி, 2 தவறு

இ) இரண்டும் தவறு **ஈ) கூற்று 1 தவறு, 2 சரி**

9. காந்தியடிகளைக் கவர்ந்த தமிழ்க் கையேட்டினை எழுதியவர் ...............

அ) தாராபாரதி **ஆ) ஜி.யு.போப்**

இ) உ.வே.சா ஈ) வீரமாமுனிவர்

10. "இன்று மாலை ஒரு பொதுக்கூட்டத்திற்குத் தாங்கள் தலைமை தாங் முடியுமா?" என காந்தியடிகளிடம் கேட்டவர் ..................

அ) கானாடு காத்தான் செல்வர் ஆ) இராஜாஜி

**இ) பாரதியார்** ஈ) உ.வே.சா

## 1.2. வேலு நாச்சியார்

**முக்கியக் குறிப்புகள்**

- வேலுநாச்சியாரின் காலம் 1730 – 1796
- வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு 1780.
- ஜான்சி ராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர் வேலு நாச்சியார் ஆவார்.
- வேலு நாச்சியார் தாய்மொழியான தமிழைத்தவிர ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் முறையாகக் கற்றுக்கொண்டார்.
- வேலு நாச்சியார் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்தார்
- வேலு நாச்சியரின் அமைச்சர் தாண்டவராயன் ஆவார்.
- வேலு நாச்சியரின் தளபதிகள் பெரிய மருது, சின்ன மருது ஆகியோர் ஆவர்.
- வேலு நாச்சியாரின் பெண்கள் படைப்பிரிவிற்குத் தலைமை ஏற்றவர் குயிலி ஆவார்.
- இராமநாதபுரத்தை ஆட்சி செய்த மன்னர் செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார்.
- முத்துவடுகநாதர் ஆங்கிலப்படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்த இடம் காளையார் கோவில் ஆவார்.
- சிவகங்கையை வேலு நாச்சியார் மீட்ட ஆண்டு கி.பி.1780 ஆகும்

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. சிவகங்கையை ஆண்ட மன்னர் முத்துவடுகநாதர். இத்தொடருக்கேற்ற வினாவைக் கண்டறிக

**அ) சிவகங்கையை ஆண்ட மன்னர் யார்?**

ஆ) சிவகங்கையை எவ்வாறு மன்னர் ஆண்டார்?

இ) சிவகங்கையை ஏன் ஆண்டார்?

ஈ) சிவகங்கையை எப்படி ஆண்டார்?

2. விடுபட்ட இடத்தை நிரப்புக "..................... புகழ் ஓங்குக" என்று முழக்கமிட்டனர்.

**அ) உடையாள்** ஆ) வேலு நாச்சியார்

இ) மருது ஈ) தாண்டவராயன்

3. ........................ நாளன்று கோட்டைக்குள் செல்ல, பெண்கள் திட்டமிட்டனர்.

**அ) விஜயதசமி** ஆ) சரஸ்வதி பூஜை

இ) தீபாவளி ஈ) பொங்கல்

4. வேலு நாச்சியார் அறியாத மொழி ......................

அ) ஆங்கிலம் ஆ) பிரெஞ்சு

இ) உருது **ஈ) சமஸ்கிருதம்**

5. சிவகங்கை மீட்கப்பட்டப் பின்புலமாக அமைந்தவை ...................

**அ) வேலு நாச்சியார் வீரம், மருது சகோதரர் ஆற்றல், ஐதல் அலி உதவி**

ஆ) ஐதர் அலி உதவி, மருது சகோதரர் ஆற்றல்

இ) வேலு நாச்சியார் வீரம், ஐதர் அலி உதவிஹ

ஈ) மருது சகோதரர் ஆற்றர், வேலு நாச்சியார் வீரம்

6. வரிசைப்படுத்துக

அ) விஜயதசமி நாளில் கோட்டையை முற்றுகை இடல்

ஆ) கோட்டைக்குத் தீ வைத்தல்

இ) மாறுவேடத்தில் கோட்டைக்குள் நுழைதல்

ஈ) ஐதர் அலி படையனுப்புதல்

**விடை: ஈ, அ, இ, ஆ**

7. "கவலைப்படாதீர்கள், அரசியாரே! நாம் சிவகங்கையை மீட்கும் நேரம் நெருங்கிவிட்டது" எனக் கூறியவர் .......................

**அ) தாண்டவராயன்** ஆ) சின்ன மருது

இ) குயிலி ஈ) பெரிய மருது

8. முத்துவடுகநாதர் ஆங்கிலப்படையுடன் போரிட்டு வீரமரணம் அடைந்த இடம் ..................

**அ) காளையார் கோவில்** ஆ) காலையற் கோவில்

இ) காளையர் கோவில் ஈ) காலையார் கோவில்

9. ஐதர் அலி வேலு நாச்சியாருக்கு உதவக் காரணம் .......................

அ) வேலு நாச்சியார் அரசி என்பதால்

ஆ) நாட்டுப்பற்று காரணமாக

**இ) வேலு நாச்சியார் உருது மொழியில் பேசியதால்**

ஈ) வேலு நாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்தால்

10. உடையாளுக்குச் செய்யப்பட்ட சிறப்புகளுள் மாறுபட்ட ஒன்றனைக் கண்டறிக

அ) நடுகல் நட்டு அவளது பெருமையை எல்லோரும் அறியச் செய்தனர்.

ஆ) வேலு நாச்சியார் தம் தாலியைக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார்.

இ) "உடையாள் புகழ் ஓங்குக" என முழக்கமிட்டனர்

**ஈ) ஆங்கிலேயரால் கொல்லப்பட்டார்**

## 1.3. நால்வகைச் சொற்கள்

**1. சொல்:**

தமிழில் சில எழுத்துகள் தனித்து நின்று பொருள் தரும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தும் பொருள் தரும். இவ்வாறு பொருள் தருபவை சொல் எனப்படும்.

(எ.கா) ஈ, பூ, மை, கல், கடல், தங்கம்

**2. சொற்களின் வகைகள்**

இலக்கண அடிப்படையில் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இசைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

**3. பெயரையும் வினையையும் சார்ந்துவரும் சொற்களை எவ்வாறு வழங்குகிறோம்?**

இடைச்சொல், பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் இடைச்சொல் ஆகும். இது தனித்து இயங்காது

எ.கா: உம் – தந்தையும் தாயும்

கு – தம்பிக்கு

ஐ – திருக்குறளை

**4. பெயர்ச்சொல்**

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்

எ.கா: பாரதி, பள்ளி, காலை, கண், நன்மை, ஓடுதல்

**5. வினைச்சொல்**

வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

எ.கா: வா, போ, எழுது, விளையாடு

**6. உரிச்சொல்:**

பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்.

(எ.கா) மா – மாநகரம்

சால – சாலச்சிறந்தது

**7. நால்வகைச் சொற்களில் தனித்து இயங்குபவை பெயர்சொல், வினைச்சொல், உரிச்சொல் ஆகியன ஆகும்.**

எ.கா: பெயர்ச்சொல் – மனிதன், சென்னை, மாதம், தலை

வினைச்சொல் – அம்மா அழைக்கிறாள், நீர் ஓடுகிறது

உரிச்சொல் – சாலப் பேசினான், உறு பொருள்

**8. பின்வரும் தொடர்களில் உள்ள நால்வகைச் சொற்களை வகைப்படுத்துக**

1. வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்.
   **விடை:** பெயர்ச்சொல் – பேருந்தில்
2. நாள்தோறும் திருக்குறளைப் படி
   **விடை:** இடைச்சொல். ஐ – திருக்குறளை
3. ஏழைக்கு உதவுதல் சாலச்சிறந்தது என்றார் ஆசிரியர்
   **விடை:** உரிச்சொல். சால – சாலசிறந்தது.
4. கீழ்க்காணும் குறளில் உள்ள இடைச்சொல்லை எழுதுக
   மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
   சொற்கேட்டல் இன்பம் செவிக்கு
   **விடை:** குறளில் உள்ள இடைச்சொல் 'கு' – செவிக்கு

**9. சொல்வகையை அறிந்து பொருந்தாச் சொல்லை அடிக்கோடிடுக**

| | | | |
|---|---|---|---|
| 1. அ) படித்தாள் | ஆ) ஐ | **இ) மற்று** | ஈ) கு |
| 2. அ) மதுரை | ஆ) கால் | இ) சித்திரை | **ஈ) ஓடினான்** |
| 3. அ) சென்ற | ஆ) வந்த | **இ) சித்திரை** | ஈ) நடந்த |
| 4. **அ) மாநாடு** | ஆ) ஐ | இ) உம் | ஈ) மற்று |

**10. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. வினைச்சொல்லைத் தேர்ந்தெடு
   அ) தம்பிக்கு ஆ) கல்
   இ) மாமுனி **ஈ) ஓடி**
2. 'புத்தகத்தைப் படி' – இதில் பயின்று வந்துள்ள இடைச்சொல் ....................
   **அ) ஐ** ஆ) க்கு
   இ) ஆல் ஈ) உம்
3. தனித்து இயங்காத சொல் .................
   அ) வினை **ஆ) இடை**
   இ) பெயர் ஈ) உரி
4. பொருந்தாததைத் தேர்ந்தெடு
   அ) தேடினான் ஆ) படித்தான்
   **இ) புனிதன்** ஈ) நடந்தான்
5. 'உம்' என்ற இடைச்சொல் பயின்று வந்துள்ள சொல் ................
   **அ) பசுவும் கன்றும்** ஆ) பசுவின் கன்று
   இ) பசுவுக்கு கன்று ஈ) பசுவால் கன்று
6. பீலிபெய் சாகடும் அச்சிறு அப்பண்டம்
   சால மிகுத்துப் பெயின்
   - குறளில் பயின்று வந்துள்ள உரிச்சொல்
   **அ) சால** ஆ) பெயின்

இ) பீலி ஈ) மிகுத்து

7. பின்வரும் சொற்களில் பெயரைக் குறிப்பது ......................

அ) நட ஆ) கடிநகர்

இ) விளையாட்டின் **ஈ) சிங்கம்**

8. சொல்லின் வகைகள் ......................

**அ) நான்கு** ஆ) மூன்று

இ) இரண்டு ஈ) ஐந்து

9. 'நனி' என்பது .........................

**அ) உரிச்சொல்** ஆ) பெயர்ச்சொல்

இ) வினைச்சொல் ஈ) இடைச்சொல்

10. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடு

**அ) நனிபசு** ஆ) ஆவணி

இ) திங்கள் ஈ) மதுரை

**தெரிந்துக் கொள்ளுங்கள்**

- சுதேதி நாவாய்ச் சங்கத்தை நிறுவியவர் வ.உ.சிதம்பரனார்.
- வ.உ.சி சென்னைக்குச் செல்லும் போது பாரதியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
- வ.உ.சி பாரதியார் பாடல்களை விரும்பிக் கேட்பார்
- வ.உ.சி அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மைகளைப் பெற்றிருந்தார்.
- வ.உ.சி அவர்கள் புலமை பெற்றிருந்த மொழிகள் தமிழ், ஆங்கிலம் ஆகும்.

**11. இடம் அறிந்து பயன்படுத்துவோம்**

ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**(எ.கா)** ஓர் ஊர் ஓர் ஏரி

ஒரு நகரம் ஒரு கடல்

இவை போலவே உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அஃது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் அது என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

**எ.கா:** அஃது இங்கே உள்ளது

அது நன்றாக உள்ளது

**12. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக**

1. ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது

**விடை:** ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது

2. ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

**விடை:** ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

3. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது

**விடை:** அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது

4. அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை

**விடை:** அது நகரத்திற்குச் செல்லும் சாலை.

5. அது ஒரு இனிய பாடல்

**விடை:** அஃது ஒரு இனிய பாடல்

**13. அகர வரிசைப்படுத்துக**

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு

**விடை:** பழங்கள், பாரதம், பின்னிரவு, பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து, பையன், பொதுக்கூட்டம், போக்குவரத்து.

## இயல் – 2

## 2. அறம், தத்துவம், சிந்தனை

## 2. பராபரக் கண்

**நூல் குறிப்பு:**

உலகிற்கு உயர்ந்த உண்மைகளை உணர்த்துவதற்காக 'கண்ணி' என்றழைக்கப்படும் இரண்டடிப் பாடல் வகையில் எழுதப்பட்ட நூல்களுள் ஒன்று.

இந்நூலை இயற்றியவர் திருமறைக்காட்டில் பிறந்த தாயுமானவர் ஆவார். சித்தர் கருத்தைப் போற்றிப் பாடும் இவர் சமரச ஒளி பரவிட இந்நூலில் மிகுதியாய்ப் பாடியுள்ளார்.

**ஆசிரியர் வரலாறு**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தாயுமானவர் |
| பிறந்த ஊர் | : | நாகபட்டினம் மாவட்டம், திருமறைக்காடு |
| பெற்றோர் | : | கேடிலியப்பப்பிள்ளை, கெஜவல்லி அம்மையார் |
| காலம் | : | 1705 – 1792 |
| பணி | : | பெருங்கணக்கர் |

தாயுமானவர் திருச்சியை ஆண்ட விஜயரகுநாத சொக்கலிங்கரிடம் பெருங்கணக் கராய்ப் பணிபுரிந்தார். மட்டுவார் குழலி என்பாரை மணந்து, இளமையிலேயே துறவு பூண்டு நூல் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றப்படுகிறது.

தாயுமானவர் நாகபட்டினம் மாவட்டத்தில் **திருமறைக்காடு** என்னும் ஊரில் பிறந்தார். கேடிலியப்பருக்கும் கெஜவல்லிக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் ஆவார். திருச்சியை ஆண்ட விஜயரகுநாத சொக்கலிங்கரிடம் பெருங்கணக்கராய்ப் பாடினார். இவரது தாயுமானவர் பாடல்கள் என்னும் நூல் தமிழ்மொழியின் **உபநிடதம்** எனப் போற்றப்படுகிறது.

**முக்கியக் குறிப்புகள்**

- **தாயுமானவர்** திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணி பரிந்தவர்.

- அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.
- அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக ஆளாக்கிவிட்டால் **இன்பநிலை** தானே வந்து சேரும்.
- எல்லா உயிரையும் தம் உயிர்போல் கருதும் கருணை உள்ளம் வேண்டும் எனத் **தாயுமானவர்** கூறுகிறார்.
- எல்லோரும் இன்பமாக வாழவேண்டும் என்று **தாயுமானவர்** கூறுகிறார்.
- இந்நூலைத் தமிழ் மொழியின் **உபநிடதம்** எனப் போற்றுவர்.ஹ
- இப்பாடல்கள் 'பராபரக் கண்ணி' என்னும் தலைப்பில் உள்ளன. 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகை.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ...................

**அ) தம்முயிர்** ஆ) தமதுயிர்
இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்

2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .......................

**அ) இன்புற்றிருக்க** ஆ) இன்புறுறிருக்க
இ) இன்புற்று இருக்க ஈ) இன்புறு இருக்க

3. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................

அ) தானெ + என்று **ஆ) தான் + என்று**
இ) தா + னென்று ஈ) தான் + னென்று

4. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்சொல் ..................

அ) அழிவு ஆ) துன்பம்
**இ) சுறுசுறுப்பு** ஈ) சோகம்

5. அன்பருக்குத் தொண்டு செய்வதால் எய்தப்படும் நிலை ...............

அ) அறிவு ஆ) மேன்மை
இ) துன்பம் **ஈ) இன்பம்**

6. அன்னை தெரசா நோய்வாய்ப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்ததன்மூலம் அவரின் .................. வெளிப்படுகிறது.

அ) பணிவு ஆ) துணிவு
**இ) கருணை** ஈ) நட்பு

7. பொருந்தா இணையைத் தேர்ந்தெடு

அ) ஏவல் – தொண்டு ஆ) கூர் – மிகுதி
**இ) எய்தும் – எலும்பு** ஈ) பணி – தொண்டு

8. இரண்டு அடியில் எழுதப்பட்ட செய்யுள் ....................

அ) மதுரை ஆ) புதுக்கவிதை
இ) நாலடியார் **ஈ) திருக்குறள்**

9. 'பராபரமே' என்பதன் பொருள் ...............

**அ) மேலான பொருள்** ஆ) பெரும் பரப்பு

இ) தகுதி ஈ) வீட்டின் பகுதி

10. 'வேறொன்று' என்பதைப் பிரித்து எழுதினால் கிடைப்பது ………………

அ) வே + றொன்று ஆ) வேறொ + ஒன்று

**இ) வேறு + ஒன்று** ஈ) வேற்று + ஒன்று

11. விசயரகுநாத சொக்கலிங்கம் தாயுமானவர் என்னவாகப் பணிபுரிந்தார்?

அ) அமைச்சர் ஆ) புலவர்

இ) எழுத்தர் **ஈ) பெருங்கணக்கர்**

12. 'கூர்' என்பதைக் குறிக்கும் மற்றொரு சொல் ………………

**அ) மிகுதி** ஆ) முனை

இ) கனவு ஈ) தொண்டு

13. எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும்; அதைத் தவிர வேறு எதுவும் நினைக்க மாட்டேன் எனக்கூறியவர் ………………

**அ) தாயுமானவர்** ஆ) ஜி.யு.போப்

இ) தாராபாரதி ஈ) உ.வே.சா

14. 'தமிழ் மொழியின் உபநிடதம்' எனப் போற்றப்படுவது …………………

அ) தேம்பாவணி **ஆ) பராபரக்கண்ணி**

இ) பரமார்த்த குரு கதை ஈ) மணிமேகலை

**எதுகைச் சொற்கள்**

1. த**ம்** உயிர் போல் / செ**ம்**மையருக்கு
2. அ**ன்**பர் பணி / இ**ன்**ப நிலை
3. எ**ல்**லோரும் / அ**ல்**லாமல்

**சீர்மோனைச் சொற்கள்**

1. **தா**னென்று, **த**ண்டருள்
2) **இ**ன்புற்று, **இ**ருக்க

**சொல்லும் பொருளும்**

| | | |
|---|---|---|
| தண்டருள் | – | குளிர்ந்த கருணை |
| செம்மையருக்கு | - | சான்றோருக்கு |
| பராபரமே | - | மேலான பொருளே |
| எய்தும் | - | கிடைக்கும் |
| அல்லாமல் | - | அதைத்தவிர |

கூர் – மிகுதி

ஏவல் – தொண்டு

பணி – தொண்டு

எல்லாரும் – எல்லா மக்களும்

**பிரித்து எழுதுக**

| | | |
|---|---|---|
| தானென்று | - | தான் + என்று |
| ஆளாக்கி | - | ஆள் + ஆக்கி |
| வேறொன்று | - | வேறு + ஒன்று |

**3. சேர்த்து எழுதுக**

தம் + உயிர் – தம்முயிர்

வந்து + எய்தும் – வந்தெய்தும்

**4. எதிர்ச்சொல் எழுதுக**

இன்பம் x துன்பம்

வந்து x சென்று

## 2.1. நீங்கள் நல்லவர்

இப்பாடலை இயற்றியவர் **லெபனான்** நாட்டைச் சேர்ந்த **கலீல் கிப்ரான்** ஆவார். கவிஞர், நாவலாசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர்.

இப்படப்பகுதி கவிஞர் புவியரசு மொழி பெயர்த்த **'தீர்க்கதரிசி'** என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

**முக்கியக்குறிப்புகள்**

- கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் **பன்முக ஆற்றல்** பெற்றவர்.
- கொடுப்பது பழத்தின் இயல்பு; பெறுவது வேரின் இயல்பு
- வாழ்க்கை பின்நோக்கித் திரும்பிச் செல்லாது என்று **கலீல் கிப்ரான்** கூறுகிறார்
- சுயத்துடன் ஒருமைப்பாடு கொண்டிருக்கும் போது நீங்கள் நல்லவர். உறுதியாகக் கால்பதித்து உங்கள் குறிக்கோளை நோக்கி நடந்து செல்கையில் நீங்கள் நல்லவர் என்று **கலீல் கிப்ரான்** பாடுகிறார்.
- இப்பாடப்பகுதி கவிஞர் புவியரசு மொழிபெயர்த்த **தீர்க்கதரிசி** என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பரிசு பெறும்போது நம் மனநிலை .................... ஆக இருக்கும்

அ) கவலை ஆ) துன்பம்

**இ) மகிழ்ச்சி** ஈ) சோர்வு

2. வாழ்வில் உயரக் கடினமாக ................ வேண்டும்

அ) பேச ஆ) சிரிக்க

இ) நடக்க **ஈ) உழைக்க**

3. உழைக்கும் மனிதர்கள் என்னவாக மாறிவிடுகிறார்கள் எனக் கவிஞர் கலீல் கிப்ரான் கூறுகிறார்?

அ) வேர் ஆ) பழம்

**இ) புல்லாங்குழல்** ஈ) இசை

4. எடுத்த செயலில் தோற்றாலும் ................ கைவிடக் கூடாது.

அ) சோர்வு ஆ) தளர்வு

இ) துன்பம் **ஈ) முயற்சி**

5. தோல்வி வந்தாலும் .................... இழக்கக் கூடாது

அ) சோர்வு ஆ) கோபம்

இ) கவலை **ஈ) தன்னம்பிக்கை**

6. கொடுப்பது பழத்தின் இயல்பு பெறுவது ................ இயல்பு

**அ) வேரின்** ஆ) மனிதனின்

இ) பறவையின் ஈ) கிளையின்

7. பொருந்தா இணையைத் தேர்ந்தெடு

**அ) உழைப்பு – கவிதை** ஆ) கொடுப்பது – பழம்

இ) இதயம் – இசை ஈ) பெறுவது – வேர்

8. பாராட்டும் போது பாராட்டப்படுபவரின் மனநிலை .....................

**அ) மகிழ்ச்சி** ஆ) துன்பம்

இ) சோர்வு ஈ) கவலை

9. பன்முக ஆற்றல் என்பது ......................

அ) முக ஒப்பனை செய்யும் திறன் ஆ) பாடல் பாடும் திறன்

இ) பல முகங்கள் கொண்டவர் **ஈ) பல திறன்களைக் கொண்டவர்**

10. 'நீங்கள் நல்லவர்' எனும் கலீல் கிப்ரானின் பாடலைத் தமிழ்மொழியில் மொழி பெயர்த்தவர் ......................

அ) கண்ணதாசன் ஆ) வைரமுத்து

**இ) புவியரசு** ஈ) அழ. வள்ளியப்பா

11. சுயம் என்பதன் பொருள் ..................

அ) வாழ்க்கை **ஆ) தனித்தன்மை**

இ) இசை ஈ) செழிப்பு

12. கலீல் கிப்ரான் அவர்கள் .................. நாட்டைச் சார்ந்தவர்

**அ) லெபனான்** ஆ) ஸ்பெயின்

இ) இஸ்ரேல் ஈ) அரபுநாடு

**சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| சுயம் | – தனித்தன்மை | உள்ளீடுகள் | – உள்ளே இருப்பவை |
| குறிக்கோள் | – உயர்ந்த நோக்கம் | விழிப்புணர்வு | - எச்சரிக்கையோடு இருத்தல் |
| ஒருமைப்பாடு | - ஒற்றுமை உணர்வு | | |

**3. எதிர்ச்சொல் எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| நன்மை | x தீமை | நல்லவர் | x கெட்டவர் |
| எழுவது | x விழுவது | கொடுப்பது | x பெறுவது |

## 2.2. பசிப்பிணி போக்கிய பாவை

**முக்கியக் குறிப்புகள்**

- மணிமேகலையை மணிபல்லவத் தீவிற்குக் கொண்டுவந்து சேர்த்தது **மணிமேகலா தெய்வம்** ஆகும்.
- **வைகாசித் திங்கள் முழுநிலா நாளில்** இப்பொய்கைநீரின் மேல் ஓர் அரிய பாத்திரம் தோன்றும். அஃது ஆபுத்திரன் கையிலிருந்த 'அமுதசுரபி' என்னும் பாத்திரம் ஆகும்
- "மணிமேகலையே! உயிர்களின் பசியைப் போக்கும் அமுதசுரபியை நீ பெற்றுள்ளாய். இனி இவ்வுலக உயிர்களுக்குப் பசி இல்லாமல் போகும்படி உணவு வழங்கி உயர்வு பெறுவாயாக," என்று **தீவதிலகை** கூறினாள்.
- மணிபல்லவத்தீவில் பூக்கள் நிறைந்து விளங்கும் பொய்கைக்குக் கோமுகி என்று பெயர். 'கோ' என்றால் பசு; முகி என்றால் முகம்; பசுவின் முகம் போன்று பொய்கை அமைந்து இருப்பதால் **'கோமுகி'** என்று பெயர் பெற்றது.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ..................

அ) இலங்கைத்தீவு ஆ) இலட்சத்தீவு

**இ) மணிபல்லவத்தீவு** ஈ) மாலத்தீவு

2. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் ……………….

அ) சித்திரை **ஆ) ஆதிரை**

இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

3. இரட்டைக் காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை; மற்றொன்று ………………….

அ) வளையாபதி ஆ) குண்டலகேசி

**இ) சிலப்பதிகாரம்** ஈ) சீவகசிந்தாமணி

4. உணவு தயாரிப்பில் தொடர்புடையவர் ……………..

அ) பொறியாளர் ஆ) ஆசிரியர்

**இ) விவசாயி** ஈ) நீதிபதி

5. கோமுகி என்பதன் பொருள் ……………..

அ) தீவு **ஆ) பசுவின் முகம்**

இ) அரசன் மகள் ஈ) காளை மாடு

6. உணவை எடுக்க எடுக்கக் குறையாத பாத்திரம் ………………

அ) உணவுசுரபி ஆ) அன்னசுரபி

**இ) அமுதசுரபி** ஈ) அக்காரச்சுரபி

7. 'புத்தர் பிறந்து அறம் போதித்த பூமி' என்று கூறியவர் …………………

அ) மன்னர் ஆ) தீவதிலகை

**இ) மணிமேகலை** ஈ) ஆதிரை

8. தனி ஒரு மனிதனுக்கு …………….. இல்லை என்றால் இந்த ஜகத்தினை அழிக்கலாம்

அ) நீர் ஆ) ஆடை

இ) கல்வி **ஈ) உணவு**

9. மணிமேகலை காப்பியத்தின்படி சிறந்த அறம் …………….

அ) கற்பிப்பது **ஆ) உணவு கொடுப்பது**

இ) வாகனம் ஓட்டுவது ஈ) வேலை வாங்கித் தருவது

10. மணிமேகலை ………………. நகரைச் சேர்ந்தவள்

அ) கொங்குநாடு **ஆ) பூம்புகார்**

இ) மதுரை ஈ) மணிபல்லவம்

11. பொருந்தாததைத் தேர்ந்தெடு

அ) மணிமேகலை **ஆ) கம்பராமாயணம்**

இ) வளையாபதி ஈ) குண்டலகேசி

12. அமுதசுரபி தோன்றும் நாள் ………………

அ) வைகாசி தேய்பிறை ஆ) வைகாசி அமாவாசை

**இ) வைகாசி பௌர்ணமி** ஈ) வைகாசி வளர்பிறை

**2. சொற்றொடரில் அமைத்து எழுதுக**

அ) செடிகொடிகள் ஆ) முழுநிலவு நாள் இ) அமுதசுரபி ஈ) நல்லறம்

அ) எங்குப் பார்த்தாலும் **செடிகொடிகள்** பூத்துக் குலுங்கின.

ஆ) வைகாசித் திங்கள் **முழுநிலவு நாளில்** ஓர் அரிய பாத்திரம் தோன்றும்.

இ) ஆபுத்திரன் கையிலிருந்த பாத்திரம் **அமுதசுரபி** ஆகும்.

ஈ) ஏழைமக்களின் பசியைப் போக்குவதே **நல்லறம்** ஆகும்

## 2.3. பாதம்

**முக்கியக் குறிப்புகள்**

- பாதம் என்னும் சிறுகதையின் ஆசிரியர் **எஸ்.ராமகிருஷ்ணன்** ஆவார்
- **உபபாண்டவம், சுதா விலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள்** முதலிய நூல்களை எஸ்.ராமகிருஷ்ணன் எழுதியுள்ளார்.
- 'பாதம்' சிறுகதை **'தாவரங்களின் உரையாடல்'** என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பாதம் கதையின் தொடக்கத்தில் மாரியின் நிலை .................

   அ) நிலையான வருமானம் ஆ) நடுத்தரச் செல்வநிலை

   இ) செல்வர் **ஈ) ஏழ்மை**

2. காலணியால் மாரி அடைந்தது ......................

   **அ) பணமும் புகழும்** ஆ) வறுமையும் நோயும்

   இ) பொய்யும் புரட்டும் ஈ) வெறுப்பும் கோபமும்

3. கதையின் தொடக்கத்திலும் முடிவிலும் உள்ள ஒற்றுமை .....................

   **அ) மழைக்காலம்** ஆ) காலணி தைப்பவர் முதியவர்

   இ) காலணிக்குரியவர் சிறுமி ஈ) மாரியின் வறுமை

4. பாதம் கதை உணர்த்தும் கருத்து

   அ) செல்வமே உலகில் நிலையானது **ஆ) நேர்மைக்கு விலையில்லை**

   இ) பேராசை பெருநட்டம் ஈ) அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு

5. வரிசைப்படுத்துக

   அ) தைக்கப்ட்ட காலணி பெண்மணிக்குப் பொருந்தவில்லை

   ஆ) முப்பது ஆண்டுகள் கழித்து வந்த நடுத்தர வயதிலிருந்த பெண் காலணியைப் பெற்றுச் சென்றாள்.

   இ) சிறுமி அழகான காலணியைத் தைக்கக் கொடுத்தாள்

   ஈ) திரையரங்க வாயிலில் காலணி தைக்கும் மாரி அமர்ந்திருந்தார்.

   உ) காலணியின் மாயத்தன்மை மாரிக்கு வருமானத்தைத் தந்தது.

   1. அ, ஆ, இ, ஈ, உ **2. ஈ, இ, உ, ஆ, அ**

   3. இ, ஆ, அ, ஈ, உ 4. இ, ஈ, அ, உ, ஆ

6. காலணிணைப் பெற்றுச் செல்லச் சிறுமி எடுத்துக்கொண்ட காலம் ................

   அ) ஒரு வாரம் ஆ) ஒரு வருடம்

   **இ) முப்பது வருடங்கள்** ஈ) ஒருநாள்

7. மாரியிடம் இருந்த சிறுமியின் காலணி ......................

அ) வழுக்கும் தன்மை உடையது ஆ) சக்கரங்கள் உடையது

இ) சாதாரணமானது **ஈ) மாயத்தன்மை உடையது**

8. சிறுமி தந்த காலணியைத் தைத்தபின் முதலில் அணிந்தவர் .....................

அ) பக்கத்து வீட்டுக்காரர் ஆ) உடன் தொழில் செய்பவர்

இ) மாரி **ஈ) மாரியின் மனைவி**

9. காலணி அணிந்தபொழுது மக்களிடம் ஏற்பட்ட உணர்வின் வருணனை ......................

**அ) பனியின் மென்மை படர்வது போல** ஆ) முள்ளின்மீது நடப்பது போல

இ) நெருப்பின்மீது நிற்பது போல ஈ) புல்லின்மீது நிற்பது போல

10. கதையில் வரும் காலணி தைப்பவரின் பண்பு ......................

அ) கயமை **ஆ) நேர்மை**

இ) கடுமை ஈ) பொய்ம்மை

11. செந்நிறக் காலணியின் சிறப்பு ....................

அ) உரியவருக்கு மட்டும் பொருந்துவது

**ஆ) அனைவருக்கும் பொருந்துவது**

இ) இளைஞர்களுக்கு மட்டும் பொருந்துவது

ஈ) சிறுமியருக்கு மட்டும் பொருந்துவது

12. சிறுமியின் காலணி குறித்த சிறப்புகளுடன் பொருந்தாதது ................

அ) பெயரிடப்படாத நறுமணம் **ஆ) கருப்பு வண்ண அடிப்பாகம்**

இ) வெல்வெட்டில் பூவேலை ஈ) இளஞ்சிவப்பு நிறம்

## 2.4. பெயர்ச்சொல்

**முக்கியக் குறிப்புகள்**

**1. பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்**

**2. இடுக்குறிப்பெயர் என்றால் என்ன?**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் சில பெயர்களை குறிப்பிட்டு வழங்கினர். அவ்வாறு குறிப்பிட்டு வழங்கிய பெயர்கள் இடுக்குறிப்பெயர்கள் ஆகும்.

எ.கா: மண், மரம், காற்று

**3. காரணப்பெயர் என்றால் என்ன?**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிச் சில பெயர்களை குறிப்பிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.

(எ.கா) நாற்காலி, கரும்பலகை

**4. பொருட்பெயர் என்றால் என்ன?**

பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இஃது உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

எ.கா: மரம், செடி, மயில், பறவை

**5. இடப்பெயர் என்றால் என்ன?**

ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

எ.கா: சென்னை, பள்ளி, பூங்கா, தெரு

**6. காலப்பெயர் என்றால் என்ன?**

காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

எ.கா: நிமிடம், நாள், வாரம், சித்திரை, ஆண்டு

**7. சினைப்பெயர் என்றால் என்ன?**

பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

எ.கா: கண், கை, இலை, கிளை

**8. பண்புப்பெயர் என்றால் என்ன?**

பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

எ.கா: வட்டம், சதுரம், செம்மை, நன்மை

**9. தொழிற்பெயர் என்றால் என்ன?**

தொழிலைக்குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

எ.கா: படித்தல், ஆடுதல், நடித்தல்

**10. இடுகுறிப்பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும். அவை 1) இடுகுறிப் பொதுப்பெயர் 2) இடுகுறிச் சிறப்புப்பெயர்

**11. காரணப்பெயர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

காரணப்பெயர் இரண்டு வகைப்படும்.

அவை: 1) காரணப் பொதுப்பெயர் 2) காரணச் சிறப்புப்பெயர்

**12. இடுகுறிப் பொதுப்பெயரை விளக்குக**

ஓர் இடுகுறிப்பெயர் அத்தன்மையுடைய எல்லாப் பொருள்களையும் குறிப்பது இடுகுறிப் பொதுப்பெயர் எனப்படும்.

எ.கா: மரம், பழம்

**13. இடுகுறிச் சிறப்புப்பெயரை விளக்குக**

ஓர் இடுகுறிச் சிறப்புப்பெயர் குறிப்பாய் ஒரு பொருளை மட்டும் குறிப்பது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும்.

எ.கா: மா, வாழை

**14. காரணப் பொதுப்பெயரை விளக்குக**

காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லா வகைப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது, காரணப்பொதுப்பெயர் எனப்படும்.

**15. காரணச் சிறப்புப்பெயரை விளக்குக**

குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது காரணச் சிறப்புப்பெயர் ஆகும்.

எ.கா: வளையல், நாற்காலி

**16. அறுவகைப் பெயர்ச்சொல்களை எழுதுக**

1. பொருட்பெயர், 2. இடப்பெயர், 3. காலப்பெயர், 4. சினைப்பெயர், 5. பண்புப்பெயர், 6. தொழிற்பெயர்

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. இடுகுறிப்பெயரை அடிக்கோடு இடுக

அ) பறவை **ஆ) மண்**

இ) முக்காலி ஈ) மரங்கொத்தி

2. காரணப்பெயரை அடிக்கோடு இடுக

அ) மரம் **ஆ) வளையல்**

இ) சுவர் ஈ) யானை

3. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக

அ) வயல் **ஆ) வாழை**

இ) மீன்கொத்தி ஈ) பறவை

4. இடப்பெயரைத் தேர்ந்தெடுக

அ) காகம் ஆ) சதுரம்

இ) சித்திரை **ஈ) மாவட்டம்**

5. பெயர்ச்சொல்லின் வகைகள் ………………

அ) நான்கு **ஆ) ஆறு**

இ) மூன்று ஈ) ஐந்து

6. இடுகுறிச்சிறப்புப்பெயரைத் தேர்ந்தெடு

அ) மலை **ஆ) வாழை**

இ) பழம் ஈ) தெரு

7. பள்ளியில் உள்ள மேசை செவ்வக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது – இவ்வாக்கியத்தின் பண்புப்பெயரைத் தேர்ந்தெடு

அ) வடிவில் ஆ) மேசை

இ) பள்ளி **ஈ) செவ்வகம்**

8. 'சாலையில் காவலர் கை அசைத்துப் போக்குவரத்தைக் கட்டுப்பட்டுத்தினார்' – வாக்கியத்தில் சினைப்பெயரைத் தேர்ந்தெடு

அ) காவலர் **ஆ) கை**

இ) சாலை ஈ) போக்குவரத்து

6. காரணச் சிறப்புப்பெயரைத் தேர்ந்தெடு

**அ) சீரகம்** ஆ) வானூர்தி

இ) அணிகலன் ஈ) பறவை

7. இடுகுறி பொதுப்பெயரைத் தேர்ந்தெடு

அ) இன்று ஆ) நிலா

**இ) மரம்** ஈ) நெல்

8. அடுத்த வருடம் என் அப்பா புதிய வீடு கட்டுவார் – இவ்வாக்கியத்தில் காலப் பெயரைத் தேர்ந்தெடு

**அ) வருடம்** ஆ) புதிய

இ) அப்பா ஈ) வீடு

9. காரணப்பெயரைத் தேர்ந்தெடு

அ) பாறை ஆ) கதவு

இ) மேசை **ஈ) காதணி**

10. இடுகுறிப்பெயரைத் தேர்ந்தெடு

அ) எழுதுகோல் ஆ) பறவை

இ) நாற்காலி **ஈ) வாழை**

**2. பொருள் கூறுக**

கருணை – இரக்கம் அச்சம் – பயம் ஆசை – விருப்பம்

**3. கீழ்க்காணும் பெயர்ச்சொற்களை அகரவரிசையில் எழுதுக**

பூனை, தையல், தேனி, ஓணான், மான், வௌவால், கிளி, மாணவன், மனிதன், ஆசிரியர், பழம்

**விடை:** ஆசிரியர், ஓணான்இ சிளி, தேனி, தையல், பழம், பூனை, மனிதன், மாணவன், மான், வௌவால்

**4. பின்வரும் வாக்கியங்களில் உள்ள அறுவகைப் பெயர்களை எடுத்து எழுதுக**

1. கைகள் இரண்டும் பிறர்க்கு உதவவே எனச் சான்றோர் கருதினர்.

**விடை:** கைகள் – சினைப்பெயர்

2. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூலின் பயனாகும்.

**விடை:** வீடு – இடப்பெயர்

3. அறிஞர்களுக்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்

**விடை:** அடங்கல் – தொழிற்பெயர்

4. நீதிநூல் பயில் என்கிறார் பாரதியார்

**விடை:** நூல் – பொருட்பெயர்

5. மாலை முழுவதும் விளையாட்டு

**விடை:** மாலை – காலப்பெயர்

6. அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்.

**விடை:** அன்பு – பண்புப்பெயர்

**5. பின்வரும் பாடலைப் படித்து அடிக்கோடிட்ட சொல் எவ்வகைப் பெயர் என்பதை எழுதுக**

விடியலில் துயில் எழுந்தேன் – காலப்பெயர் – விடியல்

இறைவனைக் கை தொழுதேன் – சினைப்பெயர் – கை

புகழ்பூத்த மதுரைக்குச் சென்றேன் – இடப்பெயர் – மதுரை

கற்றலைத் தொடர்வோம் இனி – தொழிற்பெயர் – கற்றல்

நன்மைகள் பெருகும் நனி – பண்புப்பெயர் – நன்மை

**6. கட்டங்களில் உள்ள வார்த்தைகளைக்கொண்டு தொடர்களை அமைக்க**

| | | |
|---|---|---|
| வெல்லும் | கேளிர் | தீதும் |
| வாரா | நன்றும் | யாவரும் |
| யாதும் ஊரே | பிறர்தர | வாய்மையே |

**விடை:** 1. வாய்மையே வெல்லும்

2) தீதும் நன்றும் பிறர்தர வாரா

3. யாதும் ஊரே யாவரும் கேளிர்

**7. சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துங்கள்**

1) சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்.

2) மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்.

3) சிறைச்சாலைக்குச் சென்று உணவிட்டாள்

4) அமுதசுரபியைப் பெற்றாள்

5) ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்

**விடை:**

1) மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்.

2) அமுதசுரபியைப் பெற்றாள்

3) ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்

4) சிறைச்சாலைக்குச் சென்று உணவிட்டாள்

5. சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்.

**8. ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

**1. அரம் – அறம்**

இரும்மைத் தேய்ப்பதற்கு **அரம்** பயன்படுகிறது.

**அறம்** செய விரும்பு

**2. மனம் – மணம்**

நல்ல **மனம்** வாழ்க

மல்லிகைப்பூவின் **மணம்** மயங்கவைக்கும்

**9. இருபொருள் தருக**

எ.கா: ஆறு – நதி, எண்

1. திங்கள் – திங்கட்கிழமை, மாதம்

2. ஓடு – வேயும் ஓடு, ஓட்டமாய்ச் செல்லுதல்

3. நகை – அணிகலன், சிரிப்பு

**10. புதிர்ச்சொல் கண்டுபிடி**

1. இச்சொல் மூன்றெழுத்துச் சொல்

2. உயிர் எழுத்துகள் வரிசையில் முதல் எழுத்து இச்சொல்லின் முதல் எழுத்து

3. வல்லின மெய் எழுத்துகளின் வரிசையில் கடைசி எழுத்து இச்சொல்லின் இரண்டாம் எழுத்து இச்சொல்லின் இரண்டாம் எழுத்து.

4. வாசனை என்னும் பொருள்தரும் வேறு சொல்லின் கடைசி எழுத்து இச்சொல்லின் மூன்றாம் எழுத்து அஃது என்ன?

**விடை: அறம்**

**11. கட்டத்தில் உள்ள சொற்களைக்கொண்டு தொடர்கள் உருவாக்குக**

| | | |
|---|---|---|
| மாலையில் | கற்போம் | மாலையில் விளையாடுவோம் |
| பிறருக்கு உதவி | எழுவோம் | பிறருக்கு உதவி புரிவோம் |
| பெரியோரை | விளையாடுவோம் | பெரியோரை வணங்குவோம் |
| நூல் பல | செய்வோம் | நூல்பல கற்போம் |
| உடற்பயிற்சி | புரிவோம் | உடற்பயிற்சி செய்வோம் |
| அதிகாலையில் | வணங்குவோம் | அதிகாலையில் எழுவோம். |

**12. கலைச்சொல் அறிவோம்**

1. அறக்கட்டளை - Trust
2. தன்னார்வலர் - Volunteer
3. இளம் செஞ்சிலுவைச் சங்கம் - Junior Red cross
4. சாரண சாரணியர் - Scouts & Guides
5. சமூகப் பணியாளர் - Social worker

## 2.5. திருக்குறள்

**முக்கியக் குறிப்புகள்**

- திரு + குறள் – மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்ட நூல் ஆதலின் இப்பெயர் பெற்றது
- திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.
- திருக்குறளில் 133 அதிகாரங்களும், அதிகாரத்திற்கு 10 குறளும், மொத்த 1330 குறட்பாக்களைக் கொண்டது.
- திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக இது விளங்குகிறது.
- தெய்வநூல், பொய்யாமொழி, தமிழ்மறை, முப்பால் என்னும் வேறு பெயர்கள் இந்நூலுக்கு உண்டு.
- "ஆலும் வேலும் பல்லுக்குறிதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறிதி", "கடுகைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" போன்ற சொற்றொடர்கள் இந்நூலின் பெருமையை விளக்குவதாகும்.
- உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறந்த அறம் என வள்ளுவர் கூறுகிறார்.
- பெறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே **அறம்** என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**ஆசிரியர் குறிப்பு தருக**

பெயர் - திருவள்ளுவர்
பெற்றோர் - ஆதி, பகவன்
ஊர் - சென்னையில் உள்ள மயிலாப்பூர்
காலம் - கி.மு. 31

திருவள்ளுவர் வாசகி என்ற பெண்ணை மணந்து, நெசவுத்தொழில் செய்து வாழ்ந்தார் என்பர். இவருக்குத் தெய்வப்புலவர், நாயனார், நான்முகன், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்னும் பல பெயர்கள் உண்டு. வள்ளுவர் பெருமையை செந்நாப்போதார், பெருநாவலர் என்னும் பல பெயர்கள் உண்டு. வள்ளுவர் பெருமையை விளக்கும் நினைவுச்சின்னங்களாகச் சென்னையில்

அமைந்துள்ள வள்ளுவர் கோட்டமும், கன்னியாகுமரியில் அமைந்துள்ள 133 அடி உயரமுள்ள சிலையும் விளங்குகின்றன.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே .................... ஆகும்.

அ) பகை | **ஆ) ஈகை**

இ) வறுகை | ஈ) கொடுமை

2. பிற உயிர்களின் .........................க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.

அ) மகிழ்வை | ஆ) செல்வத்தை

**இ) துன்பத்தை** | ஈ) பகையை

3. உள்ளத்தில் .................. இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.

அ) மகிழ்ச்சி | ஆ) மன்னிப்பு

இ) துணிவு | **ஈ) குற்றம்**

4. இலண்டன் அருங்காட்சியத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ் நூல் ......................

**அ) திருக்குறள்** | ஆ) கம்பராமாயணம்

இ) மணிமேகலை | ஈ) தமிழ்க் கையேடு

5. திருக்குறளில் இடம் பெறாத ஒரே எண் .....................

அ) மூன்று | ஆ) எட்டு

**இ) ஒன்பது** | ஈ) ஐந்து

6. திருக்குறளின்படி உண்மையான ஈகை என்பது .................

அ) உறவினர்க்கு | **ஆ) பிச்சைக்காரர்க்கு**

இ) உடன் பணிபுரிவோர்க்கு | ஈ) நண்பனுக்கு

7. இன்னா செய்தாரை – இத்தொடரில் பயின்று வந்துள்ள இடைச்சொல் .................

அ) ஆல் | ஆ) இன்

**இ) ஐ** | ஈ) மற்று

8. இன்னா என்பதன் பொருள் ...................

**அ) துன்பம்** | ஆ) இனிமை

இ) துயில் | ஈ) உறக்கம்

9. பின்வருவனவற்றுள் திருவள்ளுவரைக் குறிப்பிடாத பெயர் .......................

அ) தெய்வப்புலவர் | **ஆ) புகழ்வேந்தர்**

இ) பொய்யாப் புலவர் | ஈ) செந்நாப் போதர்

10. ‘நன்னயம்’ பிரித்து எழுதினால் கிடைப்பது .................

**அ) நன்மை + நயம்** | ஆ) நன்மை + னயம்

இ) நன் + நயம் | ஈ) நன் + னயம்

11. திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் .................

அ) உ.வே.சா | ஆ) தஞ்சை ஞானப்பிரகாசர்

இ) வீரமாமுனிவர் | **ஈ) ஜி.யு.போப்**

12. ஆற்றுவார் ஆற்றல் ................ போற்றுவார்/போற்றலுள் எல்லாம் தலை.

அ) பேராற்றல் **ஆ) இகழாமை**

இ) எல்லாம் ஈ) பல்லுயிர்

13. திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதியவர் .......................

அ) ஜி.யு.போப் ஆ) பரிமேலழகர்

இ) மு.வ **ஈ) மணக்குடவர்**

**2. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக**

வறியார்க்கொன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்
குறியெதிர்பை உடைத்து நீரது

**விடை:** வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை

**விடை:** எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை

**3. சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாசு | – | குற்றம் | அழுக்காறு | – | பொறாமை |
| அவா | – | பேராசை | வெகுளி | - | சினம் |
| ஈகை | - | கொடை | இன்னா | - | துன்பம் |
| ஒறுத்தல் | - | தண்டித்தல் | நாணம் | - | வெட்கம் |
| ஓம்புதல் | - | பாதுகாத்தல் | | | |

**4. பிரித்து எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாசிலன் | - | மாசு + இலன் | பகுத்துண்டு | - | பகுத்து + உண்டு |
| பல்லுயிர் | - | பல + உயிர் | உய்வுண்டாம் | - | உய்வு + உண்டாம் |

**5. சேர்த்து எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அனைத்து + அறன் | - | அனைத்தறன் | இன்னா + சொல் | - | இன்னாச்சொல் |
| மற்று + எல்லாம் | - | மற்றெல்லாம் | நன்மை + நயம் | - | நன்னயம் |
| பிழைத்து + ஒழுகுவார் | - | பிழைத்தொழுகுவார் | | | |

**6. எதிர்ச்சொல் எழுதுக**

வெகுளி x மகிழ்ச்சி இன்பம் x துன்பம்

பெரியார் x சிறியார் இகழ்தல் x புகழ்தல்

போற்றுவார் x தூற்றுவார்

## இயல்-3

## 3. மனிதம், ஆளுமை

## 3. ஆசியஜோதி

**நூல் குறிப்பு**

**எட்வின் அர்னால்டு** என்பவர் எழுதிய **லைட் ஆஃப் ஆசியா** (Light of Asia) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல் இது.

முப்பத்தாறு ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.

**புத்தர்பிரானின்** வரலாற்றைக் கதைப் பாடலாகப் படைத்துள்ளார், கவிமணி தேசிய விநாயகனார். ஆசிய ஜோதி கவிமணியின் படைப்புகளுள் சிறப்பான ஒன்றாகும்.

நமது பழந்தமிழ் நூல்களில் புத்தரைப் பற்றியும், பௌத்த சமயத்தைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. எனினும், அவற்றைக் கொண்டு நாம் புத்தர் பெருமானுடைய சரிதத்தை முற்றிலும் அறிந்துகொள்ள இயலாது. இக்குறையைக் கவிமணியின் 'ஆசியஜோதி' போக்கிவிட்டது என்கிறார் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை.

**ஆசிரியர் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | தேசிகவிநாயகம் |
| பட்டம் | : | கவிமணி |
| ஊர் | : | கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் |
| காலம் | : | பிறப்பு: 1876 ஜீலை 27<br>இறப்பு: 1954 செப்டம்பர் 26 |
| பெற்றோர் | : | சிவதாணுப்பிள்ளை – ஆதிலட்சுமி |
| பணி | : | பள்ளி ஆசிரியராக 36 ஆண்டுகள் பணியாற்றியவர் |
| நூல்கள் | : | ஆசியஜோதி, மலரும், மாலையும், மருமக்கள் வழி மான்மியம் கவிமணியின் உரைமணிகள் உள்ளிட்ட நூல்கள் |

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. புத்தரின் வரலாற்றுக் கூறும் நூல் .................
   அ) ஜீவஜோதி **ஆ) ஆசியஜோதி**
   இ) நவஜோதி ஈ) ஜீவன்ஜோதி
2. நேர்மையான வாழ்வை வாழ்பவர் ..................
   **அ) எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்**
   ஆ) உயிர்களைத் துன்புறுத்துபவர்
   இ) தம்மை மட்டும் காத்துக் கொள்பவர்
   ஈ) தம் குடும்பத்தையே எண்ணி வாழ்பவர்
3. ஒருவர் செய்யக் கூடாதது ...................
   அ) நல்லவினை **ஆ) தீவினை**
   இ) பிறவினை ஈ) தன்வினை
4. 'எளிதாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....................
   அ) எளிது + தாகும் ஆ) எளி + தாகும்
   **இ) எளிது + ஆகும்** ஈ) எளிதா + ஆகும்

5. 'பாலையெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பாலை + யெல்லாம் **ஆ) பாலை + எல்லாம்**

இ) பாலை + எலாம் ஈ) பா + எல்லாம்

6. இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ......................

அ) இன்உயிர் ஆ) இனியஉயிர்

**இ) இன்னுயிர்** ஈ) இனிமைஉயிர்

7. மலை + எலாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) மலைஎலாம் **ஆ) மலையெலாம்**

இ) மலையெல்லாம் ஈ) மலைஎல்லாம்

8. 'லைட் ஆஃப் ஆசியா' என்னும் ஆங்கில நூலின் எழுத்தாளர் .......................

அ) பாரதிதாசன் ஆ) தேசிக விநாயகனார்

இ) தாராபாரதி **ஈ) எட்வின் அர்னால்டு**

9. நாடு + எங்கும் என்ற சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது .................

அ) நாட்டெங்கும் ஆ) நாடேங்கும்

**இ) நாடெங்கும்** ஈ) நாடுஎங்கும்

10. அகர வரிசைப்படி சரியானதைத் தேர்ந்தெடு

அ) கருணை, பொறுமை, இரக்கம், உண்மை

**ஆ) இரக்கம், உண்மை, கருணை, பொறுமை**

இ) பொறுமை, இரக்கம், உண்மை, கருணை

ஈ) உண்மை, கருணை, பொறுமை, இரக்கம்

11. 'கும்பி' என்பதன் பொருள் ....................

அ) கால் ஆ) கை

**இ) வயிறு** ஈ) தலை

12. கோடிட்ட இடத்திற்குரிய வினாச்சொல்லைத் தேர்வு செய்க: 'ஆசியஜோதி' என்ற பாடத் தொகுப்பு ....................... இயற்றப்பட்டது

அ) யாரை ஆ) யாருடைய

**இ) யாரால்** ஈ) யார்

13. தலைசிறந்த பண்பாக ஆசியஜோதி குறிப்பிடுவது ....................

அ) தலைமை ஆ) பொறுமை

**இ) இரக்கம்** ஈ) கோபம்

14. ஆசியஜோதியில் உயிர்க்கொலையைத் தடுத்து நிறுத்தக் காரணமாக அமைந்தது ......................

அ) மன்னனின் யாகம் **ஆ) புத்தரின் அறிவுரை**

இ) புத்தரின் எளிமை ஈ) புத்தரின் தியானம்

15. மன்னராலும் முடியாத செயலாக ஆசியஜோதி குறிப்பிடுவது ......................

அ) பகைவரிடம் இருந்து நாட்டைப் பாதுகாப்பது

ஆ) மக்களைப் பேணிக் காப்பது

இ) வாழ்கின்ற உயிர்களை அழிப்பது

**ஈ) இறந்த உடலுக்கு உயிர் கொடுத்து எழுப்புவது**

16. முறைப்படுத்தப்பட்ட சொற்றொடரைத் தேர்வு செய்க

அ) உயிர்களைக் செயலைச் பிற கொல்லும் செய்யாதீர்கள்

ஆ) செயலைக் கொல்லும் பிற உயிர்களைக் செய்யாதீர்கள்

**இ) பிற உயிர்களைக் கொல்லும் செயலைச் செய்யாதீர்கள்**

ஈ) பிற கொல்லும் உயிர்களைக் செயலைச் செய்யாதீர்கள்

17. பொருளறிந்து பொருத்துக

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **விடை** |
| மாரி | - | சந்திரன் | - | மழை |
| பார் | - | சூரியன் | - | உலகம் |
| திங்கள் | - | உலகம் | - | சந்திரன் |
| ஞாயிறு | - | மழை | - | சூரியன் |

**2. சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அஞ்சினர் | - | பயந்தனர் | கருணை | – | இரக்கம் |
| வீழும் | - | விழும் | ஆகாது | - | முடியாது |
| பார் | - | உலகம் | நீள்நிலம் | - | பரந்த உலகம் |
| முற்றும் | - | முழுவதும் | மாரி | - | மழை |
| கும்பி | - | வயிறு | பூதலம் | - | பூமி |

**3. பிரித்து எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எளிதாகும் | - | எளிது + ஆகும் | இன்னுயிர் | - | இனிமை + உயிர் |
| பாலையெல்லாம் | - | பாலை + எல்லாம் | பக்குவமாவது | - | பக்குவம் + ஆவது |

**4. சேர்த்து எழுதுக**

| | | |
|---|---|---|
| அண்டி + பிழைக்கும் | – | அண்டிப் பிழைக்கும் |
| செய்த + எல்லாம் | - | செய்தவெல்லாம் |
| தீமை + வினை | - | தீவினை |

**5. எதிர்ச்சொல் எழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாழும் | x | வீழும் | நன்மை | x | தீமை |
| பாவம் | x | புண்ணியம் | தீவினை | x | நல்வினை |
| சொர்க்கம் | x | நரகம் | | | |

## 3.1. மனிதநேயம்

**முக்கியக் குறிப்புகள்**

*"வாழ்க்கை என்பது*

*நீ சாகும் வரை அல்ல*

*மற்றவர் மனதில்*

*நீ வாழும் வரை"*

- இது **அன்னை தெரசாவின் பொன்மொழி** ஆகும்

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"

- **வள்ளலார்**

குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம். உலகத்தைக் குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது.

**- கைலாஷ் சத்யார்த்தி**

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்

அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை

**இ) மனிதநேயம்** ஈ) மனித உடைமை

2. தம் பொருளைக் கவர்ந்தவரிடமும் ...................... காட்டியவர் வள்ளலார்.

அ) கோபம் ஆ) வெறுப்பு

இ) கவலை **ஈ) அன்பு**

3. அன்னை தெரசாவிற்கு ...................... க்கான 'நோபல் பரிசு' கிடைத்தது

அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல்

இ) மருத்துவம் **ஈ) அமைதி**

4. கைலாஷ் சத்யார்த்தி தொடங்கிய இயக்கம் ........................

**அ) குழந்தைகளைப் பாதுகாப்போம்** ஆ) குழந்தைகளை நேசிப்போம்

இ) குழந்தைகளை வளர்ப்போம் ஈ) குழந்தைகள் உதவி மையம்

5. 'குழந்தைகளைப் பாதுகாப்போம்' என்னும் அமைப்பு ................... ஏற்படுத்தப்பட்டது.

அ) ஆதரவற்ற குழந்தைகளுக்காக **ஆ) பள்ளி செல்லாத குழந்தைகளுக்காக**

இ) நோயுற்ற குழந்தைகளுக்காக ஈ) பெண் குழந்தைகளுக்காக

6. குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு ..................... கல்வி வழங்கியவர்.

அ) அன்னை தெரசா ஆ) நெல்சன் மண்டேலா

இ) மலாலா **ஈ) கைலாஷ் சத்யார்த்தி**

7. 103 என்பதன் தமிழ் எண்ணுரு .....................

**அ) க0ங** ஆ) க00ரு

ஆ) கங0 ஈ) க0ங0

8. 'தமக்கென முயலா நோன்றாள்' என்னும் அடி இடம் பெற்றுள்ள நூல் .....................

அ) திருக்குறள் ஆ) ஆசியஜோதி

**இ) புறநானூறு** ஈ) அகநானூறு

9. முறைப்படுத்தப்பட்ட சொற்றொடரைத் தேர்வு செய்க

அ) பயப்பவை படிக்கப் படிக்க இன்பம் நூல்கள்

ஆ) இன்பம் படிக்க படிக்கப் பயப்பவை நூல்கள்

**இ) படிக்கப் படிக்க இன்பம் பயப்பவை நூல்கள்**

ஈ) படிக்கப் படிக்கப் பயப்பவை இன்பம் நூல்கள்

10. மனிதத் தன்மைக்கு எதிரான செயல் ......................

அ) பசித்தோருக்கு உணவு அளிப்பது

**ஆ) குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது**

இ) உயிரினங்களிடம் அன்பு காட்டுவது

ஈ) முதியோர்களைப் பேணுவது

11. மயங்கொலி பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க

அ) கிணறு ஆளுமாக உள்ளது **ஆ) கிளியின் அலகு சிவப்பு நிறம்**

இ) வானில் நிலவு ஒலி வீசுகிறது ஈ) சூரியன் மேற்கில் மறைகிறது

12. சத்திய தருமச்சாலை என்னும் அமைப்பைத் தொடங்கியவர் ...............

அ) தாயுமானவர் **ஆ) வள்ளலார்**

இ) இளங்கோவடிகள் ஈ) திருவள்ளுவர்

13. வள்ளலார் கூறியது ....................

அ) யாதும் ஊரே யாவரும் கேளிர்

**ஆ) வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**

இ) உலகத்தைக் குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள்

ஈ) வாழ்க்கை என்பது மற்றவர் மனத்தில் நீ வாழும் வரை

**2. சொற்றொடரில் அமைத்து எழுதுக**

1. மனிதநேயம் 2. உரிமை 3. அமைதி 4. அன்பு செய்தல்

1. மனித நேயம் – எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் **மனிதநேயம்** ஆகும்.
2. உரிமை – உலகக் குழந்தைகள் கல்வி **உரிமை**க்காக கைலாஷ் சத்யார்த்தி பாடுபட்டார்.
3. அமைதி – அன்னை தெரசாவிற்கு **அமைதி**க்கான நோபல் பரிசு கிடைத்தது.
4. அன்பு செய்தல் – எல்லா உயிர்களிடமும் **அன்பு** செய்தல் வேண்டும்.

**3. பொருத்துக**

1. வள்ளலார் - அ) நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்
2. கைலாஷ் சத்யார்த்தி - ஆ) பசிப்பிணி போக்கியவர்
3. அன்னை தெரசா - இ) குழந்தைகள் உரிமைக்குப் பாடுபட்டவர்

**விடை: 1 – ஆ, 2 – இ, 3 – அ**

## 3.2. முடிவில் ஒரு தொடக்கம்

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. ஹிதேந்திரன் வாழ்ந்த ஊர் ................

அ) பெங்களூரு ஆ) மங்களூரு

இ) திருப்பரங்குன்றம் **ஈ) திருக்கழுக்குன்றம்**

2. பொருத்தமற்றதைத் தேர்வு செய்க

நடைபாதையில் கிடக்கும் நெகிழிப் பையை நீங்கள் என்ன செய்வீர்கள் ?

அ) மழைநீர் நிரம்பி கொசுப்புழு ஏற்படலாம் என்று நெகிழியை மூடிய குப்பைத் தொட்டியில் போடுவேன்.

ஆ) நெகிழிப்பையை எடுத்து மட்காக் குப்பைத் தொட்டியில் போடுவேன்.

**இ) யார் வழுக்கி விழுந்தாலென்ன என்று கண்டும் காணாமல் சென்றுவிடுவேன்.**

ஈ) நெகிழிப்பையை மண்ணால் நிரப்பி செடி வளர்க்கப் பயன்படுத்துவேன்.

3. இதயத்தைத் தந்த இளைஞரின் பெற்றோர் ..................

அ) பொறியாளர்கள் ஆ) ஆசிரியர்கள்

**இ) மருத்துவர்கள்** ஈ) வழக்குரைஞர்கள்

4. முறைப்படுத்தப்பட்ட வாக்கியத்தினை எழுதுக

அ) உயர்வினை அன்றுதான் உலகமே அறிந்தது உறுப்புதானத்தின்

ஆ) அன்றுதான் உலகமே அறிந்தது உயிர்வினை உறுப்புதானத்தின்

இ) உயர்வினை உறுப்புதானத்தின் அன்றுதான் உலகமே அறிந்தது

**ஈ) உறுப்புதானத்தின் உயர்வினை அன்றுதான் உலகமே அறிந்தது**

5. ஹிதேந்திரன் .................... அணிந்திருந்தால் தனது உயிரைத் காப்பாற்றியிருக்க முடியும்.

அ) காலுறை **ஆ) தலைக்கவசம்**

இ) சீருடை ஈ) கைக்காப்பு

6. தானமாகக் கொடுக்கப்பட்ட ஹிதேந்திரனின் உறுப்பு ..................

அ) நுரையீரல் ஆ) கண்

**இ) இதயம்** ஈ) கல்லீரல்

7. பொருந்தாததைத் தேர்வு செய்க

ஹிதேந்திரனின் வாழ்விலிருந்து நாம் கற்கும் பாடம்

**அ) சாலையில் வண்டியை வேகமாக இயக்க வேண்டும்.**

ஆ) பிற உயர்களையும் தன்னுயிர் போல் மதிக்க வேண்டும்

இ) வாகனங்களை ஓட்டுவதற்குரிய முக்கிய தகுதி கல்வியறிவு

ஈ) வாகன ஓட்டுநர்கள் சாலைவிதிகளை அலட்சியப்படுத்துக் கூடாது

8. இறைவனின் நன்கொடை நலமான உறுப்புகள். அவற்றைக் காக்க எச்செயல்களைச் செய்ய மாட்டீர்கள்?

அ) நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்தவோ எரிக்கவோ மாட்டேன்

ஆ) நல்ல சத்தான உணவுகளை உட்கொள்வேன்

இ) சாலை விதிகளைப் பின்பற்றி வாகனத்தை இயக்குவேன்

**ஈ) எப்பொழுதும் மது அருந்திக்கொண்டும், புகைபிடித்துக்கொண்டும் இருக்க மாட்டேன்.**

9. பொருந்தமாற்றதைத் தேர்வு செய்க

விறுவிறுப்பான வாகன நெரிசல் மிகுந்த சாலையில் நீங்கள் நடந்து கொண்டிருக்கும் போது இரு சக்கர வாகனத்தில் வரும் சிறுவன் ஒருவன் விபத்திற்கு உள்ளாகிறான்.

உடனே நீங்கள் செயல்படும் முறை –

அ) உடனடியாகத் தேவைப்படும் முதலுதவியைச் செய்வேன்

ஆ) அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வேன்

இ) அவசர ஊர்தியை அழைத்துச் சிறுவனைக் காப்பாற்ற நடவடிக்கை எடுப்பேன்.

**ஈ) சிறுவனிடம் வாகனத்தைக் கொடுத்த பெற்றோரைக் கண்டிப்பதற்காக உதவி செய்ய மாட்டேன்.**

10. சிறுமியை அம்மா தோழிகளுடன் விளையாட அனுமதிக்காததற்குக் காரணம்

அ) அதிக நேரம் விளையாடியதால்

**ஆ) இதயம் பலவீனமாக இருந்ததால்**

இ) விளையாடும் இடம் தொலையில் இருந்ததால்

ஈ) இரவு நேரமாக இருந்ததால்

11. ஹிதேந்திரன் பெற்றோர் **அசோகன், புஷ்பாஞ்சலி** என்ற மருத்துவத் தம்பதியினர் ஆவர்

## 3.3. அணி இலக்கணம்

**முக்கியக் குறிப்புகள்**

- உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் இயல்பு நவிற்சி அணியாகும்.
- ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது உயர்வு நவிற்சி அணி ஆகும்.
- கவிஞர் தங்கள் கற்பனைத் திறனாலும், புலமையாலும் தாங்கள் இயற்றும் பாடல்களில் அழகைச் சேர்க்கின்றனர். இதனை விளக்குவது அணி இலக்கணம் ஆகும்.
- அணி என்பதற்கு அழகு என்று பொருள்

**1. கலைச்சொல் அறிவோம்**

| | | |
|---|---|---|
| மனிதநேயம் | - | Humanity |
| கருணை | - | Mercy |
| உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை | - | Transplantation |
| நோபல் பரிசு | - | Nobel prize |
| சரக்குந்து | - | Lorry |

**2. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. நவிற்சி என்பதன் பொருள் ...................

**அ) கூறுதல்** ஆ) எழுதுதல்

இ) கவனித்தல் ஈ) எண்ணுதல்

2. அணி என்பதன் பொருள் ........................

அ) மாலை ஆ) காலை

இ) வளையல் **ஈ) அழகு**

3. உயர்வு நவிற்சி அணி என்பது .................

அ) இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின்மீது கவிஞர் தம் குறிப்பை ஏற்றிக் கூறுவது

ஆ) ஒரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி வேறுப்படுத்திக் காட்டுவது

இ) ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது

**ஈ) ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது**

4. இயல்பு நவிற்சி அணி என்பது .....................

அ) ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புமையைக் கூறுவது

ஆ) ஒரு பொருளின் இயல்பைப் புகழ்வது போல் இகழ்வது

**இ) ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது**

ஈ) ஒரு பொருளின் இயல்பை மிகைப்படுத்தி அழகுடன் கூறுவது

5. இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ள தொடர் ..................

அ) கரையேறி மீன் விளையாடும் காவிரி நாடு

ஆ) வான் புகழ் கொண்ட தமிழ்நாடு

இ) காற்றிலும் வேகமாகக் குதிரை பாய்ந்து ஓடிற்று

**ஈ) மயில் அழகாக ஆடுகின்றது**

6. உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ள தொடர் .................

அ) உள்ளம் மகிழ்ந்து பாராட்டினர்

ஆ) தன்னையே மறந்து நின்றான்

இ) காந்தியடிகள் நேர்மையானவர்

**ஈ) வான் உயர்ந்த மலை**